# தேசிய நலனோக்கு ஒழுங்கு முறை
# ஆய்வறிக்கை
# ஸ்ரீ லங்கா 2003

டிரான்ஸ்பேரன்ஸி
இன்டர்நெஷனல்
ஸ்ரீ லங்கா
2005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல்

## தேசிய நலனோக்கு ஒழுங்கு முறை

## National Integrity Systems Country Study Report

டிரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல்
ஆய்வறிக்கை

ஸ்ரீ லங்கா 2003

டிரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல்
ஸ்ரீ லங்கா - 2005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் இலங்கை பதிப்பு – 2005

அச்சுப்பதிப்பு – Kapila Advertising
B. 15, G3, Soysa Pura,
Moratuwa.
Tel : 0112-636017
0777-548718
E-mail : kapila_patirana@yahoo.com

ஐஎஸ்பிஎன் 955 – 1281 – 01 – 2

ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நஷனல் ஸ்ரீ லங்கா

(இந்த அறிக்கையின் மூலப்பிரதி ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்டது)

முன்னணி ஆலோசகர்கள்
அலன்டொயிக் ஸ்டெப்னி மெக்ஐவர்
மோசடி முகாமைத்துவ கல்விப் பிரிவு
டீசயிட் வியாபாரப் பாடசாலை
**T.S.I. 3 BA**
ஐக்கிய ராச்சியம்

**Lead Consultants**
Alan Doig and Stephanie McIvor
Fraud Management Studies Unit
Tesside Business School
Middlesbrough
TSI 3BA
UK

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| ★ | குறியீடுகள் | ii |
| ★ | உசாத்துணையாளர்கள் | iii |
| ★ | நிறைவேற்று அறிக்கை | 01 |
| ★ | நாட்டின் பார்வையில் | 05 |
| ★ | ஊழல் சுயகோவை | 09 |
| ★ | தேசிய நலனோக்கு ஒழுங்குமுறை | 15 |
| 1. | நிறைவேற்று | 15 |
| 2. | பாராளுமன்றம் | 16 |
| 3. | அரசியல் கட்சிகள் | 18 |
| 4. | தேர்தல்கள் ஆணைக்குழு | 18 |
| 5. | உயர்கணக்காய்வு திணைக்களம் | 19 |
| 6. | நீதித்துறை | 21 |
| 7. | சிவில் சேவை | 23 |
| 8. | பொலிசாரும் பாதுகாப்பும் | 24 |
| 9. | பொதுப்பாதுகாப்பு | 26 |
| 10. | குறைகேள் அதிகாரி (ஒம்புட்ஸ்மன்) | 27 |
| 11. | புலனாய்வும் / புலனாய்வு முகவர்களும் | 28 |
| 12. | ஊடகம் | 30 |
| 13. | சிவில் சமூகம் | 31 |
| 14. | பிராந்திய மற்றும் உள்ளூராட்சி | 32 |
| ★ | ஊழலுக்கு எதிரான செயற்பாடுகள் | 33 |
| ★ | முக்கிய விலைகளுக்கான கலந்துரையாடல் | 37 |
| 1. | தேசிய நலனோக்கு ஒழுங்கு | 37 |
| 2. | அரசாங்கத்தினதும் உதவி வழங்கும் நாடுகளினதும் வினைத்திறன் | 40 |
| 3. | முன்னுரிமையும் சிபார்சுகளும் | 42 |
| | References | 69 |
| | Legislation | 75 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறியீடுகள்

| | | |
|---|---|---|
| ADB | :- | ஆசிய அபிவிருத்தி வங்கி . |
| ARC | :- | நிர்வாக மறுசீரமைப்பு குழு. |
| BOI | :- | முதலீட்டு சபை. |
| CC | :- | அரசியலமைப்பு சபை. |
| CIABOC | :- | இலஞ்ச மற்றும் ஊழல் தொடர்பாக ஆராயும் ஆணைக்குழு . |
| COPA | :- | பொதுக்கணக்காய்வுக் குழு. |
| COIE | :- | பொது நிறுவன ஆய்வுக்குழு ( பாராளுமன்ற நிலையியற் குழு ) |
| DIG | :- | பிரதி பொலிஸ் மா அதிபர். |
| FIA | :- | சுதந்திர தகவல் சட்டம். |
| GOSL | :- | இலங்கை அரசு. |
| HRC | :- | மனித உரிமைகள் ஆணைக்குழு . |
| JSE | :- | நீதிச்சேவை ஆணைக்குழு. |
| MOU | :- | புரிந்துணர்வு ஒப்பந்தம் . |
| LMD | :- | இலங்கையின் மாதாந்த சஞ்சிகை.( வியாபார சஞ்சிகை ) |
| LTTE | :- | தமிழீழ விடுதலைப் புலிகள். |
| MOFP | :- | நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு. |
| MP | :- | பாராளுமன்ற உறுப்பினர். |
| NGO | :- | அரச சார்பற்ற நிறுவனம். |
| ND | :- | திகதியிடப்படாதவை. |
| NPC | :- | தேசிய பொலிஸ் ஆணைக்குழு. |
| PA | :- | பொதுஜன ஐக்கிய முன்னனி(அரசியல் கட்சிகளின்கூட்டு) |
| FAFFREL | :- | சுதந்திர மற்றும் முறையான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் . |
| PERC | :- | பொது நிர்வன மறுசீரமைப்பு ஆணைக்குழு . |
| PM | :- | பிரதம மந்திரி . |
| SCM | :- | உயர் நீதிமன்ற அறிக்கை . |
| SCFR | :- | உயர் நீதிமன்ற அடிப்படை உரிமைகள். |
| SIHRN | :- | உடனடி மனிதாபிமான புனருத்தாரன தேவைகளுக்கான செயலகம். |
| SLFP | :- | இலங்கை சுதந்திர கட்சி (அரசியற் கட்சி ) |
| SLR | :- | இலங்கை சட்ட அறிக்கைகள். |
| UNF | :- | ஐக்கிய தேசிய முன்னனி (அரசியல் கட்சிகளின்கூட்டு) |
| UNP | :- | ஐக்கிய தேசிய கட்சி. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணையாளர்கள்

| | |
|---|---|
| திரு. ரஞ்சித் அபேசூரிய | தலைவர் தேசிய பொலிஸ் ஆணைக்குழு |
| திரு. டிப்தி அமரதுங்க | நீதி சேவை ஆணைக்குழு |
| திரு. தம்பிக்க அமரசிங்க | நிர்வாக மறுசீரமைப்பு ஆணைக்குழு |
| திரு. T. E. ஆனந்தராஜா | பொலிஸ் மாஅதிபர் |
| திரு. நியன்சி அரசகுலரட்ண | உதவி சொலிசிஸ்டர் ஜெனரல் & முன்னாள் பணிப்பாளர் நாயகம் (CIABOC) |
| திரு. ஏ.கே. சந்திரகாந்த | பிரதி பணிப்பாளர் நாயகம் சட்டம் (CIABOC) |
| திரு. கே. தர்மகுலராஜா | பதிவாளர் நீதவான் நீதிமன்றம் திருகோணமலை |
| திரு. எஜிமா | J.P.I.C |
| திரு. சந்திரா பெர்னான்டோ | சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் (ஆய்வு) |
| திரு. கிங்சிலி பெர்னான்டோ | PAFREL |
| திரு. ஆர்.கே.எம்.எச். பெர்னான்டோ | இளைப்பாறிய பணிப்பாளர் நாயகம் (திறைசேரி) |
| திரு. பெர்னான்டோ | பிரதி கட்டுப்பாட்டாளர் இலங்கை சுங்கத்திணைக்களம் |
| திரு. ஹரோல்ட் | பிரதி பணிப்பாளர் நாயகம் |
| திரு. பீற்றர் ஹரோல்ட் | உலக வங்கி இலங்கை பணிப்பாளர் |
| திரு. செல்வின் இரேனஸ் | சிறான் நிறைவேற்று பணிப்பாளர் |
| திரு. சந்திரா ஜெயதிலக்க | செயலாளர் நீதிச்சேவை ஆணைக்குழு |
| திரு. சரத் ஜெயதிலக்க | கட்டுப்பாட்டாளர் இலங்கை சுங்கத்திணைக்களம் |
| மேன்மைதகு கே. சி. கமலசபேசன் | சட்டமாஅதிபர் |
| திரு. செனரத் கப்புகொட்டுவ | பொதுச்செயலாளர் ஐ.தே.க |
| திரு. எஸ்.சி. மாயதுன்ன | கணக்காய்வாளர் நாயகம் |
| திரு. துஸ்யந்த மென்டிஸ் | I.C.E.S கண்டி |
| திரு. டிக்சன் நிலவீர | நிர்வாக மறு சீரமைப்பு ஆணைக்குழு |
| திரு. எம். எஸ். எம். நியாஸ் | பதிவாளர் மாவட்ட நீதிமன்றம் திருகோணமலை |
| திரு. சுசில் பிரேம் ஜெயந்த | பாராளமன்ற உறுப்பினர் (பொ.ஐ.ம.மு) |
| திரு. புலித்தேவன் | பணிப்பாளர் எல்.ரீ.ரீ சமாதான செயலகம் கிளிநொச்சி |
| திரு. ரெங்கராஜா | பிரதம செயலாளர் வடகிழக்கு மாகாணம் |
| திர. பியசேன ரனசிங்க | பணிப்பாளர் நாயகம் (CIABOC) |
| திரு. ராசநாயகம் | பிரதேச செயலாளர் கிளிநொச்சி |
| திருமதி. ஜூலிடா ராசையா | நிதி முகாமைத்துவ சிறப்பு நிபுணர், உலகவங்கி |
| திரு. கெல் ரொயாமா | பிரதிநிதி J.B.I.C |
| மேன்மைதகு சரத் என் சில்வா | பிரதம நீதியரசர் |
| திரு. ஏ.டி சோமதாச | நிர்வாக உத்தியோகத்தர் ஒம்புட்ஸ்மன் காரியாலயம் |
| திரு. எஸ். எஸ். விஜயரட்ண | அரசியல் சபை உறுப்பினர் |
| திரு. மேவின் விஜயசேகர | கட்டுப்பாட்டாளர் குடிவரவு குடியகல்வு |
| செல்வி. பிரியாணி விஜயசேகர | உதவிச்செயலாளர் நாயகம் பாராளுமன்றம் |
| திரு. விஜயவர்த்தன | கட்டுப்பாட்டாளர் சட்டமறுசீரமைப்பு திட்டம் |
| திருமதி. மிரியம் வித்தாரன | பாதுகாப்புபிரிவு உலகவங்கி |
| திரு. றொட்னி வின்ரகாட் | தலைவர் பொதுசேவைகள் ஆணைக்குழு |
| திரு. ஸ்வேக்லிச் | பிரதி பணிப்பாளர் ஆசிய அபிவிருத்தி வங்கி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கேள்விக்கொத்து தேசிய நலனோக்கு ஒழுங்குமுறை நாட்டின் ஆய்வுமுறை அறிக்கை 2003 ஸ்ரீலங்காவின் ஒரு பகுதியாகும்.

இந்த அறிக்கை இலங்கை ஊழல் எதிர்ப்பு மதிப்பீட்டின் அடிப்படையில் 2003 இல் நிலை நிறுத்தியதாகும்.

இந்த அறிக்கையை எழுதும்போது இலங்கையில் ஏப்ரல் 2ஆம் திகதி 2004 அன்று பாராளுமன்றத் தேர்தல்கள் நடைபெற்று ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் தோல்வியுற்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் சிறுபான்மை பலத்தில் ஆட்சிபீடமேறியது.

இந்த தேர்தலுக்கு முன் பாராளுமன்றம் 7ஆம் திகதி பெப்ரவரி மாதம் 2004 இல் கலைக்கப்பட்டதனால் பாராளுமன்றத்தால் முன்னெடுக்கப்பட்ட சகல விடயங்களும் காலவதியாகின.

எனினும் 2003 இல் நிறுத்தப்பட்ட (a) சமாதான பேச்சுவார்த்தைகள் மீள தொடங்கப்பட்டதுடன் (b) பாராளுமன்றத்தில் அரசு பெரும்பான்மையைப் பெற்றுக்கொண்டது.

**அறிக்கை உரிமையாளர்**

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

**எழுதியவர்**

M.S. லியோனி சொலமன், ஆய்வு ஆலோசனையாளர்

**மீளாய்வு செய்தல்**

Dr. பாக்கியசோதி சரவணமுத்து (மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம்)
திரு. J.C. வெலியமுன (டிரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஸஷனல் ஸ்ரீலங்கா)
திரு. அசங்க வெலிகல்ல (மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்)

**Transparency International**

**© 2004 Transparency International**

Transparency International Secretariat
Otto-Suhr-Allee 97-99. 10585 Berilin,
Germany.
*http:/www.transparency.org*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவேற்று அறிக்கை.

இலங்கையில் ஊழல் முற்றி பழுத்து விட்டதாக மக்கள் பரந்தளவில் உணர்கின்றார்கள் .எனினும், அரசியல் வாதிகளாலோ அல்லது பொது சேவையில் உள்ளவர்களாலோ ஊழலை தடுப்பதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை .

சர்வதேச பார்வையில் ஊழலின் வாய்க்கால் இலங்கை எனக் குறிப்பிடினும் ,மக்கள் தேசிய நலனோக்கிற்கு ஆதரவான அரசியல் வாதிகளின் பங்களிப்பு சமமாக இருக்கின்றது .

எவ்வகையிலும் துலாம்பரத்திலும் ,பொறுப்பு கூறலிலும் எமக்கு அவசியம் உள்ளது .பிரதம மந்திரி 2003 ம் ஆண்டுஉதவி வழங்கும் நாடுகளின் மத்தியில் ஆற்றிய உரை இதற்கு சான்றாகும் எனினும் , இது அடித்தளவமைப்பில் மாற்றம் பெற வேண்டும் ஆரம்பக் கட்டமாக கணக்காய்வாளர் நாயகம் திணைக்களம் போன்றவற்றில் பரிசீலனையும் ,மீள் பரிசீலனையும் அவசியமாகவுள்ளது .COPA / COPE மற்றும் CIABOC போன்ற தாபனங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. உதாரணத்திற்கு பொது நிர்வாக துறையில் பல்வேறு நிலைமைகளுக்கு மத்தியிலும் அரச நிறுவனங்கள் மற்றும் பொது நிறுவனங்கள் தங்களின் வருடாந்த கணக்கு அறிக்கையை பல ஆண்டுகளின் பின்னரே கணக்காய்வாளர் திணைக்களத்திற்கு வழங்குகின்றனர் . சிரமமான இந்த நிலையில் கணக்காய்வாளர் திணைக்களத்தில் நேர முறை இல்லாததினால் .COPA / COPE போன்றவற்றின்.செயற்கை சூழல் மந்தக் கதியை ஏற்படுத்துகின்றது .கூட்டங்கள் பாராளுமன்ற உறுப்பினர்களின் மிகக்குறைந்த வரவு காரணமாக பாதிப்படைகின்றது. CIABOC யிற்கும் இந்த வகையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது .இதனது இலக்கு வெகு குறைந்த அளவே அடையப்பெற்றுள்ளது . இப்போதும் இது முறையான சட்ட வரையறைக்கு உட்படாததால் செயலற்று உள்ளது. அரசினால் வீதந்துரைக்கப்பட்டுள்ள அரசின் நிர்வாக மறுசீரமைப்பும் , கணனிமயப்படுத்தலும். ஒரு வித நம்பிக்கையை ஏற்படுத்தி இருப்பினும் துர்திஷ்டவசமாக ஊழல் வெளிக்கொணரப்படாமையின் காரணமாக ஊழல் முகவர்களை முற்றாக இல்லாதொழிக்க முடியாதுள்ளது . இலங்கையில் மூன்று விதமான ஊழல்கள் இடம் பெறுகின்றன .

1. அரசியல் நியமனங்களில் உறவுச்சலுகையும் ,பரம்பரை ஆதிக்கமும் .
2. உயர்தர பற்றுச்சீட்டு ஊழல் .முக்கியமாக டெண்டர் நடைமுறையிலும் வியாபார நடவடிக்கைகளிலும்.(விசேடமாக வெளி நாட்டு முதலீட்டாளர்களால் .
3. சிறிய பெறுமதியிலான லஞ்ச கை மாற்றங்கள் அதிகளவில் இடம் பெறுதல் ,பொதுச் சேவையை துரிதப்படுத்துவதற்காக .

இவ்வகையான ,ஊழல்கள் பொதுத்துறை ஊழியர்களின் மிகக் குறைந்த வேதனம் காரணமாக இடம் பெறுகிறது .இது மேலிருந்து கீழாக பல வழிகளிலும் அரசின் வினைத்திறன் , இன்மை காரணமாக இடம் பெற்று வருகின்றது . மேலும் ,ஆணைக்குழு கட்டமைப்பும், தனியார்படுத்தல் வழிமுறைகளிலும் அழுத்தம் சம்பந்தமான பாதுகாப்பு ஏற்பாடுகளும் ,சுதந்திர வர்த்தக நடவடிக்கைகளும் இத்தகைய ஊழல்கள் CIABOC ன் கவனத்தில் இருந்து தப்பிவிடுகின்றன.

1978 ம் ஆண்டின் அரசியல் யாப்பின் தேர்தல் முறையில் அரசியல் வாதிகளின் ஒருங்கிணைப்புடனான ,பொருளாதார பக்கப்பலத்தை வழங்குவாதாகவும் அரசியல் வாதிகளின் பிரச்சாரத்திற்கும் வாக்கு வங்கியை தக்க வைப்பதற்குமாக ஊழல்கள் இடம்பெறுகின்றது.இன்று எல்லா நாடுகளிலும் அரசியல். வியாபாரமாகவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாகவும் ,மிகவும் அற்பமாகவே அது மக்களின் சேவையாக இடம் பெறுகின்றது.

## மேலும், ஊழல் எத்தகைய வடிவில் இலங்கைக்கு தரப்படுகின்றது .

❖ புதிதாக பொது வேலைத் திட்ட அடிப்படையில் இலங்கையை மீளக் கட்டியெழுப்பல் என்ற இலங்கை அரசின் முன்மொழிவுக்கும் சமாதான முயற்சிக்கும் பிரதி பலனாக வழங்க அறிவிக்கப்பட்ட (டோக்யோ நிதி) U S $ 4.5 பில்லியன் முலம் பாதிக்கப்பட்ட பிரதேசத்தினையும் தெற்கினையும் மீளக்கட்டியெழுப்புதலும் அபிவிருத்தி செய்தலும்..

❖ தனியார் மயப்படுத்தல் ,இது அரசுக்கு சொந்தமான பாரிய நிறுவனங்கள் ,பொது வசதிகள், ,வங்கிகள் ,மற்றும் பெருந்தோட்ட நிலங்கள் ( உயர்ரக பற்றுச்சீட்டு அடிப்படையில் இதில் ஊழல் நிகழ்கிறது.)

❖ தொடர்கின்ற சுதந்திர தன்மை வரி விலக்கீடு ,கோட்டாமுறை தண்டனை ,வரி நீக்கம் ,மற்றும். பல அரச அங்கீகாரத்துடனானவை .

❖ பரம்பரையிலான பொதுத்துறை நிர்வாக சீர்கேடுகள் .

## ஊழல் தடுப்பு நடவடிக்கைக்காக உத்தேசிக்கப்பட்டுள்ள சில நடைமுறைகள்

❖ தகவல் சுதந்திரம் வழங்கப்படுதல் ,பொது மக்களுக்கு தகவல் சுதந்திரத்திற்கான பாதுகாப்பினை வழங்கி ஊக்குவித்தல் .இவை பொதுத்துறை ஊழியர்களின் பொறுப்புக்கள் , சொத்துக்கள் தொடர்பில் மக்களை விழிப்படையச் செய்யும் .

❖ பொறுப்பு கூற வேண்டியவர்கள் தங்கள் வினைத்திறனை அதிகரிப்பதற்கும் கணக்காய்வாளர் திணைக்களம் உட்பட COPA ,COPE ,CIABOC மற்றும் PSL , NPC ஆகியவை .தங்களுடைய அதிகாரத்தினை பக்கச்சார்பின்றி பாவிப்பதுடன் திறமையற்ற நிர்வாகத்தை மறுசீரமைக்கும் அதே வேளை பொது நிர்வாக அரசியல் நியமனம் அரசின் ஏனைய நடவடிக்கைகளை மட்டுப்படுத்தல் .

❖ அரசியல் வாதிகளின் பொறுப்புக்களை உறுதிப்படுத்தும் அரசியல் கட்சிகளின் நிதி முதலீடு சம்பந்தமாகவும் ,அரசியல் வாதிகளின் வருமான செலவீடு சம்பந்தமான பகிரங்கப்படுத்தும் ,தேர்தல். சட்டம் சம்பந்தமான மறுசீரமைப்பும் , தேர்தல்கள் முறையாக்கப்படுதலும் .இவை தற்போதைய நிலையில் மிகவும் குறைவாக உள்ளன .

❖ டெண்டர் நடைமுறை சீராக்கப்படுவதுடன் ,துஷ்பிரயோகம் தவிர்க்கப்படுவதுடன் பொதுப் பாதுகாப்பும் மதிப்பீடலும் .பொது மக்களுக்கு உரித்தாகும் .

❖ ஊழலின் தன்மைகள் பலவற்றில் இருந்து பாதுகாப்பதற்கான மேற்பார்வை அதிகரிக்கும் .அரசின் பொது மூலதனம் சம்பந்தமான முக்கிய பொறுப்பை துலாம்பரப்படுத்துவதுடன், இதே வேளை இலங்கை மத்திய வங்கியின் கைமாற்றல்கள் சம்பந்தமான முறையான மேற்பார்வை காரணமாக மக்களை விழிப்புணர்வு அடையச்செய்வதுடன் ஊழல் தடுப்பில் மக்களை பங்குபெறச்செய்யும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய புனர்நிர்மான வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுமாயின் அது ஊழலுக்கு எதிரானதாக மாறிவிடும்.சுதந்திர ஊழல் எதிர்ப்பிற்கான முகவர் உருவாக்கப்படின் அது இலங்கையின் ஊழலை குறைப்பதற்கான ஒருவிதமான முன்னேற்பாடாகும் .

தற்போதைய நடைமுறையில் உள்ள குறைபாடுகளின் காரணமாக ஆதாயம் அடையும் அரசியல் வாதிகள், பொது நிர்வாக உயர் அதிகாரிகள் ,வியாபார சமூகங்கள் உடனடியாக சுதந்திரமாக செயற்படுவதற்கான தேவைப்பாடுகள் உள்ளன.மேலதிகமாக பொது கட்டமைப்பு வசதிகளும் பொது பாதுகாப்பு நடைமுறையிலும் மேலும் இறுக்கம் செய்வதற்கான உடனடி ஆய்வுகள் அவசியமாகின்றன . சமாதான முயற்சிகளில் மக்களின் பார்வையில் ஊழலுக்கு எதிராக மிகவும் குறைவான தாக்கமே உள்ளது .எவ்வாறெனினும் மக்களுக்கு ஊழலை குறைப்பதற்கான தேவை உள்ளது .ஆகவே தான் மறுசீரமைப்பு உத்தேசிக்கப்பட்டுள்ளது .

மேலும் இதற்கானஅழுத்தங்கள் அதிகரித்துள்ளதன் காரணமாக சில பத்திரிக்கைகள் ஊழல். குற்றச்சாட்டுக்களை வெளிக்கொனர்கின்றன. ஊழல் பற்றிய விடயங்களை சில அரச சார்பற்ற நிறுவனங்கள் அரசியல் வாதிகளுக்கும் சிரேஷ்ட பங்குதாரர்களுக்கும் தெரிவிக்கின்றன.அது எமது அரசியற் கலாசாரத்தின் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது .UNP கடந்த ஆகஸ்டின் பிரதான எதிர் கட்சிகளிடையையே பொதுவான ஒழுக்க நெறிக் கோவையொன்றை ஏற்படுத்த முயற்சி செய்தது . எனினும் அம் முயற்சி வெற்றி பெறாததால் தனது சொந்த கட்சிக்குள்ளேயே இத்தகைய நடைமுறை ஒன்றை ஏற்பாடு செய்து தனது கட்சி அங்கத்தவர்களிடம் காணப்படுகின்ற ஊழல்.சம்பந்தப்பட்ட விடயங்கள் மற்றும் பாதாளக் கொலைகள் ,பல்வேறு விதமான தீய செயல்கள், என்பவற்றை கட்டுப்படுத்தியது .எனினும் ,சில பிரதான எதிர் கட்சிகள் இத்தகைய ஒழுக்க நெறி அவசியம் என்பதால் இத்தகைய புனர் நிர்மான வேலைத்திட்டம் அவசரமாக நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் பார்வையில.

இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ள இலங்கைத் தீவு 19 இலட்சத்திற்கும் அதிகமான சனத்தொகையை கொண்டதாக அதனது சுதந்திரத்திற்கு பின்னதான மூன்றாவது அரசியலமைப்பின் வழியாக வளர்ச்சியை கொண்டுள்ள நாடு ஆகும். அதனது உத்தேசிக்கப்பட்டுள்ள 4 வது அரசியலமைப்பானது சமஷ்டி முறையினை அடிப்படையாக கொண்ட அரசியலமைப்பினை உருவாக்குவதாக உள்ளது.[1] தற்போது பொதுக்கடன் மீளழிப்பானது அரசாங்க வரி அறவீடுகளில் புதிய வழிமுறையைக் கொண்டுள்ளது.

இன முரண்பாடானது இலங்கையின் அரசுக்கும் தமிழ் சமூகத்திற்கும் இடையிலான யுத்தமாக்கப்பட்டுள்ளதால் வடக்கு,கிழக்கு பகுதிகள் முன் எப்போது இல்லாதவறான யுத்தப்பிரதேசமாக்கப்பட்டுள்ளது .இவ் யுத்தமானது மக்களையும் , வியாபாரங்களையும் , அடிப்படை வசதிகளையும் இப்பிரதேசங்களில் மிகவும் சிதறடித்துள்ளது . யுத்தமுற்றுகையானது சர்வதேச விமான நிலையம் ,மத்திய வங்கி ,எண்ணைய் தாங்கிகளில் ஏற்படுத்திய பாரிய தாக்கமானது பொருளாதாரத்தை சீரற்றதாக்கியுள்ளது .வியாபார ரகசியங்கள் ,சுற்றுலாத்றை வீழ்ச்சி சர்வதேச பண்டபரிமாற்ற காப்புறுதி போன்றவை ஏற்றுமதி துறையில் மட்டும் தாக்கத்தை ஏற்படுத்தாது மக்களின் அன்றாட வாழ்க்கைச் செலவீனத்திலும் பாதகத்தை ஏற்படுத்தியுள்ளது .இலங்கையின் அத்தியாவசிய தேவைகளான அரசி ,மா ,எண்ணெய் போன்றவற்றின் இறக்குமதியால் வாழ்க்கைச் செலவு பாதிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் இன கூட்டு அமைப்பானது 2001 ம் ஆண்டு [2] சனத்தொகை மதிப்பீட்டின் அடிப்படையில். நாலு இனங்களைக் மையமாகக் கொண்ட தொகையாகும். அதன்படி 81.9 % வீத சிங்களவரும் , 9.4% தமிழரும் , 8.4 % முஸ்லிம்களும் மலாயரும் , 0.3 % ஏனையோரும் உள்ளனர் .என கணிப்பிடுகிறது .பிரதான நான்கு மதங்களாக பௌத்தம் 77 % ,இஸ்லாம் 9 % ,இந்து 8 % , கிறிஸ்தவம் 6 % வீதமாக உள்ளது .

1956 ம் ஆண்டின் சிங்கள மொழிச்சட்டம் இலங்கையின் ஆரம்பகால இன முரண்பாட்டினை தோற்றுவித்தது .1972 ம் ஆண்டின் இரண்டாவது அரசியலமைப்பு பிரித்தானிய முடிக்குரிய அதிகாரங்களைக் கைவிட்டு குடியரசு நாடாக பிரகடனப்படுத்தப்பட்டது .இதன்படி அமைச்சரவை அதிக அதிகாரங்கள் கொண்டதாகவும் ,பொதுச்சேவை நியமனங்கள் வழங்கக் கூடியதாகவும் , தேசிய மயமாக்கலையும் ,அரச உடமை பொது நிறுவனங்களையும் உருவாக்க கூடியதாக இருந்தது . அது மட்டுமல்லாது ,1972 ம் ஆண்டின் அரசியல் யாப்பில் பௌத்தம் இலங்கையின் மதமாக பிரகடனப்படுத்தப்பட்டு சிங்களம் அரசகரும மொழியாக்கப்பட்டது .

இதன் பிறகு உருவாக்கப்பட்ட 1978 ம் ஆண்டின் அரசியல் யாப்பு நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதியை தெரிவு செய்ய கூடியதாகவும் பாராளுமன்றத்தையும் ,உள்ளூராட்சி சபையுடன் கூடிய அரசை உருவாக்க கூடியதாகவும் காணப்பட்டது .தேர்தல் முறையானது தனித் தொகுதி தெரிவு முறையிலிருந்து விகிதாசார பிரதிநிதித்துவ முறைக்கு மாற்றப்பட்டது .மேலதிகமாக இடைத்தேர்தல்கள் அகற்றப்பட்டன.தேர்தல் தொகுதிகளின் அளவுகள் மாற்றம் பெற்றன. 160 தனித் தொகுதிகளாக இருந்து 22 தேர்தல் மாவட்டங்களாக மாற்றப்பட்டன.இதன் காரணமாக பாராளுமன்ற அபேட்சகர் தொகை செலவு அதிகரிக்கப்பட்டது .

யுத்தம் காரணமாக 1987 அதிகாரப்பகிர்வு ஏற்பாட்டின் கீழ் 13 வது அரசியல் அமைப்பு திருத்த அடிப்படையில் மாகாண அதிகாரப்பகிர்வு ஏற்படுத்தப்பட்டது .இரண்டு வருடங்களின் பின் 16 வது அரசியல் அமைப்பு திருத்தம் மூலமாக சிங்களமும் தமிழும் அரசகரும மொழியாக்கப்பட்டதுடன் ஆங்கில இணைப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழியாக்கப்பட்டது .

நிர்வாக ரீதியாக பல்வேறு வகையான அரச சேவைகள் மத்திய அரசு மூலமாகவே செயற்படுத்தப்படுகின்றன .திறைசேரி பொலிஸ் ,இராணுவம் ,நீதித்துறை ,இரயில்வே திணைக்களம் என்பன மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ளது .தனியார்த்துறை ,சிறிய அளவில் மத்தியமயப்படுத்தப்பட்டுள்ளது .51 அரசியல் கட்சிகளும் பல்வேறு ஊடகத்துறைகளும் தேசிய அளவில் மற்றும் மாகாண அளவில் செயற்படுத்தப்படுகின்றது .

09 மாகாணங்களுக்கும் பொதுவாக அதிகார பரவலாக்கம்[3] அமுல்படுத்துவது வினைத்திறனாக இல்லை என்பதோடு தேசிய அரசாங்கத்தின் கட்டுப்பாடு உள்ளது .

2001 ம் ஆண்டு அக்டோபர் 03 ம் திகதி கொண்டுவரப்பட்ட 17வது அரசியலமைப்பு திருத்தத்திற்கு அமைவாக அரசியலமைப்பு சபையும் ஏழு ஆணைக்குழுக்களும்[4] அரசியல் தலையீட்டை நீக்குவதற்கும் பொது விடயங்களில் பாரபட்சமற்ற தன்மையை உருவாக்குவதற்குமாக ஏற்படுத்தப்பட்டது .2003 ஆகஸ்ட் அளவில் 17 வது அரசியலமைப்பில் கோரப்பட்டவாறு பின்வரும். 05 ஆணைக்குழுக்கள்[5] நிறுவப்பட்டன .

| ஆணைக்குழுவின் பெயர் | அந்தஸ்து |
|---|---|
| 1.தேர்தல் ஆணைக்குழு | நியமிக்கப்படவில்லை . ( அரசியலமைப்பு சபையில் பிரேரிக்கப்பட்டு. இருப்பினும் ஜனாதிபதியால் நியமிக்கப்படவில்லை) |
| 2.பொதுச்சேவை ஆணைக்குழு | 2002 நடுப்பகுதியிலிருந்து இயங்குகிறது . |
| 3.தேசிய பொலிஸ் ஆணைக்குழு | 2002 நடுப்பகுதியிலிருந்து இயங்குகிறது . |
| 4.மனித உரிமை ஆணைக்குழு | இயங்குகிறது. |
| 5.இலஞ்ச மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு | 2003 ல் மரணமடைந்த ஆணையாளருக்கு பதிலாக புதிய நியமனம் அரசியலமைப்பு சபையால் நியமிக்கப்பட்டு இருப்பினும் ஜனாதிபதியால் நியமிக்கப்படவில்லை . |

பொருளாதார ரீதியாக இலங்கை 1960 ம் ஆண்டு நிதியியலின் ஊடாக இறக்குமதி துறையை மானியமாக[6] தொடர ஆரம்பித்தது .இந்நிலையிலேயே இலங்கையில் ஊழல் மெல்லியதாக பரவத் தொடங்கியதாக கருதலாம் .

அவசியமானதும் ,மாற்று ரீதியற்ற அவசிய உணவு வகைகளும் இறக்குமதி செய்யப்பட்டதும், கொள்வனவு செய்ய தொடங்கியது மூலமே பொது நிறுவனங்களிற்கான வலையமைப்பு இணைக்கப்பட்டதன் காரணமாக இவை தமது பங்குகளை தரகு எனும் ரீதியில் உழைக்கத் தொடங்கின .எவ்வாறெனினும் வாழ்க்கைத்தரமானது நாகரீக தன்மையாதலால் ,அரசின் சம்பளம் இவற்றை விட கவர்ச்சி அற்ற நிலையே ஊழல் நிலை தலைத்தூக்கியதற்கு சான்றாகின்றது .இந்நிலையில். இலங்கை விமான சேவைக்கும் – எமிரேட்ஸ் விமான சேவைக்கும் இடையிலான ஒப்பந்தம் மீள் அமைக்கப்படும் போது காணி – விவசாய அமைச்சர் திரு.ராஜித சேனாரத்ன ஊழல் மற்றும் ,அதிகார துஷ்பிரயோகம் பற்றி அமைச்சரவைக்கும் பங்கு இருப்பதை கண்டு கவலைப்படுவதாக குறிப்பிடுகின்றார் .சண்டே லீடர் பத்திரிகை சந்திரிக்காவின் அரசில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ள ஊழலை வெளிப்படுத்தியுள்ளது .அதனால் எங்கள் அரசாங்கத்தின் செயற்பாட்டை வெளிப்படுத்த வேண்டியதாயுள்ளது . தொழில் வல்லுனர்களின் இக்கூற்றில் நான் உடன்படவில்லை ,தொழில் வல்லுனர்கள் எங்கள் அரசாங்கமே அதிக ஊழல் நிறைந்தது என குறிப்பிடுகின்றார்கள் அவர்களின் இந்தப்பணி பற்றி நான் எதுவும் கூறமாட்டேன் .நான் சந்திரிக்காவின் அரசாங்கத்தையே மிகவும் மோசமானது என கருதுவதோடு எங்களது பங்களிப்பும் மிகவும் அசாதாரமானது அல்ல..ஆகவே தான் ரணிலின் அரசாங்கத்தை அவர்கள் வரவேற்க வில்லை என்பதோடு அவர்களால் எதுவும் செய்யமுடியாதள்ளது .(2003)

1977 ம் ஆண்டு தேர்தலுக்கு பின் ஐ.தே.கட்சி அமோக வெற்றி பெற்றதுடன் இலங்கையின். பொருளாதார சுதந்திர வர்த்தகத்தை நோக்கி முன்னேறியது .பொது நிறுவனங்கள் ( சீனித் தொழிற்சாலை ) இரும்பு ,மரத் தொழிற்சாலைகள் ,கூட்டுத்தாபனங்கள் போன்றவை தோன்றின.அரசுக்கு பெருந்தோட்டப் பகுதிகள் சுதந்திரமாக்கப்பட்டன.(99 வருட குத்தகைக்கு ) அரசுக்கு சொந்தமான பல நிறுவனங்கள் குத்தகைக்கு விடப்பட்டன.மேலதிகமாக முதலீட்டு சபை[7] தாபிக்கப்பட்டு வெளிநாட்டு முதலீட்டாளர்கள் ஊக்குவிக்கப்பட்டனர் .இத்தகைய சுதந்திர வர்த்தகப் போக்கு மிகக் குறைந்தளவு வேதனம் பெற்ற அரச துறை ஊழியர்களை தங்கள் கடமைகள் மறந்து சீக்கிரமாக ஊழலுக்கு இட்டுச் சென்றதுடன், ஏற்றுமதி இறக்குமதியாளர்கள் மேலதிகமாக லஞ்சம். வழங்குவதன் மூலம் வரிகள் அலட்சியப்படுத்தப்பட்டு சட்ட முறையற்ற செயற்பாடுகளுக்கு ஊக்குவிக்கப்பட்டனர் .முதலீட்டாளர்களும் ,பெரும் தன வந்தர்களும் லஞ்சம் வழங்குவதன் மூலம். சுங்கவரியை அகற்றுவதன் மூலம் இலங்கையில் தங்கள் தேவைகள் பூர்த்தி செய்து கொண்டார்கள். மேலதிகமாக சுதந்திர பொருளாதார தேவையின் நிமித்தம் அரசாங்கம். தனது அடித்தள கட்டமைப்பு அபிவிருத்தி திட்டங்களை தரகர்கள் மூலம் ஊக்குவித்ததனால் தனியாள் சந்தைகள் பொது வியாபார தளங்களாக மாறின .

உயர் பொது முதலீட்டு செலவின திட்டங்களிலும் தனியார் மயப்படுத்தலிலும் ,சுதந்திர பொருளாதாரக் அமைப்பினாலும் ஊழல் தனது ஆக்கிரமிப்பினை தொடங்கியுள்ளது எனலாம். 1988 ம் ஆண்டு சிரேஷ்ட அரச உத்தியோகத்தர்களும் , நீதித்துறை சார்ந்தவர்களும் , பாராளுமன்ற உறுப்பினர்களும் தங்களது சொத்துக்கள் பொறுப்புக்களையும் ஆண்டுதோறும் பிரகடனப்படுத்த வேண்டுமென சட்டத்திருத்தம்[8] கொண்டு வரப்பட்டது .எவ்வாறெனினும் இவ்வாறான வருடாந்த சமர்ப்பணங்களும், ஊழல் சம்பந்தமான முறைப்பாடு ஒன்று கிடைக்கும் வரையிலும் செயலற்றவையே.பொதுவாக இத்தகைய விபரங்கள் சமர்ப்பிக்கப்படுகின்றது அல்லது காலம் பிந்தி சமர்ப்பிக்கப்படுகின்றது என்பதே உண்மையாகும் .ஊடகவியலாளர் ஹந்துன் கெட்டி அவர்களின் கருத்துப்படி 189 பாராளுமன்ற உறுப்பினர்களில் 46 அமைச்சர்கள் உட்பட 143 பாராளுமன்ற உறுப்பினர்கள் இதுவரை யாரும் தங்கள் சொத்துக்கள் பொறுப்புக்களை பகிரங்கப்படுத்தவில்லை . வரலாற்று ரீதியான தகவல்களும் இவற்றை நிரூபிப்பதுடன் எத்தகைய சட்ட ரீதியான நடவடிக்கைகளும் எங்களது உறுப்பினர்களை அவர்களது துலாம்பரமான நடவடிக்கைகளில் ஈடுபட அழுத்தம் கொடுக்க வில்லை என்பதே புலனாகின்றது .

தேர்தல் வன்முறைகளும் 1989 தேர்தல் ஆணையாளரின் அறிக்கைப்படி இத்தகைய நிலையை தோற்றவித்து . 1989 ம் ஆண்டு சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்த வேண்டிய நிலையை உருவாக்கியது . சர்வதேச கண்காணிப்பாளர்களின் வருகை சுதந்திரமானதும் நீதியானதுமாக தேர்தல் ஒன்றுக்கு வழிசமைத்தது எனலாம் .இத்தகைய தேர்தல் கண்காணிப்பு ஒவ்வொரு தேர்தலிலும் தொடர்கின்றது .எனினும் , வாக்கு அபகரிப்பு மற்றும் வன்செயல் என்பன குறிப்பிட்டளவு குறையவில்லை .

1994 ம் ஆண்டு தேர்தல் ஊழல் நிறைந்தது எனினும் ஆட்சி கட்டில் ஏறிய பொதுஜன ஐக்கிய முன்னணி 1994 ம் ஆண்டு ஊழல் சட்டத்திற்கு திருத்தம் கொண்டுவந்து .CIABOC யையும் தோற்றுவித்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

.எவ்வாறெனினும் சிறிய தொகையிலான முறைப்பாடுகள் பதியப் பெற்றும் ,மிகக்குறைந்தளவு குற்றவாளிகள் பதிவு செய்யப்பட்டும் ,மிகையற்ற தண்டனைகளும் வழங்கப்பட்டன. CiABOCயின் உள்ளக நிர்வாக தன்மை எப்போதும் பிரச்சனைக்குரியதாக காணப்பட்டது.இவை அரசியல் காழ்ப்புணர்ச்சி உருவாக ஏதுவானது .

எவ்வாறெனினும் ,பொதுஜன ஐக்கிய முன்னனி அரசாங்கத்தின் 1994 ம் ஆண்டின் பிரச்சாரமாக ஊழல் வெளிப்படுத்தப்பட்டது .இவர்களின் அரசில் இவ்வாறு நடைபெற மாட்டாது எனவும் உறுதி செய்யப்பட்டது .யுத்தம் காரணமாக அவசர கால சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டதால் பாதுகாப்பு கருதி இராணுவ பாதுகாப்புடன் ஊழலுக்கு பேரளவினதான சந்தர்ப்பம் வழங்கப்பட்டது .அரச உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய அதிகாரிகளின் இலௌகீக டாம்பீக வாழ்க்கை முறை மாற்றம் இதற்கு சான்றாக அமைந்தது.

30 வருட காலமாக அரசியலில் நியமனம் பெற்று வந்தவர்கள் வெகு விரைவாக இவ்வாறான டாம்பீக வாழ்க்கை முறைக்கு அவசரப்பட்டு தங்கள் அலுவல்களை விரைவில் முடித்துக்கொள்வதற்கும் பணம் வழங்கியும் சட்டதிட்ட முறைகளை அலட்சியப்படுத்தியும் அரச அலுவல்களை விசேடமாக ( சுங்கம் , பொலிஸ் ,வைத்தியசாலை ,பாடசாலைகள் ) முடித்துக்கொள்வார்கள் .

புதிதாக தெரிவு செய்யப்பட்ட ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் பொதுக்கடன் தீர்வைக்காக அதனது வரி வசூலிப்பு முறைக்கு ஊடாக சர்வதேச நாணய நிதியம் , உலக வங்கி ஆகியவற்றின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப சுதந்திர பொருளாதார விரிவினை மேற்கொண்டு பொதுச்சொத்துக்களை தனியார்மயப்படுத்தல் "வளர்ச்சிக்கான இயந்திரம் தனியார்மயப்படுத்தல் " எனும் அடிப்படையில் கருமமாற்றுவதுடன் மேலதிகமாக சமாதானத்தை மையமாகக் கொண்டு செயற்படுவதன் மூலம் மக்கள் தடைக்கல்லாக பொருளாதார முன்னெடுப்பில்[9] இருந்து மீண்டு மீள் நிர்மாணத்தினை அடிப்படையாகக்[10] கொண்ட பொருளாதார நகர்வுக்கு முற்பட்டுள்ளார்கள் .

2003 ஜூன் மாதம் டோக்கியோவில் இடம் பெற்ற உதவி வழங்கும் நாடுகளின் பொருளாதார உதவியான 4 .5 பில்லியன் டொலர் உதவி மீள் நிர்மாண பொருளாதாரத்தை அடைவதற்கு ஏதுவானதாக இருக்கும் .

எவ்வாறெனினும் , சுதந்திர பொருளாதாரத்திலும் , தனியார் மயப்படுத்தலிலும் , மீள் நிர்மாணத்திலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஊழல் கலாச்சாரம் தோன்றுவது இயல்பானதே .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழல் சுய கோவை

இலங்கையில் மூன்று விதமான ஊழல்கள் உள்ளன .

## உறவுச்சலுகை மற்றும் பரம்பரைச் சலுகை

அரச நிறுவனங்கள் ,அரசுக்கு சொந்தமான திணைக்களங்களிலேயே பெரும்பாலும் இந்நியமனங்கள் வழங்கப்படுகின்றன .

2001 ம் ஆண்டு வரையிலும் அமைச்சரவை அமைச்சர்கள் இத்தகைய நியமனத்தை வழங்கினார்கள். நியமனங்கள் ,இடமாற்றங்கள், பதவியுயர்வுகள் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள், என்பன பொதுத்துறைகளில் அமைச்சர்களாலேயே ஏற்படுத்தபபட்டன. அரசியலில் தாங்கள் பதவிக்கு வருவதற்காக சகல சட்டத்திட்டங்களையும் புறந்தள்ளி தங்களது உறவினர்களுக்கும் ,தங்கள் கட்சி ஆதரவாளர்களுக்கும் நியமனங்கள் வழங்கப்பட்டன .இத்தகைய நியமனங்களை தவிர்ப்பதற்காகவே 2001 ம் ஆண்டு 17 ம் அரசியலமைப்பு சீர்த்திருத்தம் அமுலாக்கப்பட்டு இத்தகைய நியமன வழிமுறைகள் பொதுச்சேவைகள் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டன.எனினும் , இத்தகைய நடைமுறை இன்றும் போதியளவு முன்னேற்றம் காணப்படவில்லை .

## பாரிய ரசீது ஊழல்

இந்த நடைமுறை பெரும்பாலும் டெண்டர் நடைமுறைகளில் விசேடமாக வெளிநாட்டு முதலீட்டாளர்களாலேயே இடம் பெறுகிறது .இவை பெறுமதி கூடியவை.எனினும் ,கண்ணுக்கு புலப்படாத வகையில் மேற்கொள்ளப்படுகிறது .

கிடைக்கப்பெறும் வதந்திகள் மற்றும் ஊடக குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் அரசியல் நியமனங்கள் பெற்றவர்களிலும் ,அவர்களது கூட்டுக்களும் ,தீர்மானம் மேற்கொள்பவர்களும் இதனை சாதகமாக பேசி முடித்து தரகு பெறும் முறை தீர்மானிக்கப்படுகிறது .

## சிறிய அளவினதாக ஊழல்கள்

இங்கு பரிமாற்றம் சிறிதாயினும் துலாம்பரம் மிகவும் பெரிதாகும் .இவ்வகையான குற்றங்களே இலங்கையில் பெரிதும் காணப்படுகின்றன .தங்களது அலுவல்களை முடித்துக் கொள்வதற்காக இவ்வகையான சிறிய பரிமாற்றங்கள் நிகழ்கின்றன .நீதிமன்றங்கள் இத்தகைய வழக்குகளை சிலவேளை பெறுவது இல்லை .அபிவிருத்தி அடைந்த நாடுகளின் சிரமமான நிர்வாக முறையும் ,நேரத்திற்குரிய வேலையும் ,அவர்களது சம்பள முறையும் இத்தகைய ஊழல் இடம் பெறுவதில் இருந்து தவிர்க்கப்பட்டுள்ளது .

## குறைந்த சம்பளமும் பேராசையும்

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் ஊழலுக்கு காரணமாக அமைவது குறைந்த சம்பளமும் ,வேறு பல தேவைகளுமே ஆகும் .அத்துடன் டாம்பீகமாக வாழ்வதற்கான பேராசையுமாகும். இது பின்னர் வெளிநாட்டு நாணயங்களுடனான" ஊழலாக மாறுகின்றது .அத்துடன், இது சிறு குழுக்கள் பின்னர் பேரளவினதான பணப் பரிமாற்றமாக மாறுகிறது .இலங்கையில் நடைபெறுகின்ற பெரியளவிலான வியாபாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுபோன்றதேயாகும் .முன்னர் குறிப்பிடப்பட்டதான ஊழல்கள் பலரின் கைகளுக்குள் உள்நாட்டு பணத்தில் இடம் பெற்று பின்னர் பாரியளவில் கேள்வியாகவும் — வழங்கலாகவும், இடம் பெறுகிறது .

இவையே, ஊழல் இடம் பெறுவதற்கு காரணமாக அமைகின்றது .இந்த வழங்கல் முறையிலான ஊழல் இடம்பெறுவதற்கு மிகவும் மோசமான நிர்வாக அமைப்பே காரணமாகின்றது .அத்தோடு சட்ட அலட்சியமும் அதற்கு உறுதுணையாக அமைகின்றதுடன் ,குறைவான வரியுடன் டெண்டர்களை வெற்றிக்கொள்ள ஏதுவாகின்றது .இந்த நிலைமை பின்னர் அடிப்படை கட்டமைப்பு திட்டங்களுக்கான பணம் வழங்கலாக மாறுகின்றது .பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோனின் கருத்துப்படி " ஊழல் தெரிந்தவன் வினைத்திறனற்ற நெகிழ்வாளன்[12] "ஆவான்.

## அரசியற் கலாச்சாரமும் நிர்வாக பலவீனமும்

உறவுச்சலுகையும் ,பரம்பரைச்சலுகையும் காரணமாக அமைச்சர்கள் தங்கள் அதிகாரத்தை பாவிக்கும் வழமை 1972 ம் ஆண்டு அரசியல் யாப்பிலும் பின்னர் 1978 ம் ஆண்டு அரசியல் யாப்பிலும் இருந்து நீக்கப்பட்டன .இதன் மூலம் அரச நியமனங்கள் ,பதவி உயர்வுகள் ,ஒழுக்க சம்பந்தமான பிரச்சனைகளில் அமைச்சர்கள் தலையிடுவதன் காரணமாக அவர்களது வாக்காளர்களும், .உறவினர்களும் வெற்றிடங்களில் நிரப்புவதில் கடந்த 30 ஆண்டுகளாக இலங்கையில் இடம் பெற்று வருகின்றது.ஆசியாவில் இலங்கை இவ்விடத்தில் முன்னனி வகிக்கின்றது .[13]மனித வள அபிவிருத்தியின் பலவீனமும் அதனை அமுல்படுத்திய நடைமுறையும் நாளாந்த வினைத்திறன் அற்ற நிலையை உருவாக்கியதுடன் குறைந்த வருமானமுடையோர் நாளாந்தம் பல வேலைகளை செய்து கொடுப்பதற்காக தங்கள் கைகளை இத்தகைய ஊழலுக்கென நனைத்து கொண்டதாக கூறப்படுகின்றது .

இந்த நடைமுறை கைக்கொள்ளப்படும் நாடுகளில் குறைந்த சம்பளம் மற்றும் வேலை தாமதங்களும் இடம் பெறும் .காலதாமதமாகிய வேலைகளை லஞ்சம் வழங்கப்படுதலின் மூலமாக நேரகாலமற்ற வேலைகளுக்கான ஊக்கமாக கருதப்படுகிறது.இலங்கையில் காணப்படும் இத்தகைய நிலையானது அரசினால் அதிக்கூடிய சம்பளம் வழங்கப்பட முடியாத நிலையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கலாச்சாரமாக மாறுகின்றது .

மேலும் ,சம்பள அதிகரிப்பினால் இந்நிலையை மாற்ற முடியாது .மாறாக வேலை முறைமை மாற்றப்படுவதுடன் நிர்வாகிகள் அவர்களது சேவையாளர்களின் தேவையை பூர்த்தி செய்யும் மனோநிலையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் .இதுவரையிலும் இலங்கை அரசு இத்தகைய மாற்றத்திற்கான யாதாயினும் நிதி ஒதுக்கீட்டை மேற்கொள்ளவில்லை .இலங்கையின் ஆரம்ப நோக்குகள் பௌதீக மூலதன வேலை திட்டங்களையே அடிப்படையாக கொண்டு இருப்பதாக 2003ம் ஆண்டின் டோக்கியோ மகா நாட்டு அறிக்கை குறிப்பிடுகின்றது .

பொது நிர்வாக கட்டமைப்பில் அமைச்சர்கள் தொடர்ந்தும் தங்களது அதிகாரங்களை நியமனங்களில் ஈடுபடுத்துவது கடந்த அரசாங்கத்தாலும் தற்போதைய அரசாங்கத்தாலும் இடம் பெறுவது அவர்கள் சட்டத்தை உதாசீனம் செய்கிறார்கள் என்பதேயாகும் .

முன்னைய அரசாங்கம் தேசிய மாணிக்கக் கற்கள் மற்றும் ஆபரண கூட்டுத்தாபனத்தின் 8 வருட அனுபவம் மாத்திரமே உள்ள ஒருவரை அதன் பணிப்பாளர் நாயகமாக நியமித்தது .1999 ம் ஆண்டு இந்த நியமனம் சம்பந்தமாக உயர் நீதிமன்றில் விசாரனை நடைபெற்றது .அரசு அவரை அதன் தலைவராக நியமித்து சார்பாக வாதாடியது .கடந்த வருடம் கணக்காய்வாளர் நாயகம் பாரியளவிலான முறைபாடுகளும் , நிதிகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்தமான முறைபாடுகளும் உள்ளதாக அறிக்கை வெளியிட்டுள்ளார் .[14]

இந்த அரசின் முற்காலப்பகுதியில் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் மிக உயர்ந்த பதவிக்கு ஒரு நீதிவான் மன்ற நீதிபதியை நியமித்தது .மிக இளவயதினரான இவருக்கு சட்ட ரீதியான தகைமைகள் இப்பதவியை ஏற்பதற்கு இல்லாத போதும் அவர் நியமிக்கப்பட்டுள்ளார். மேலும், ந° த° வ ா ன ா க கடமையாற்றிய காலத்தில் பல்வேறு வகையான குற்ச்சாட்டுக்கள் இவர் மீது சுமத்தப்பட்டுள்ளன [15].

## இலஞ்ச ஊழல் ஆணைக்குழு இல்லாதொழிக்ப்பட்டமை .

ஐ . தே .கட்சி அரசாங்கத்தின் 17 வருட கால ஆட்சியில் ( 1977 – 1994 ) பொருளாதார வளர்ச்சி காணப்படினும் இலஞ்சமும் ஊழலும் தீவிரமடைந்ததாக சுதந்திர ஆய்வாளர் சுனில் பொன்னம்பெரும அவர்கள் கூறுகின்றார் .1994 ம் ஆண்டின் தேர்தலானது ஊழலில் முறையான மூலாதரப் பிரச்சனையாகியது .அது பின்னர் இலஞ்ச சட்டத்தில் மாற்றத்தினை கொண்டுவந்தது .அதன்படி 1994 ம் ஆண்டு ௨௦ ம் இலக்க சட்ட பின்னினைப்பு படி இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான ஆணைக்குழு உருவாக்கப்பட்டன .1954 ம் இலக்கச் சட்டம் 1958 ம் ஆண்டின் பின்னிணைப்பு ஆகியவையே அதுவரை அமுலில் இருந்தது .அரசியல் வாதிகளினதும், நீதிபதிகளினதும் இலஞ்சம் சம்பந்தமான விடயங்களை ஆராய்வதற்கு இது அவசியமாகின்றது .சில வழக்குகளே அரசியல் வாதிகளுக்கு எதிராக இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழுவில் முறையிடப்பட்டன.

உதாரணத்திற்கு அமைச்சர் ஒருவர் பொது மக்களின் பணத்தை நிர்வாக முடிவிற்கு ஏற்ப பான் ஏசியா வங்கியில் முதலீடு செய்தது தொடர்பாக வழக்குத் தொடுனர் சார்பில் பின் தொடர்ந்து அதனை விசாரனை செய்யவில்லை .அந்த பங்குகளுக்கான விலைகள் குறைவடைந்து நட்டம் ஏற்பட்டது .அந்த வியாபார தொடர்பில் ஊழல் இடம்பெற்றுள்ளது [16].

இந்த அமைச்சர் அடுத்து நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் கட்சி மாறினார் எனினும் அடுத்த பாராளுமன்றில் அவர் தொடர்ந்தும் அந்த அமைச்சரவையில் நலனோம்பு அமைச்சராக நியமிக்கப்பட்டார் .அதேவேளை பாரிய அளவிலான பங்கு வியாபார நட்டம் மக்களுக்கே நட்டமாகும் .இதே நேரத்தில் இந்த வியாபார தரகர் மோசடி குற்றச்சாட்டு விசாரணைக்குள்ளாக்கப்பட்டு உள்ளார் .மற்றும் பிரமுக வங்கியின் திவால் பிரச்சனையும் விசாரணையில் உள்ளது .இந்த வங்கியிலும் பொது மக்களின் பணம் வைப்பில் இடப்பட்டுள்ளது .இந்த வங்கியில் வைப்பிலிடுவதற்காக வெகு கவர்ச்சிகரமான தரகு வங்கியிலிடும் போது அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது .இதன் மூலம் வழமையான நடைமுறைகளுக்கு மாறாக பணம் வங்கியில் இடப்பட்டுள்ளது . (சண்டே டைம்ஸ் ௨௦௦3 ) இந்த விடயம் பின்வரும் கேள்வியை எழுப்பியுள்ளது .இந்த சம்பவத்திற்கும் முதல் குறிப்பிட்ட சம்பவத்திற்கும் இடையில் யாதாயினும் தொடர்பு உள்ளதா ? தீவிரமான விசாரணையை மேற்கொள்வதற்கான போதியளவு அதிகாரங்கள் CIABOC யிற்கு இல்லாமையின் காரணமாக குறிப்பிட்ட விசாரணையை மேற்கொள்ள முடியாதுள்ளது

C I A B O C வின் ௦9 வருட கால வரலாற்றில் குறிப்பிடத்தக்க வழக்குகள் எதுவும் குற்றத்தீர்ப்புக்குள்ளாக்கப்படவில்லை. CIABOC வின் தர்க்கப்படி எந்தவொரு சம்பவத்திலும் முறையான எழுத்து மூல குற்றச்சாட்டுக்கள் முறைப்பாடுகளாக தொடுக்கப்படாமையே விசாரணை தொடர்வதற்கு முடியாத காரணங்களாக குறிப்பிடப்பட்டுள்ளது .மேலும் ,CIABOCதனது உள்ளக ரீதியான பிரச்சனைகளான அரசியல் அழுத்தங்களினால் ஆணைக்குழு உறுப்பினர்களை இராஜினாமா செய்யச் சொல்வதையும் ,ஆணைக்குழ உறுப்பினர் இயற்கை மரணத்தையும் , அதன் பின் இந்த வெற்றிடத்தை நிரப்பாமையும் இதன் பணிப்பாளர் இடம் மாற்றம் செய்யப்பட்டதும் ,ஆணைக்குழு சிறப்பாக இயங்க முடியாமைக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணங்களாக சுட்டிக்காட்டுகிறது .

இலங்கையின் அனுபவத்திற் கூடாக மக்களின் முறைப்பாடு இன்மையும் இதனை கட்டுப்படுத்த முடியாதுள்ளது .( சம்பவம் நடக்கும் சமயத்திலேயே கைது செய்ய வேண்டும் என்பதே பணிப்புரை ) இந்த சமயத்தில் விழிப்புணர்வு பாதுகாப்பும் குறைவாகவே உள்ளது .

மேலும் , பாரியளவிலான ஊழல் மோசடிகளின் வெளிக் கொணரப்படுதலின் விளைவு மரணமேயாகும் . சிங்கள பத்திரிக்கை **சட்டன** வின் ஆசிரியம் செப்டெம்பர் மாதம் 07ம் திகதி 1999 ம் ஆண்டு கொலைசெய்யப்பட்டார் .**"கமிசனா "** எனப்படும் ஒலிபெருக்கி நாடா சம்பந்தமான விபரங்கள். அலை வரிசை 09 ல் என பிரபல்யமாக குறிப்பிட்டதன் காரணமாகவே இந்தப் பத்திரிக்கையாளர் கொலை செய்யப்பட்டார் .

அலை வரிசை 09 என்பது அப்போதைய ஜனாதிபதியின் ஊடக ஆலோசனையாளரால் தனியார் தொலைக்காட்சி நிலைய அனுமதிப் பத்திரம் வழங்கலுக்கும் , வானொலி நிலையங்கள் நடாத்துவதற்கான அனுமதிப்பத்திரம் வழுங்கலுக்காக வாங்கப்பட்ட கமிஷன் சம்பந்தமான விடயங்களை அம்பலப்படுத்தியதாகும் . உண்மையான **செனல் 9** ஒலிபரப்பு செய்யப்படுவதற்கு முன்பு மக்களுக்கு இது ஒலிபரப்பு செய்யப்பட்டதே இவரது தவறாகும் . ரோகண குமாரவை கொலை செய்தவர்கள் இன்னும் கைது செய்யப்பட வில்லை . இது சம்பந்தமாக பொது மக்களின் சார்பிலும், எதுவித சாதகமும் காட்டப்பட வில்லை .இதே நேரத்தில் P A அரசாங்கத்தினால் பாரியளவு பணம் பரிமாற்றம் செய்யப்பட்டது .

## பாதுகாப்பும் இரகசிய தன்மையும்

கடந்த 20 வருடங்களாக நாட்டில் நடக்கும் யுத்தம் ,உத்தியோகப்பூர்வ இரகசிய சட்டம் அவசரகால சட்டம் ,அதனோடு நீடிக்கப்பட்ட பயங்கரவாத பாதுகாப்பு சட்டம் போன்றவை மூலம் பொது மக்களுக்கு இராணுவம் சம்பந்தமான கூட்டு செலவீன விபரங்கள் தெரியப்படுத்தல் தவிர்க்கப்பட்டதுடன் கணக்காய்வாளர் நாயகத்தின் பார்வைக்கும் மறைக்கப்பட்டன .அதேவேலை பொதுத் துறை அதிகாரிகளின் டாம்பீக வாழ்க்கை தொடர்பான விபரங்களை அறியாமையும் ,அவர்கள் வருடாந்த சொத்து விபரங்கள் சமர்ப்பிக்காமைக்கான வழக்குத் தொடரலும் இடம் பெற வில்லை

இராணுவ பாதுகாப்பு தொடர்புகள் பாரியளவிலான தரகுகள் பெறப்படினும் குறைந்தளவு தரமுடையதான பொருட்களே வழங்கப்பட்டன எனும் விடயங்கள் பத்திரிக்கைகளில் அவ்வப்போது வெளியிடப்படுகின்றன.இதே வேளை பிரதான எதிர்கட்சி 2001 ம் ஆண்டின் முற்பகுதியில் இந்த விடயம் சம்பந்தமாக பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பியப் போது நீதித்துறை அமைச்சர் உயர் அதிகாரிகளின் மூலம் ஊழல் இடம் பெற்றிருப்பதை ஒத்துக்கொண்டார் .அரசில் பல மில்லியன் டொலர் கணக்கிலான ஊழல் இடம் பெற்றிருப்பது தெரிய வந்தது .எவ்வாறெனினும் பல்வேறு வகையான சட்டங்கள் (அவசர கால சட்டம் போன்றவை ) இவ்வகையான விடயங்கள் தேசிய நலன் கருதி ஆராய்வதில் இருந்தும் தடை செய்தன .இராணுவ தளபதிக்கு எதிராகவும் இத்தகைய குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன .அவர் CIABOC யும் பாதுகாப்பு அமைச்சும் பூரண விசாரனை செய்யப்பட வேண்டும் என கோரினார் .

## அரசுக்கு சொந்தமான நிறுவனங்கள்

அமைச்சர்களால் நடாத்தப்படும் ,விசேடமாக தங்களது அரசியல் நியமன தாரிகளால் இயங்கும் அரசுக்கு சொந்தமான நிறுவனங்கள் முறையான இலக்கை அடையவில்லை என்பதே உண்மையாகும் .

உதாரணமாக ,அரசுக்கு சொந்தமான வங்கிகளான இலங்கை வங்கி , மக்கள் வங்கி என்பன எதுவித பிணையும் இன்றி அரசியல் செல்வாக்குகளினால் வழங்கும் பாரிய கடன்கள் குறிப்பிடத்தக்கது ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டத்தில் வட்டியின்றி இலங்கை ரூபா 15 மில்லியன் தேசிய அரசியல் தலைவர் ஒருவரின் சினேகிதருக்கு வழங்கப்பட்டமை மீளப் பெற முடியாமையின் காரணமாக பெறப்பட முடியாக் கடனாக தீர்க்கப்பட்டது .ஐ .தே . கட்சி எதிர் கட்சியாக இருந்தப் போது இவ்வாறு பல்வேறு வகையான வழமையான நடைமுறைக்கு மாறாக வழங்கிய கடன் விபரங்களை வெளியிட்டது [17].

இந்த வங்கிகள் தனியார் மயப்படுத்துவதற்கான முயற்சிகளுக்கு காரணம் இதனது மிக மோசமான நிர்வாகமும் கடன் சுமையும் மட்டுமே .இத்தகைய நோக்கத்தின் போது அரசு சுதந்திர வர்த்தக சந்தையாகவோ அல்லது அரசுக்கு சொந்தமானவையாக இத்தகைய நடவடிக்கையை மேற்கொள்ளப்படுகிறது என்பது தெளிவற்றதாகும் .

## தனியார்மயப்படுத்தல்

இது நிறுவன மயப்படுத்தப்பட்ட ஊழலின் புகழிடமாகும் .இது அரசியல் வாதிகளுக்கு பணம் வழங்குவதும் உயர் தர அதிகாரிகளுக்கு பணம் வழங்குவது மூலம் அரசுக்கு சொந்தமான சொத்துக்கள் கையேற்கப்படுவதாகும் .இலங்கையின் பணத்தாகமானது செலுத்த வேண்டிய வரி தொடர்பினால்[18] ஆதாயமில்லாத நிறுவனங்களை மிகக்குறைந்த இலாபத்துடன் விற்கும் ஒரு வியாபாரமாகும் .

மேலும் ,கொள்கை வழிகாட்டலுக்கு மேலாக பொதுச்சொத்துக்கள் அகற்றுவது ,இல்லாதொழிப்பது தொடர்பான கொள்கை மூலம் (பொது மக்கள் பங்கு , கேள்வி , விற்பனை , குத்தகை தெரிவு , டெண்டர் தெரிவு , சொத்து ஒதுக்குதல் , சந்தை நிலவரம் ) என்பவற்றிற்கேற்ப அதனது உயரிய கொள்விலை தீர்மானிக்கப்படும் .அதே வேலை இந்த வியாபாரம் சம்பந்தமான கேள்வி எழும் போது இதனது நிர்வாக துஷ்பிரயோகம் அல்லது ஊழல் அல்லது நட்டம் போன்ற பல்வேறு காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன .

ஊழல் சம்பந்தமான குற்றச்சாட்டுக்களை வரிசைப்படுத்தலில் எயார் லங்கா கைமாற்றம் முதலிடமாகும் [19].பொது நிறுவனங்கள் மீள் அமைப்பு ஆணைக்குழு ( P E R C ) இந்த வியாபாரத்தை மேற் கொண்டது எனினும் இது மிக இரகசியமானது .C O P E இதனை புலனாய்வு செய்த போது P E R C யின் பணிப்பாளரும் தலைவரும் இந்த வியாபாரம் தொடர்பில் இந்த வியாபாரம் தற்போது சமரசம் செய்யப்படுவதாகவும் இதனது புலனாய்வுகள். C O P E ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பே இந்த பரிமாற்றம் நிகழ்ந்தது எனவும் குறிப்பிட்டனர் .( டிரான்ஷ் பேரன்சி இன்டர் நெஷனல் பங்களாதேஷ் )

## உள்ளக கட்டமைப்பு அபிவிருத்தி

உள்ளக கட்டமைப்பு சம்பந்தமான முறையற்ற ஆய்வு மூலமாக துரித மகாவலி அபிவிருத்தி திட்டம் ஆராயப்பட்டது .(நீர்பாசன மீள் நிறுவல் திட்டம் 30 ஆண்டுகளில் இருந்து 05 ஆண்டுகளாக குறைக்கப்பட்டது [20]) இதுவே இலங்கையில் ஊழல் நடைபெறுவதற்கான அத்திவாரம் எனில் மிகையாகாது .இது வியாபாரத்தின் ஒரு நல்ல நிலையினை சூட்சுமம் ஆகும் .

கட்டுமான பொருட்கள் ஏனைய நாடுகளில் போலவே கைமாறிய விதம் மேலதிகமாக வழங்கப்பட்ட தரகுகள் ,தரகுகள் அமைச்சர்களுக்கும் உயர் அதிகாரிகளுக்கும் வழங்கப்பட்டமை,இதனது அனேகமான டெண்டர்கள் வெளிநாட்டு நிறுவனங்களுக்கே வழங்கப்பட்டன .தீர்மானம் எடுக்கும் முறைகளுக்காக பலவிதமான தரகுகள் வெளிநாட்டு நிதிகள் மூலமே பணமாக வெளிநாடுகளால் வழங்கப்பட்டன .இவ்வாறு பெறப்பட்ட தரகுகள் வெளிநாட்டில் கரன்சி மூலமே வெளிநாட்டு சொத்துக்களை வழங்கப்பட்டதால் இவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பந்தமான எது வித ஆய்வும் செய்யப்பட முடியாமை .மேலும் ,எந்த நாட்டில் பாரமரிப்பு கைவிடப்படுகிறதோ ,சொத்து சம்பந்தமான நீண்ட நாள் உரிமை குலைக்கப்படுகிறதோ அந்நாட்டுக்கு சொத்துக்களை மீள் அளிக்கும் திட்டங்கள் மூலம் ஊழல் மலிவாக்கப்பட்டது எனலாம் .

## சட்ட ஒழுங்கின்மையும் தவறுக்கான வழிமுறைகளும்

சட்ட முறையாக எது வித கட்டுப்பாடும் அரசியல் கட்சிகளுக்கோ அபேட்சகர்களுக்கோ இல்லாமையினால் அவர்களது வரவு செலவு தொடர்பாக எது வித அறிவித்தலும் வழங்கப்படுவதில்லை .

ஒருவர் தனது பலத்தால் வாக்கு வங்கியை சேகரிக்க முடியுமாயின் அல்லது தேர்தலுக்கு பணம் வழங்கப்பட முடியுமாயின் அவருக்கு தேர்தலில் தனது தெரிவின் பின்னர் யாதேனும் வகையில் அவரது சேவைக்கு நன்றியாக தனது செல்வாக்கை செலுத்த வேண்டும்.

இவ்வகையில் வியாபாரத்தில் அரசியல் வாதிகளும் உயர்தர அதிகாரிகளும் தங்களது தரகு பணத்தையும் நன்கொடைகளையும் வெளிநாட்டின் பணமாக அல்லது சொத்தாக பெறுவதன் காரணமாக இலங்கையின் புலனாய்வு பிரிவினருக்கு இவர்கள் அகப்படுவதில்லை .இது பல்வேறு வகையிலான ஆய்வுகளின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது .

எழுதப்பட்ட சாட்சியங்கள் இல்லாமையின் அல்லது குறைவின் காரணமாக பொது அதிகாரிகளின் சிரமமான சொத்து சேகரித்தலும் டாம்பீகமான வாழ்க்கை முறையும் நல்ல நிலையிலான ஊழல் பரிமாற்றம் வியாபாரத்திற்கான சாதக நிலைகளாகும் .

மற்றுமொரு சாதகமான பணமாற்று முறையானது முதலீட்டு சான்றிதல் ஆகும் .இதன் மூலம் யார் பணத்தை வைப்பிலிடுகிறார்கள் அல்லது பணத்தை மீளப்பெறுகிறார்கள் என்பது தெரியாது எஅண்மையில் இலங்கையில் வங்கி ஒன்றின் பாதுகாப்பு பெட்டகம் இலங்கை நாணயம் படி 40 மில்லியன் ரூபா பெறுமதியான முதலீட்டு சான்றிதல் நீதிமன்ற உத்தரவிற்கு அமைய திறக்கப்பட்டன .இந்த வங்கி பாதுகாப்பு பெட்டகத்திற்கு சொந்தமானவர் முன்னாள் பிரதி பாதுகாப்பு அமைச்சராகும் . முன்னாள் அமைச்சர் அவர்கள் இதற்கு விளக்கமளிக்கையில் இவை அனைத்தும் தனது நண்பர் ஒருவருக்கு உரியது என்றார் .நண்பரின் பெயரை இவர் வெளியிட வில்லை .அதிகாரிகள் அந்த சமயத்தில்.உடதலவின்ன 10 பேர் கொலை தொடர்பாக தீவிர விசாரனை செய்து கொண்டு இருந்தார்கள் .இந்தக் குற்றச்சாட்டில் திரு இரத்வத்தை அவர்களும் சந்தேக நபர் ஆவார் .இந்த புலனாய்வுகள் தெரியப்படுத்தப்பட வேண்டும் பிரதி அமைச்சர் அவர்கள் தனது வருடாந்த சொத்துக்கள் பிரகடனத்தின் போது மற்றவரது சொத்துக்கள் தான் வைத்திருத்தல் எனும் பிரிவிற்கு தனது சொத்துக்களை பிரகடனம் செய்து இருந்தாரா என்பது புலப்படுத்தப்பட வேண்டும் .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய நலனோக்கு ஒழுங்கு முறை

## நிறைவேற்று

1978 ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட நிறைவேற்று ஜனாதிபதி முறையிலான அரசியலமைப்பு ஜனாதிபதியே நாட்டின் தலைவர் என குறிப்பிட்டது .அரசின் தலைவராகவும், படையின் தலைவராகவும்[21],ஜனாதிபதியே விளங்குவார்.இம்முறை வெஸ்ட் மினிஸ்டர் முறையிலும் பிரெஞ்சு அரசியலமைப்பையும் ஒத்ததாக விளங்கியதுடன் இவர் பாராளமன்றத்திற்கு பதில் அளிக்க வேண்டியவரல்ல

இவர் பதவியில் இருக்கும் காலப்பகுதியில் தனிப்பட்ட ரீதியாகவோ ,பொது ரீதியாகவோ குற்றம் சுமத்தப்பட முடியாதவர்[22] ஆகும் .இவரது பதவிக்காலம் 06 வருடங்கள்[23]. தொடர்ந்து இரண்டு முறை பதவி வகிக்கலாம்[24]. ஜனாதிபதி வேறு யாதாயினும் இலாபம் மீட்டும் பதவிகளை வகிக்க முடியாது[25] என்பதுடன் பாராளுமன்றத்தில் வேறு யாதாயினும் லஞ்சம் போன்ற காணரங்களுக்காக[26] பாராளமன்றில் 2/3 பெரும்பான்மையுடன்[27] உயர் நீதிமன்ற அறிக்கையுடனும்[28] நம்பிக்கையில்லா பிரேரனையை வெற்றி பெறச் செய்வதன் மூலம் பதவி இழக்கப்படலாம் .இந்நிறைவேற்று அதிகாரமுறை அறிமுகம் செய்யப்பட்டதன் பின்பு இலங்கையில் 04 ஜனாதிபதிகள் பதவி வகித்து இருந்தாலும் ஜனாதிபதி பிரேமதாச அவர்கள் 1993 ம் ஆண்டு பதவில் இருக்கும் போதே கொலை செய்யப்பட்டார்.

தற்போதைய ஜனாதிபதி அவர்கள் இரண்டாவது ஆட்சிக்காலத்திலேயே ஜனாதிபதி பதவி வகிப்பதுடன், எண்ணற்ற அமைச்சுப் பொறுப்புக்களை தன்னகத்தே கொண்டுள்ளார் .இவர் மீது (1994 – 2001 ) இக்காலப்பகுதியில் பல்வேறு ஊழல் குற்றச் சாட்டுக்கள் பத்திரிகை வாயிலாக சுமத்தப்பட்டு இருப்பினும் இவர் ஜனாதிபதி என்ற வகையில் குற்றஞ் சாட்டப்பட முடியாது உள்ளதால் இவரது அமைச்சு சம்பந்தமான நடவடிக்கைகள் சட்டத்திற்கு உட்படாது உள்ளது .

### ஜனாதிபதி மீதான இரண்டு குற்றச்சாட்டுக்கள் இந்தப் பகுதியில் தெரிவிக்கப்பட்டுள்ளன .

( அ ) அல்ஸ்தோம் லிமிடெட் எனும் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட இரயில் தண்டவாளங்கள் தொடர்பான டெண்டரின் போது நடை பெற்ற ஊழல் தொடர்பானது (சண்டே லீடர் 2001) இத்தகைய தண்டவாளங்கள் இரயில் பயணம் செய்யும் போது சூடாவதன் மூலம் வளையக்கூடியதாகவும் ,மலைநாட்டு பகுதிகளில் இவை உபயோகப்படுத்த முடியாதவையும் ஆகும் . தற்போது கணக்காயவாளர் நாயகம் சாதாரணமாக செய்யும் ஆய்வுகளின் போது இவை மிகவும் தரக் குறைவானவை என்பதோடு டெண்டர் நடைமுறை சம்பந்தமாக இடம் பெற்ற விசேட ஏற்பாடுகள் வெளியில் கொண்டு வர முடியுமானதா என்பதோடு CIABOC இன் பணிப்பாளர் நாயகத்தின் கூற்றுப்படி[29] CIABOC க்கு இதனை ஆராய்வு செய்வதற்கு போதியளவு புலனாய்வுத்திறன் இல்லை என குறிப்பிட்டுள்ளார் .

( ஆ ) அடுத்த முரண்பாட்டுக்குரிய பத்திரிகை குற்றச்சாட்டானது இலங்கை இறப்பர் கூட்டுத்தாபன செவினங்கள் தொடர்பானது . (அரசுக்கு சொந்தமான நிறுவனம் ) இலங்கை ரூபாவில் 900 மில்லியன் ரூபா கட்டிடத்திற்கு என எடுக்கப்பட்டதாகும். உரிய கட்டிடம் கட்டப்படாமையாலும் அதே நேரத்தில் இறப்பர் கூட்டுத்தாபனம் பிரதமரின் கண்காணிப்பிலுள்ள அமைச்சரவைக்கு வந்ததாகும் .எவ்வாறெனினும் , முன்னாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதமர் திரு.இரட்ணசிரி விக்ரமநாயக்கா அவர்கள் தனது விசாரனை அறிக்கையில் இந்த பணம் வழங்கப்பட்டது .கௌரவ ஜனாதிபதி அவர்கள் நிதி அமைச்சர் என்ற வகையில் வழங்கப்பட் பணிப்புரைகளுக்கு ஏற்பவே என குறிப்பிட்டுள்ளர் .
பிரதம மந்திரியோ அல்லது ஜனாதிபதியோ பத்திரிக்கை மீது மான நட்ட ஈடு கோர வில்லை. காரணம் ஜனாதிபதி மீது அமைச்சர் என்ற வகையில் குற்றச் சாட்டப்பட முடியுமா என்ற கேள்வியினால் தான் இந்த சந்தர்ப்பத்தில் எந்த நீதிமன்ற நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

## பாராளுமன்றம்

1948 ம் ஆண்டு அரசியலமைப்பு செனட் சபையும் ,பிரதிநிதிகளையும் அடிப்படையாகக் கொண்ட பிரித்தானிய இராணியை தலைவராக கொண்டதாக காணப்பட்டது . 1972 ம் ஆண்டு அரசியலமைப்பு ஜனநாயக சோஸலிச குடியரசாக பிரகடனப்படுத்தப்பட்டு பாராளுமன்றத்தை அடிப்படையாகக் கொண்டதாகவும் , 1978 ம் ஆண்டு அரசியலமைப்பு ஜனாதிபதி முறையையும் நிறைவேற்று அதிகாரம் ஜனாதிபதி கொண்ட அரசாங்கத்தையும் தோற்றுவித்தது .

பாராளுமன்றம் 225 பாராளுமன்ற உறுப்பினர்களையும் அவற்றில் 196 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டவர்களாகவும் 26 பேர் நியமிக்கப்பட்டவர்களாகவும்[30] அமைந்தது .இந்த தேர்தல்கள் பாராளுமன்ற .தேர்தல்கள் என அழைக்கப்பட்டு இதன் உறுப்பினர்கள் விகிதாசார பிரதிநிதுவ அடிப்படையில் தெரிவுசெய்யப்பட பாராளுமன்ற ஆயுட்காலம் 06 வருடங்களாக்கப்பட்டது[31] .தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர் தனது ஆசனத்தை வறிதாக்கும் போது ( இறத்தல் ) அதற்காக ஒரு தேர்தல் நடைபெறமாட்டாது..இவருக்கு பதிலாக மாவட்ட ரீதியாக சமர்ப்பிக்கப்பட்ட பெயர் பட்டியில் அடுத்துள்ள அதிகூடிய வாக்குகள் பெற்ற வேட்பாளர் அப்பதவிக்கு தெரிவு செய்யப்படுவார் .

அரசியலமைப்பு பல்வேறு விதமான அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் ,அமைச்சரவை அந்தஸ்து இல்லாத அமைச்சர்களை நியமிக்க இடமளிக்கின்றது .தற்போதைய அமைச்சரவை 32 அமைச்சரவை அமைச்சர்களையும் 03 பிரதி அமைச்சர்களையும் ,27 அமைச்சரவை அந்தஸ்து இல்லாத அமைச்சர்களையும் கொண்டதாக உள்ளது .பெரும்பான்மையான இந்த அமைச்சர்கள் தேர்தலில் தெரிவு செய்யப்பட்டவர்கள் எனினும் சிலர் தேசிய பட்டியலில் தெரிவு செய்ப்பட்டவர்களாகவும் ,எல்லா வகையான இந்த அமைச்சர்களுக்கும் பாராளுமன்ற வாக்குரிமை இருக்கின்றது எனினும் அமைச்சரவை அமைச்சர்களுக்கு மட்டுமே அமைச்சரவை வாக்களிப்பு உரிமை உள்ளது .இந்த பரிபாலன அமைச்சர்கள் பொது நிர்வாகத்தை வரிசையாக துண்டுகளாக்கி 59 அமைச்சர்களாக குறைந்துள்ளார்கள் .

கூட்டு அரசாங்கத்தில் அரசும் , ஜனாதிபதியும் இரு வேறு கட்சிகளாக இருக்கும் போது எவ்வாறு இயங்குவது என்பது பற்றி அரசியலமைப்பில் அலட்சியப்படுத்தப்பட்டுள்ளது .தற்போது 2001 ல் தெரிவு செய்யப்பட்ட அரசும் இவ்வாறானதே .இதில் நாட்டின் தலைவர் ஜனாதிபதி ஒரு கட்சியை சார்ந்தவராக இருக்க அமைச்சரவையும் அதன் அமைச்சர்கள் அனைவரும் மற்றொரு கட்சியை சேர்ந்தவர்கள் ஆவர் .எல்லா அமைச்சர்களும் பிரதம மந்திரியின் கட்சியை சார்ந்தவர்கள்[32] ஆதலால் ,பிரதம மந்திரின் ஆலோசனைக்கு ஏற்பவே பாராளுமன்றத்திற்கு விசுவாசமான வகையில் செயலாற்றுவர் . ஜனாதிபதியால் பாராளுமன்றத்தில் அதிகூடிய பெரும்பான்மை பெறும் கட்சியின் தலைவர் பிரதம மந்திரியாகவும் அவரது அமைச்சரவையும் நியமிக்கப்படுகின்றது .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வேளையில் தான் பின்வருமாறு கேள்விகள் அமைகின்றன .
பாராளுமன்ற தேர்தல் என்பது என்ன ?

பரீட்சார்த்தமான விடை கிடைக்கப்பட்டுள்ளது .ஜனாதிபதி தான் பிரதமரை நியமிப்பர் .இவ்வாறு நோக்கும் போது இந்த கேள்விக்கான உரிய பதில் கிடைக்கவில்லை .இந்நிலையில் கூட்டு அரசாங்கம் எப்படி இயங்குவது .அதே நேரத்தில் பாராளுமன்றில் சகல அதிகாரங்களையும் கொண்டவராக பிரதம மந்திரி திகழ்கின்றார் .ஜனாதிபதி தனது அதிகாரங்களை பாவித்து ஓராண்டின் பின்னர் பாராளுமன்றத்தை கலைப்பாராயின் எத்தனை பலம் சார்ந்த பாராளுமன்றமும் கலைக்கப்படும் [33]. 2003 ம் ஆண்டு நவம்பர் மாதம் ஜனாதிபதி இத்தகைய ஒரு நடவடிக்கையை மேற்கொண்டார் .அதாவது ,பாராளுமன்றத்தின் அமைச்சரவையில் இருந்து 03 அமைச்சுக்களை பொறுப்பேற்றுக்கொண்டார் .(பாதுகாப்பு ,உள்நாட்டு அலுவல்கள் ,ஊடகம் )

அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஒரு சிறிய அளவு தொகையினை தங்கள் தேர்தல் தொகுதியின் அபிவிருத்திக்காக செலவீட பண ஒதுக்கீடு செய்யப்படும் .இது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மட்டும் தான் அமைச்சரவை அந்தஸ்து உள்ள உறுப்பினர்களும் இதில் இருந்து சற்று மாறுபாடாக அவர்களுக்கு தீர்மானங்களை மேற்கொள்ளும் அதிகாரம் உள்ளது .

1 .பொதுச்சேவை நியமனங்கள்
உ.பதவியுயர்வுகள் போன்ற அதிகாரங்கள் உள்ளன .

இறுதியாக குறிப்பிடப்பட்ட இந்த இரண்டு வகையான அதிகாரங்களே பொது நிர்வாக துறையின் பலவீனம் காரணமாக பொது டெண்டர் நடைமுறையிலும் ,மனித வள கொள்கையிலும் பாரிய ஊழலுக்கு வித்திடுகின்றன .

பாராளுமன்றத்தின் சகல உறுப்பினர்களும் தங்களது பதவியின் பின் ஒரு வருட காலத்திற்குள் தங்களது சொத்துக்கள் பற்றிய விபரங்களைப் தங்களது பாராளுமன்ற சபாநாயகர் அவர்களுக்கு சமர்ப்பிக்க வேண்டும் .இது 1975 ம் ஆண்டின் இல 01 மற்றும் 1978 ம் ஆண்டின் சட்ட இணைப்புக்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது .எவ்வாறெனினும் ,திரு K.M.D சில்வா அவர்களின். "இலங்கையின் ஊழல் பாராளுமன்றம்" எனும் அறிக்கைப்படி இந்த இரகசியப் பிரகடனம் மூலமாக குறிப்பிடுவது தன்மய வெற்றியும் பொதுவாக இது பொதுத்துறைஅதிகாரங்கள் ,அதிகாரிகள், இருபரவலாக பரிசீலிக்கப்படுவதில்லை .என்பதேயாகும் .

நடைமுறையில் இப்படி பரவலாக்கப்பட்டு இருப்பினும் பொது மக்களில் இருந்து தனிப்பட்டவர்களும் ,அல்லது யாதாயினும் வகையில் இந்த விடயத்தை நீதிமன்றம் எடுத்துச்செல்லலாம். அங்கு தனிப்பட்ட ரீதியாகவோ அல்லது பாராளுமன்ற அதிகாரிகளோடு விசாரனை செய்யும் போது குற்றவாளியாக்கப்படுகின்றன .தங்களது சொத்து சம்பந்தமான விபரங்கள் சேகரிக்கப்படுவதில்லை. இந்த சொத்து விபரங்கள் தனிப்பட்டவர்களால் தெரியப்படுத்தப்படும் போது அவை சம்பந்தமாக நீதிமன்றில் வழக்கு தொடரப்படலாம் .பாராளுமன்றத்திலும் இவ்விடயம் பற்றி ஆய்வு செய்யலாம் . .உண்மையில் இந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் சொத்துக்களை உரியவாறு பிரகடனம் செய்வார்கள் எனின் நிச்சியமாக இவை எப்போதும் கட்டுப்பட்டே இருக்கும் .

இவ்வகையில் எத்தகைய விபரமும் வெளியிடப்படக்கூடாது .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியற் கட்சிகள்

சகல அரசியற் கட்சிகளும் தேர்தல் ஆணையாளரிடம் பதிவு செய்தல் வேண்டும் . பாராளுமன்ற தேர்தல்கள் சட்டம் (இணைப்புடன் ) இல 29 ,1988 க்கு அமைவாக கட்சியின் செயலாளர் கட்சியின் அமைப்பு

இலங்கையில் 51 கட்சிகள் அரசியற் கட்சிகளாக தேர்தல் ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன .எவ்வாறெனினும் இரண்டு பிரதான கட்சிகளான U N P மற்றும் S L F P தனது பங்காளி கட்சிகளுடன் அரசியலில் ஆதிக்கம் செலுத்துகின்றது .பொதுத்துறையில் இருந்து கட்சி தனது அடுத்த தேர்தலுக்கு ஒரு நபருக்கு 50 சதம் என்ற அப்படையில் கடந்த முறை கிடைத்த வாக்குகளின் அடிப்படையில் பணத்தை பெறுகின்றது .

இலங்கையில் அரசியல் கட்சிகளோ தங்களது வேட்பாளர்களோ தங்கள் தேர்தல் சம்பந்தமான வரவு செலவுகளை சமர்ப்பிக்க வேண்டுமென சட்டத்தில் கோரப்படவில்லை . மேலும் ,அவர்கள் தங்கள் உறுப்பினர்களுக்கு கூட கட்சியின் வரவு செலவுகளை காட்டிட வேண்டும் எனும் அவசியமில்லை .தனியார்துறை ஒவ்வொரு தேர்தல் அடிப்படையிலும் இரு கட்சிகளினதும் பிரதான நிதி முகவராக செயற்படுகின்றது .இது ஒவ்வொரு தேர்தலிலும் வழமையான நடைமுறையாக இடம்பெறுகின்றது .

1978 ம் ஆண்டு அரசியலமைப்பு இலங்கையின் தேர்தல் மாவட்டங்களை 22 ஆக பிரிக்கின்றது .இதற்காக அரசியற் கட்சிகளுக்கும் அதன் வேட்பாளர்களுக்கும் அதிகப் பணம் செலவாகின்றது .இதற்காக பல்வேறு வகையான உதவிகளை தனியாரிடமிருந்து பெறுகின்றது .இதற்காக பண உதவி செய்த தங்களது ஆதரவாளர்களுக்கு தேர்தலின் பின் தொடர்ந்து ஏதாவது வேலை வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்பதற்காக ஊழலில் ஈடுபடுவது தவிர்க்க முடியாதது ஆகின்றது. 30 வருடங்களாக பத்திரிகையில் பல்வேறு வகை குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு இருப்பினும் இதுவரை அரசியல் வாதிகள் யாரும் இலங்கையில் குற்றவாளியாக ஆக்கப்படவில்லை .

## தேர்தல்கள் ஆணைக்குழு

இலங்கைப்பிரஜைகள் யாரும் 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் வாக்களிக்க தகுதிவுடையவர்களாவர் .எனினும் வெளிநாட்டில் தொழில் புரிவோருக்கு வாக்களிக்க வாய்ப்பு இல்லை .2001 ம் ஆண்டின் கணக்கெடுப்பின் படி வாக்காளர் தொகை 12 மில்லியன் என கணக்கிடப்பட்டுள்ளது .இதில் ஒரு மில்லியன் வாக்களர்கள் வெளிநாட்டில் தொழில் புரிபவர்கள் .

தேர்தல் ஆணையாளர் அரசியலமைப்பு ரீதியாக தேர்தல் இடாப்பை வருடாந்தம் தயாரிக்க பணிக்கப்பட்டுள்ளதுடன்அவற்றை பின்வரும் வகையில் நான்கு தேர்தலுக்கும் பயன்படுத்ததக்க வகையில் பேணிவருதல் வேண்டும் .

| | |
|---|---|
| 1 .ஜனாதிபதி தேர்தல். | 06 வருடங்களுக்கு ஒரு முறை |
| 2.பாராளுமன்ற தேர்தல். | 06 வருடங்களுக்கு ஒரு முறை |
| 3.மாகாணசபை தேர்தல் | 05 வருடங்களுக்கு ஒரு முறை |
| 4.உள்ளுராட்சி சபை தேர்தல் | 04 வருடங்களுக்கு ஒரு முறை |

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்கள் நடைபெறுவதற்கும் வன்முறைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிர்ப்பதற்கும் சர்வதேச கண்காணிப்பாளர்களை அழைப்பதற்கு தேர்தல் ஆணையாளர் தீர்மானித்துள்ளார் இந்த கண்கானிப்பாளர்கள் தங்கள் பணியின் முக்கியத்துவத்தை ஏற்படுத்தியதன் விளைவாக சுதந்திர தேர்தல் ஆணைக்குழு[34] கோரிக்கை வலுப்பெற்றது . 17 வது அரசியலமைப்பு சீத்திருத்தம் சுதந்திர தேர்தல் ஆணைக்குழுவினை நியமிக்க அதிகாரம் வழங்கியது எனினும் அரசியலமைப்பு சபையில் பிரேரிக்கப்பட்டவர்களை நியமிப்பதற்கு ஜனாதிபதி இதுவரை முன்வரவில்லை . இத்தாமதமானது பழைய திட்டப்படி நியமிக்கப்பட்ட தேர்தல் ஆணையாளரை தனது பதவியிலிருந்து விலகுவதற்கு ஜனாதிபதி அனுமதி அளிக்காமைக்கு எதிராக உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மனுவை தாக்கள் செய்வதற்கு வித்திட்டது .எனினும் அரசியலமைப்பு தேவைக்கருதி இம்மனு உயர்நீதி மன்றில் பின்னர் நிராகரிக்கப்பட்டு தொடர்ந்து தேர்தல் ஆணையாளர் கடமையாற்றி வருகின்றார் . (BBC செய்தி 2003 )

## உயர் கணக்காய்வு திணைக்களம்

கணக்காயவாளர் திணைக்களம் போதிய அளவில் சகல விதமான துறைகளிலும். கணக்காய்வுகளைமேற்கொண்டு வருகின்றது .தேசிய ,மாகாண ,மற்றும் உள்ளூர் என பல்வேறு மட்டங்களிலும் அரசாங்கத்தின் திணைக்களங்கள் கணக்காயவு செய்யப்படுகின்றன .

கடந்த வருடங்களில் கணக்காய்வு திணைக்களம் பெரும்பாலான கணக்காய்வுகளை முடித்துள்ளது .இதன் மூலம் பல நிறுவனங்களில் சமர்ப்பிக்கப்படாத கணக்கு அலுவல்கள் முடிவுக்கு வந்துள்ளன .கணக்காய்வு திணைக்கள அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட ஊக்குவிப்பு ஊதியம் பெரும்பாலும் நல்ல பயனை தந்தது

எனினும் பொதுக்கணக்குகள் துறையிலும் மற்றும் பொது நிறுவனத்துறையிலும் இன்னும்

குழு உடனடி நடவடிக்கைக்காக இதனை அவசியப்படுத்துகின்றது .

எனினும் பாராளுமன்றத்துக்கு கிரமமாக மாதந்தோறும் கூறுவதில்லை ஆகையாலும் பாராளுமன்றத்திற்கு இது போதியளவு தொழிநுற்ப உதவி செய்யக் கூடிய ஆளணி பற்றாக்குறையாலும் இந்த பணி நிறைவு பெற வில்லை . இத்தோடு ஒழுக்க நடவடிக்கைகளும் முறையான தீர்வுகளும் அபூர்வமாகவே இடம் பெறுகின்றன.இதன் காரணமாகவே ( மூன்று வருடங்களுக்கு ஒரு முறை ) COPE / COPA அறிக்கைகள் பாராளுமன்ற விவாதங்களில் உரிய தகவல்களை தரக்கூடியதாக இருப்பதில்லை.

மாற்றுக்கொள்கைகள் நிறுவனத்தின் வெலிக்கடையைச் சார்ந்த அஷங்க என்பவர் குறிப்பிடுகையில் COPA கணக்காய்வு திணைக்களம் அமைச்சரவை திணைக்களங்கள் விசேடமாக அவற்றில் மேலதிக திட்டங்களை ஆராய்வு செய்து அதனது கண்டுப்பிடிப்புக்களை தனது பரிந்துறையுடன் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கின்றது .நிதி அமைச்சு இந்த செயற்பாடுகளை பொது நிதி திணைக்களம் ஊடாக மேற்பார்வை செய்கின்றது. COPA இந்த அறிக்கைகள், நல்லதொரு தொழில் நுட்பம் இன்மையினாலும் ,தொடரான ஒன்றுகூடல் ( கூட்டம் ) இன்மையினாலும் இந்த அறிக்கைகளை ஆராய்வதற்கு தாமதமாகின்றது .மற்றும் தொடரான ஒன்றுகூடல் இன்மையும் ,தொடரான மேற்பார்வை இன்மை காரணமாகவும் இதற்கான நடவடிக்கைகள் நினையாப் பிரகாரம் தாமதம் அடைகின்றது .பொதுத்துறைக்குழுவும் ,பொதுநிறுவனங்களின் குழுவும் தனது அறிக்கைகள் வெளிக் கொணராத காரணமாக இவை ஊடகங்களுக்கும் ,பொது மக்களுக்கும் துலாம்பரம் ஆக்கப்படுவதில்லை .அரசும் இதன் அறிக்கைகள் தொடர்பில் எதுவிதமான நடவடிக்கைகளும் குறிப்பிட்ட காலப்பகுதியில் எடுப்பதில்லை .இது பொறுப்பற்ற தன்மைக்கான வழிகாலாக அமைகின்றது .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னைய நிர்வாக காலத்தில் COPE / COPA என்பவற்றின் தலைமைப் பொறுப்பு ஆளும் கட்சியின் கையிலேயே இருந்தது .தற்போதைய அரசாங்கம் இதில் மாற்றம் கொண்டு வந்து COPE / COPA என்பவற்றின் தலைமைப் பொறுப்பினை எதிர் கட்சிகளுக்கு கொடுத்தது .இன்னும் இந்த குறைபாடு தொடர்வதுடன் COPE / COPA என்பவற்றின் செயற்பாடுகள் இன்றும் பாராளுமன்றத்தில் தலையீட்டு குறிப்பிட்ட நபர்களுக்கு எதிராக எதுவித நடவடிக்கையும் எடுக்க முனையவில்லை. உலக வங்கியின் இலங்கை வதிவிட பிரதிநிதி .திரு .பீட்டர் ஹெரால்ட் அரசின் ஊழலுக்கு எதிரான நேரடி பிரசாரத்தை விட பாராளுமன்றம் மூலம் இதற்கு எதிராக முழுமையான பயனை அடையலாம் என குறிப்பிடுகின்றார் .

வழமையான பிரச்சனை யாதெனில் இதுவரை நிரப்பப்படாதிருக்கும் பதவி நிலைகள் தொடர்பானது .(அனுமதிக்கப்பட்ட 1348 வெற்றிடங்களில் 328 மட்டுமே நிரப்பப்பட்டுள்ளது .87 கணக்காய்வு தலைவர்கள் உட்பட ) தொழில் தேர்ச்சி அலுவலர் மிகவும் குறைவு .விசேடமாக கணனி முறையிலான கணக்கு பரிசோதகர்கள் மிகவும் குறைவு . மேலும் , முரண்பாடான கணக்குகள் தொடர்பிலும் பணப்பெறுமதியிலான கணக்குப் பரிசோதனை தொடர்பிலும் எவ்வாறெனிலும் ஒழுங்கு முறையிலான பரிசோதனை முறை குறைவு தொடர்பாகவும் ,நிறுவனத்திறன் இன்மையும் நிறுவனங்கள், சார்பாகவும் வேலைத்திட்டம் அவசியம். திட்டமிடப்பட்ட கணக்காய்வும் ,திடீர் கணக்காய்வும் வண்டப்படுகிறது .

கணக்காய்வாளர் நாயகத்திற்கு அரசுக்கு பாதி சொந்தமான நிறுவனங்களின் கணக்குகளை ஆய்வு செய்வதற்கு சட்டத்தில் இடமளிக்கப்படுவதில்லை .கவனத்தில் கொள்ளாத இலங்கை விமான சேவை ,இலங்கை தொலை தொடர்பு திணைக்களம் போன்ற தனியாரினால் முகாமைத்துவம் செய்யப்படுபவை மற்றும் பொது சொத்துக்களை பெருந்தோட்ட கம்பனிகள் போன்றவை .திரு.வெலியமுன ( ௨00௨ )அவர்களது பொதுக்கணக்காய்வு சம்பந்தமான மதிப்பீட்டின் படி அரசுக்கு இணைக்கப்பட்டுள்ள பல நிறுவனங்களின் கணக்குகள் சமர்ப்பிக்கப்படுவதில்லை என்பதோடு பாராளுமன்றத்திற்கும் இவை சமர்ப்பிக்கப்படுவதில்லை .அரசாங்க முகவர்களின் தனிப்பட்ட கணக்குகள் மட்டுமே எழுதப்பட்ட கணக்குகள், கணக்கு ஆய்வு செய்யப்பட்டு பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது .

மேலும் ,தற்போது சமாதான நடவடிக்கைகள் மத்தியில் நிறுவப்பட்டுள்ள SIHARN (சிரான்) அமைப்பு LTTE மற்றும் அரசினால் நிர்வகிக்கப்படுகின்றது .பாராளுமன்றம் குறிப்பிட்டால் அன்றி இந்நிறுவனம் அரசின் கணக்காய்வுக்கு உட்பட முடியாது சமாதான நடவடிக்கைகள் காரணமாக சிரான் அமைப்பு வேறு யாதாயினும் வகையில் வேறு ஒரு அமைப்பாக நிர்வகிக்கப்படின் அது அரசின் எந்த விதமான நேரடி கட்டுப்பாட்டிற்கும் உரியதொன்றாக அமைய மாட்டாது .எவ்வாறெனினும் ஜூன், ௨00௩ டோக்கியோ உதவி வழங்கும் நாடுகளின் மகாநாட்டில் வட – கிழக்கு திட்டங்களில் முக்கிய நிறுவனமாக அறிமுகம் செய்யப்பட்டது .

தற்போது வெளிவாரி வள திணைக்களத்தின் வழிகாட்டலில் கணக்காய்வாளர் திணைக்களம் உலக வங்கியுடன் கணக்காய்வாளர் திணைக்கத்திற்கு முதலீட்டு கட்டிட தேவைகளுக்கு நிதி வழங்குமாறு பேச்சு வார்த்தை நடாத்துகின்றது .மற்றும் கணக்காய்வாளர் திணைக்களம் வேறு எந்தவிதமான திணைக்களம் ஊடாகவும் கணக்காய்வு செய்யப்படுவதில்லை என்பதும் அறியப்பட்டுள்ளது .

கணக்காய்வாளர் நாயகம் அரசியலமைப்பு சபையின் பிரேரித்தலின் பேரில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டு அரசியலமைப்பு சபையில் அங்கீகரிக்கப்படுகின்றார். 17 வது அரசியலமைப்பு சீர்த்திருத்தத்தின் 153 (01) 71 ன் படியும் 41 C ன் படியும் பிரிவு 18 க்கு அமைய கணக்காய்வு நாயகம் பதவி பின்வரும் வகையில் வறிதாகின்றது .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ) மரணம் .

(ஆ) ஜனாதிபதிக்கு எழுத்து மூலம் அறிவித்த இராஜனாமா .

(இ) 60 வயதை அடைதல் .

(ஈ) ஜனாதிபதியால் பதவி நீக்கம் , சுகயீனம் (உடலியற் மனோநிலை)

(உ) பாராளுமன்ற அறிக்கை காரணமாக ஜனாதிபதியால் பதவி நீக்கம் .

## நீதித்துறை

இலங்கையின் உயர் நீதி மன்றம் உச்சநிலை நீதி மன்றமாக விளங்குகின்றது .மேன்முறையீட்டு நீதிமன்றம் அதற்கு அடுத்த படியில் உள்ளது .(மாகாண மேல் நீதிமன்றங்கள் வர்த்தக மேல் நீதிமன்றம் கொழும்பு மாவட்ட நீதிமன்றங்கள் (சிவில் நடவடிக்கை ) மற்றும் நீதிவான் நீதிமன்ஙங்கள் (குற்ற நடவடிக்கைகள்) இலங்கையில் பல்வேறு பகுதிகளிலும் காணப்படுகின்றன . நீதிச்சேவை ஆணைக்குழு பிரதம நீதியரசர் மற்றும் இரண்டு உயர் நீதிமன்ற நீதியரசர்களை அங்கத்தவராக க கொண்டு இயங்குகின்றது .நீதிச்சேவை ஆணைக்குழு நீதித்துறை நிர்வாகத்தை பேணுவதுடன் பதிவு செய்யப்பட்ட மனித வளங்களை பேணுவதுடன் மேலதிகமாக நியமனம் ,ஒழுக்காற்று பதவி நீக்கம் ,போன்றவற்றை செய்கின்றது .

பிரதம நீதியரசரையும், மேன்முறையீட்டு நீதி மன்ற தலைமை நீதிவானையும் ,நீதிபதிகளையும் ,மேன்முறையீட்டு நீதிபதிகளையும் நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதியின் கையில் உள்ளது .அரசியலமைப்பு சபை பிரேரித்தலுடன் ஜனாதிபதியின் நியமனத்தை அரசியலமைப்பு சபை அங்கீகரிக்கும் .இவற்றை செயற்படுத்தும் போது அரசியலமைப்பு சபை பிரதம நீதியரசரினதும் சட்ட அதிபரினதும். கருத்தினை பெற்றுக்கொள்ளும் .

அரசியலமைப்பின் 107 (01 ) (41 C ) பிரிவு 10, 17 வது சீர்த்திருத்தம் .

**உயர் நீதிமன்றம் , மேன்முறையீட்டு நீதிமன்றம் ,மற்றும் ஏனைய நீதிமன்றங்களின் நீதிபதிகளை அகற்றுவதற்கான நடைமுறை .**

1 .பதவிக்காலத்தின் போது நல்லொழுக்கம் கடைப்பிடிக்கப்படாமை .

2.இவர்கள் பாராளுமன்றத்தில் வாசிக்கப்பட்ட அறிக்கை ஒன்றின் மீது பாராளுமன்றம் ஜனாதிபதிக்கு அதனை சமர்ப்பிக்கும் பட்சத்தில் ஜனாதிபதியால் பதவி நீக்கம் செய்யப்படும்.

3.பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட இதனை பாராளுமன்றில் 2/3 பெரும்பான்மை பெறுவதுடன், ஒழுக்கமீறல் உறுதி செய்யப்படல் வேண்டும் .

4. பதவி நீக்கலுக்கான அறிவித்தலை பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு அது 2/3 பெரும்பான்மையில் அங்கீகரிக்கப்படல் வேண்டும் .

5 அறிவித்தல் , ஒழுக்க மீறல் சம்பந்தமான முழுமையான அறிக்கையை . கொண்டதாக இருத்தல் வேண்டும்.

6.அறிவித்தல் ஏற்றுக்ககொள்ள கூடியதொன்று சபாநாயகர் கருதுமிடத்து பாராளுமன்றக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவுக் குழு ஒன்றை ஏழு உறுப்பினர்களுக்கு குறையாத வகையில் அமைத்து இவ்விடயம் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கையை சமர்ப்பிக்க கோர வேண்டும் .

7.குற்றம் சாட்டப்பட்டுள்ள நீதிபதி தனக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் எழுத்து மூலம் விளக்கம் பாதுகாப்பிற்காக அளிக்கலாம் ,நேரடியாக ஆஜராகலாம் ,அல்லது தனது பிரதிநிதியூடாக சமூகமளித்து விளக்கமளிக்கலாம்.

8.தெரிவுக்குழு அறிக்கை கிடைக்கப்பெற்றதும் அதனை பாராளுமன்றில் சமர்ப்பித்து அதனை பின் ஜனாதிபதிக்கு பாரப்படுத்திய பின் அவரை ஜனாதிபதி பதவி நீக்கம் செய்யலாம் .

(அரசியலமைப்பு 017 (02) (03) மற்றும் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 78 A)

உயர் நீதிமன்ற நீதியரசர்களை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உள்ளது .இது சட்டமா அதிபருடன் கலந்தாலோசித்து சிபாரிசுடன் முடிவெடுக்கப்படும். .(அரசியலமைப்பு III (02) பிரிவு 12 ,17 வது அரசியலமைப்பு சீர்த்திருத்தம் இணைப்பு )

உயர் நீதிமன்ற நீதியரசர்களை பதவி நீக்கும் அதிகாரம் ஒழுக்கம் சம்பந்தமாகநீதிச்சேவை ஆணைக்குழுவின் சிபார்சின் பேரில் ஜனாதிபதியால் .
(அரசியலமைப்பு III (02) b 17 சீர்த்திருத்தம் )

நீதிச்சேவை ஆணைக்குழ நடைமுறைச் சட்ட ஒழுங்கு முறைகளை வகுத்து அதனை செயற்படுத்தி வருகின்றது ..

நீதித்துறை தேசிய அளவில் செயற்பட பிரதம நீதியரசர் இதனது தலைவராவார்.அவரது நியமனம் தொடர்பில் 03 வெவ்வேறு அடிப்படை உரிமை மீறல் தாக்கள் செய்யப்பட்டுள்ளது .(ஜயசேகர, ஜவன் ,அபேநாயக்க ) எனினும் இந்த விடயத்தில் உயர் நீதிமன்றுக்கு பிரதம நீதியரசரை அகற்றுவதற்கு அதிகாரம் இல்லை .பாராளுமன்றுக்கு மட்டுமே இதற்கான அதிகாரம் உண்டு மேலதிகமாக 2001 ம் ஆண்டு எதிர்கட்சி இவருக்கு எதிராக பாராளுமன்றில் நம்பிக்கையில்லா பிரேரனைக்கொண்டு வந்தது. எனினும் பாராளுமன்றம் உரிய திகதிக்கு முன் கலைக்கப்பட்டதினால் இது வலு இழந்தது .பின்னர் எதிர்கட்சி 2003 ல் இதற்கான ஒரு பிரேரணையை முன் வைத்தது.இதுவும் ஜனாதிபதி பாராளுமன்றை ஒத்தி வைத்ததினால் வலு இழந்தது .

நீதித்துறை தொடர்பாக ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல் நிறுவனம் நடத்திய உள்ளக ஆய்வின் மூலம் நீதித்துறை பாரியளவிலான ஊழல் நிறுவனமாக கணிக்கப்பட்டுள்ளது .இத்துறையின் நீதிபதிகள் தொடர்பில் CIABOC க்கு எதுவித ஊழல் முறைப்பாடுகளும் முன்வைக்கப்படவில்லை. எனினும் ,இத்துறையின் கீழ் மட்ட உத்தியோகத்தர்கள் ,பொலிஸ் மற்றும் சட்டத்தரணிகள் மூலம் எவ்வாறெனினும் வழக்குகள் தேக்கமடைகின்றன .முக்கியமாக வழக்குகள் தாமதமடைவதும், ,வழக்குகள் தேடப்படவதும் ,மதிப்பீட்டு மூலம் நீதிமன்ற வழக்குகள் ஏன் தாமதமடைகின்றன என ஆராயலாம் .பெரும்பாலான அபிப்பிரயமானது கொடுப்பணவு சரியான நபருக்கு வழங்கப்படுவதன் மூலம் வழக்குகளை துரிதப்படுத்தலாம் ,அல்லது இயன்றவரை காலம் தாழ்த்தலாம் ,இதைவிட இலகுவானது ஒரு தரப்பு நீதிமன்றுக்கு சமூகமளிக்காவிடின் வழக்கு நிராகரிக்கப்படும் .

முக்கியமாக நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலகம் நிதிச்சேவை ஆணைக்குழு உறுப்பினர் மூவரின் மூலமாக அதனது கொள்கைகளை அமுல்படுத்துகின்றது .தற்போது உலக வங்கியின் பிரதான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்களிப்புடனான நீதிச்சேவை மறுசீரமைப்பு நடைபெறுகின்றது .எவ்வாறெனினும் இலங்கையில் இன்னும் தாமதமடைகின்றன .இந்த மறுசீரமைப்பு திட்டம் அமுலாவது வர்த்தகச் சட்டம், மற்றும் நீதிபதிகளின் பயிற்சி ,நீதிமன்றங்கள் மறுசீரமைப்பு ,யுத்தப் பிரதேசங்களில் மட்டுமேயாகும் .எனினும் ஒரு நம்பிக்கை தெரிகின்றது . எவ்வாறெனினும் ஜுன் 18 2003 டெய்லி நியூஸ் அறிக்கைப்படி பாராளுமன்றத் தெரிவுக் குழு அதனது ஆய்வில் இலங்கையின் நீதிமன்ற நடைமுறை ,நீதித்துறை நீதிமன்ற உத்தியோகத்தர், நீதிமன்றம் ,பொலிஸ் ,சிறைச்சாலை ,போன்றவை தொடர்பில் ஆராய்ந்து அதனது சிபார்சுகள் மறுசீரமைப்புக்காக சமர்ப்பிக்க உள்ளதாக குறிப்பிட்டு உள்ளது .

நீதித்துறை அமைச்சு நீதிமன்றின் பௌதீக வள தேவைகளுக்கு பொறுப்பானது என்பதுடன் எல்லா விடயங்கள் தொடர்பிலும் சட்டத்திணைக்களத்துடன் மற்றும் சட்டமாதிபருடன் இயங்குகின்றது .சிற்றூழியர் தொடர்பில் (சுத்திகரிப்போர் ,சாரதிகள் ,தட்டச்சு செய்வர் ) நீதிமன்ற சிற்றூழியர்கள் பொது நிர்வாக அமைச்சிக்கு உடையவர்கள் ஆதலால் அவர்கள் எச்சந்தர்ப்பத்திலும் வேறு அரச திணைக்களங்களுக்கு இடமாற்றம் செய்யப்படலாம் .

## சிவில் சேவை

பொது நிர்வாக அமைச்சின் கீழ் ஏறக்குறைய ஒரு மில்லியனுக்கும் அதிகமானோர் உள்ளனர் .இவர்களில் ஒரு சாரார் தனியார் துறையிலும் உள்ளனர் .உதாரணமாக (இலங்கை விமான சேவை ,இலங்கை தொலை தொடர்பு திணைக்களம் ) நேரடியாக பணிப்புரிவோர் தேசிய மட்டத்திலும் ,எட்டு மாகாண சபைகளிலும் ,உள்ளூர் ஆட்சி சபைகளின் பின்னரான ஏற்பாட்டில் 18 மா நகர சபைகளிலும் ,37 நகர சபைகளிலும் 256 பிரதேச சபைகளிலும் கடமையாற்றுகின்றனர் .

59 தேசிய அமைச்சர்களிலும் உள்ள பல திணைக்களங்கள் பல்வேறாக்கப்பட்டு அரை அரசாங்கம் மாதிரி திணைக்களங்களாலும் உதாரணமாக பல்கலைக்கழகங்கள் ,இலங்கை மன்றம் போன்றவையாகும். இவ்வாறு உயர்ந்த தர வேலை இன்று வினைத்திறன் அற்றதாகவும் மிகக் குறைந்தளவு வேதனம் காரணமாக ஊழல் மலிந்ததாகவும் காணப்படுகின்றது .

இந்த பிரச்சனைகளை அடையாளம் கண்டதன் விளைவாக முன்னைய அரசாங்கம் ஜனாதிபதி செயலகத்தின் ஊடாக நிர்வாக மறுசீரமைப்பு பிரிவு ஒன்றை நிறுவி அதனை தேசிய நிர்வாக மறுசீரமைப்பு சபையாக கையளித்தது .இதன் பயனாக சிறியளவு முன்னேற்றம் காணப்படினும் புதிய அரசாங்கம் பிரதம மந்திரியின் காரியாலயத்தின் ஊடாக நிர்வாக மறுசீரமைப்பு குழு ஒன்றை நிறுவி மக்களின் தேவைக்கருதி செயற்பாட்டினை செய்துள்ளது .

எவ்வாறெனினும் ,இந்த செயற்பாட்டின் ஆரம்பமாக (நிர்வாக மறுசீரமைப்பு செயல் திட்டம் 2002 ) ஊழல் தொடர்பான எதுவித வெளிப்பாட்டையும் காட்டவில்லை .சிறப்பம்சம் ,திணைக்கள தலைவர்களை பேட்டி கண்ட போது கணனிமயப்படுத்தல் மட்டத்தின் காரணமாக ஊழல் குறைவடைந்துள்ளது .என்பதாக கருத்து தெரிவித்தனர் .இலங்கையின் முதல் தர வர்த்தக சஞ்சிகை அதனது வாசகர்களின் ஆய்வின் மூலம் ஊழல் இடம் பெறுதல் சுங்கம் மற்றும் கலால் திணைக்களம் 52 % மிக உயர்ந்த நிலையிலும் பொலிஸ் 26 % அரசியல் 20 % நீதிமன்றம் 02 % என ஆய்வு செய்துள்ளது .(இலங்கை மாதாந்த சஞ்சிகை 2003 )

1972 ம் ஆண்டு அரசியல் யாப்பு இடமாற்றம் , நியமனம் ,பதவியுயர்வு ,ஒழுக்காற்று ,கட்டுப்பாடு தொடர்பில் அமைச்சர்களின் அதிகாரத்தினை இல்லாதொழித்ததன் காரணமாக 30 வருடங்களின் பின்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுத்துறை மிஞ்சிய ஆளனி உடையதாக மொத்தமாக 9 09 660 ஆளனியினர் ,இவற்றுள் அரசாங்கத்துறையில் 3 29 297 பேரும் ,மாகாண பொதுச் சேவையிலும் தனியாரிலும் 2 71 988 பேரும் காணப்படுகின்றனர்.

1978 ம் ஆண்டு அரசியலமைப்புக்கு 17 வது அரசியலமைப்பு சீர்த்திருத்தம்[36] கொண்டுவரப்பட்டதன் விளைவாக பொதுச் சேவை ஆணைக்குழு நிறுவப்பட்டது .இதன் மூலமே நியமனங்கள் ,இடமாற்றம் ,ஒழுக்காற்று ,கட்டுப்பாடு மற்றும் பொது ஊழியர் பதவி நீக்கம் போன்ற அதிகாரங்கள் வழங்கப்பட்டன.அமைச்சரவை அதிகாரம் நியமனம் தொடர்பிலானது பொதுச் சேவையின் சுதந்திரமாக நியமனம் கருதப்பட்டது .அமைச்சரவை செயலாளர்கள் மற்றும் திணைக்கள தலைவர்கள் நியமனம் தொடர்பில் பொதுச்சேவை ஆணைக்குழுவின் கட்டுப்பாட்டிற்கு உடையவர்கள் ஆளானார்கள் . 20002 பொதுச் சேவை ஆணைக்குழு அரசியலமைப்பு சபையின் சிபார்சுடன் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டதில் இருந்து பொதுச் சேவை அரசியல் தலையீடுகள் அற்றதாக இயங்கி வருகின்றது .(வென்டர் கெட் 2003) பொதுச்சேவை அதனது இலக்கை அடைவதற்கு பழமையான அரசியல் நியமனம் இன்னும் சாகாததன் காரணமாக பொதுச்சேவை ஆணைக்குழு தன்னை இஸ்திரப்படுத்த வேண்டியுள்ளது .

தற்பொது பொதுச்சேவை ஆணைக்குழு வழமையான விசாணைக்கு உட்பட்டுத்தியுள்ளது[36] .அமைச்சரவையினால் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமிக்கப்பட்ட சிறைச்சாலை திணைக்கள பணிப்பாளர் தொடர்பிலான விடயமாகும் . இவரது நியமனம் தேவைப்படும் அடிப்படை தகைமைகளை கொண்டிருக்கவில்லை. இதற்காக அடிப்படை உரிமை மீறல் மனுவும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது .(டெய்லி மிரர் 2003 )

முக்கியமாக பொதுச்சேவை ஆணைக்குழு அதனது கொள்கை தயாரிப்பதற்கான அதிகாரத்தை கொண்டிருக்கவில்லை .இவ் அதிகாரம் இன்னும் அமைச்சரவையே கொண்டு இருப்பதனாலாகும்.மாகாண பொதுச் சேவை ஆளனி தொடர்பான அதிகாரத்தையும் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவே கொண்டுள்ளது..

சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் வருடா வருடம் தங்களது சொத்துக்கள் சம்பந்தமாக பிரகடனம் செய்ய வேண்டுமென 1975 ம் இல 01 சொத்துக்கள் , பொறுப்புக்கள் பிரகடனம் வலியுறுத்துகிறது .எனினும் இது சிரமமாக நடைபெறுவதில்லை .K.M.D.R.சில்வாவின் அறிக்கைப்படி இரகசியமாக இந்த பிரகடனங்கள் எதுவித ஆராய்தலும் இன்றி வெறுமனே கோவையிடப்பட்டுள்ளது. இதற்கு அமைவான யாதாயினும் முறைப்பாடு வரும் பட்சத்திலேயே இதைப்பற்றி தேடுதல் இடம் பெறும்.இதுவே யதார்த்த நிலை .

## பொலிசாரும் பாதுகாப்பும்

13 வது அரசியல் அமைப்பு சீர்த்திருத்தம் மாகாண அரசாங்கத்திற்கு சட்டம் மற்றும் அதிகாரங்களை வழங்கி இருந்தது . எனினும் ,இவை அமுல்படுத்தப்படவில்லை . பொலிஸ் திணைக்களம் தேசிய சேவைக்கு உட்பட்டு பொலிஸ் மா அதிபரை தலைவராகக் கொண்டு இயங்கும் ஒரு நிறுவனமாகும் .இவருக்கு கீழ் றிசேர்வ் பொலிஸ் சேவை உட்பட 65000 த்திற்கும் அதிகமான பொலிஸார் கடமையாற்றுகிறார்கள் .அரசியலமைப்பு சபையின் சிபார்சுடன் ஜனாதிபதியே பொலிஸ் மா அதிபரை நியமிப்பார் .அதனை அரசியலமைப்பு சபை உறுதிப்படுத்தும் அரசியலமைப்பு சட்டத்தில் அன்றி மற்றும் ஏனைய சட்டங்களால் மாத்திரம் பொலிஸ் மா அதிபரை பதவி நீக்கம் செய்ய முடியாது. (பொலிஸ் பாதுகாப்பு சட்டத்தால் பொலிஸ் திணைக்களத்திற்கு பொறுப்பான அமைச்சர் மூலமாக பகுதி 41 C )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2002 நடுப்பகுதியில் பிரதி பொலிஸ் மா அதிபர் கொட்டகேதெனிய தெளிவாக சுயமாக பொலிஸ் திணைக்களத்தைப் பற்றி பொது மக்கள் ஏலவேஅறிந்திருப்பதை மேலும் தெளிவுபடுத்தினார். சில பொலிஸ் அதிகாரிகள் சட்ட விரோத மது உற்பத்தியாளர்களின் சம்பளம் பெறுபவர்களாகவும் , தனியார் பஸ் உரிமையாளர்கள் வீதிப் போக்குவரத்து பொலிஸ் அதிகாரிகளுக்கு இலஞ்சம் வழங்குவதன் மூலம் வீதிப் போக்குவரத்து சட்டங்களை அத்துமீறியவர்களாகவும் , பாதாள உலக கோஷ்டிகள் பொலிஸாரின் உதவியுடன் சுகபோகத்தை அனுபவிப்பவர்களாகவும் , இருப்பதாக குறிப்பிட்டார் . இந்த செய்தி அரசாங்கத்திற்கு சென்றடைந்தது . சில பொலிஸ் அதிகாரிகள் பொலிஸ் சேவையில் இணைந்ததன் பின்பு உல்லாசமான வாழ்க்கை வாழ்வதையும் ,இது தேசிய குறிகாட்டாகவும் எடுத்தியம்பினார். இவ்வாறு குறிப்பிட்டும் இதுவரையிலும் எதுவித முறையான விசாரனைகளும் இடம் பெறவில்லை .மாறாக பொலிஸ் மா அதிபரால் திரு .கொட்டகே தெனிய அவர்கள் சட்டத்திற்கு மாறாக பேசியமைக்கு தண்டிக்கப்பட்டார்.

2002 ம் ஆண்டு டிசம்பரில் டிரான்ஷ்பேரன்ஸி இன்டர்நெஷனல் நிறுவணத்தால் மேற்கொள்ளப்பட்ட உள்ளக ஆய்வு ஒன்றின் மூலம் பொலிஸ் திணைக்களமே பொதுவில் ஊழல் மிக நிறைந்த நிறுவனம் என கண்டுப்பிடிக்கப்பட்டது .இந்த ஆய்வு பொலிஸ் திணைக்களத்துக்கு அவதூறாகச் காணப்பட்டதனால் மற்ற எல்லா விடயங்களிலும் புதிய பொலிஸ் மா அதிபர் நியமனத்திலும் (பழைய பொலிஸ் மா அதபர் இறந்ததினால் ) அடிப்படையான ஊழல் தடுப்பு செயற்றிட்டம் ஒன்று பின்வருமாறு செயற்படுத்தப்பட்டது.

❖ பொலிஸாருக்குள்ள அபரீதமான அதிகாரங்கள் குறைக்கப்பட்டு புதிய தொழிநுட்ப முறை புகுத்தப்பட்டது . பொது மக்களிலுடனான தொடர்புகள் அவதானிக்கப்பட்டதுடன் தற்றுணிபு கட்டுப்படுத்தப்பட்டு மேலதிகாரியின் மேற்பார்வை அதிகரிக்கப்பட்டது .

❖ குறிப்பிடக்கூடிய கால வரையறைகள் அறிமுகப்படுத்தப்பட்டதினால் சேவை வழங்கல் துரிதம் பெறவும் ,பொது மக்கள் சேவைக்கான காலவரை பற்றி தெரிந்துக்கொள்ளவும் வாய்ப்பு ஏற்பட்டது. விசேடமாக காப்புறுதி அறிக்கை வழங்குதல் , ஒளிபெருக்கி அனுமதிப்பத்திரம் ,மற்றும் பொலிஸ் அறிக்கைகள் தொழிநுட்ப தேவைக்கானவை உரிய காலப்பகுதிக்குள் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது .

❖ விசேடமாக ஊழல் நிறைந்த பகுதிகளான ,சட்ட விரோத மது உற்பத்தி ,வியாபாரம் மற்றும் , விபச்சாரம் , தடையிடப்பட்ட பொருட்கள் , சாரதி குற்றச் சாட்டுக்கள் போன்றவை மிக நம்பிக்கை வாய்ந்த பொலிஸாரினால் தீவிர பரிசோதனைக்கு அனுமதிக்கப்பட்டன .

❖ ஊழல் நிறைந்த அதிகாரிகளாக குற்றம் சாட்டப்பட்ட அதிகாரிகளை மக்கள் தொடர்பு நடவடிக்கைகளில் இருந்து ஒதுக்கி வைத்தல் .

❖ சன்மானம் வழங்கும் நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டதும் , காசுடனான பரிசுகள் வழங்கப்பட்டதும் , புதிய கலாச்சாரத்திற்கான போஷணையூட்டமாக அமைத்தலுடன் கௌரவமான பதவி அணிக்கு பதவியுயர்வு செய்யப்பட்டமையும் , விசேட விசாரணைகள் போன்றவையும் , பெறுமதியான அங்கீகாரத்திற்கு உதவியதுடன் , வினைத்திறனான சேவைக்கும் வழிவகுத்தன .

❖ சன்மானம் இரண்டு விதமாக வழங்கப்பட்டமை .
சன்மானத்தின் அரைவாசி சந்தேகநபர் கைது செய்யப்பட்டு களவாடப்பட்ட பொருட்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைப்பற்றப்பட்டப் போதும் ,இரண்டாவது பகுதி நீதிமன்றத்தில் வழக்கு விசாரிக்கப்பட்டு சந்தேகநபர் குற்றவாளியென நிருபிக்கப்படும் சந்தர்ப்பத்திலும் வழங்கப்பெற்றது .இதன் மூலம் முறையான நீதியான விசாரணைகள் இடம்பெற்று குற்றவாளி தப்பமுடியாதளவும் , நீதிமன்றத்தினால் தண்டனை பெறக்கூடியளவிற்கும் விசாரணைகள் சிறப்பாக நடைபெறுவதற்கும் ஏதுவாக அமைந்தன .

❖ குறைகேள் அதிகாரி நியமிக்கப்பட்டு பொது மக்களின் முறைப்பாடுகள் அதனூடாக விசாரிக்கப்பட்டுள்ளன .

இதே வேளை 2002 ம் ஆண்டின் முற்பகுதியில் நிறுவப்பட்ட தேசிய பொலிஸ் ஆணைக்குழு தொடர்பாக அதனது பக்கச்சார்பு தன்மைதொடர்பில் தற்போது விரிவாக குறிப்பிட முடியாது எனினும்,

அரசியல் சார்பின்றி இயங்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது . மோசடி தடுப்பு பிரிவு உருவாக்கப்பட்டு CIABOC இன் ஆளுமையுள் வராத மோசடி தொடர்பாடல்கள் கையாளப்படுகிறது.

பொதுப் பாதுகாப்பு அலுவலர்கள் மற்றும் சட்ட மா அதிபரின் நியமனமும் ஜனாதிபதியின் கையிலேயே தங்கியுள்ளது .இவரது நியமனமும் அரசின் தேசிய அதிகாரமாகும் .இவரது நியமனம் அரசியலமைப்பு சபையினால் சிபார்சு செய்யப்பட்டு அரசியலமைப்பு சபை அதனை அங்கீகரிக்கும் சட்ட மா அதிபர் அரசியலமைப்பு சட்ட விதிகளுக்கு மாறாக வேறு யாதாயினும் சட்டங்களால் பதவி விலக்க முடியாது .

மற்றொரு மிக முக்கியமான விடயம் சட்ட வரைஞர் திணைக்களமாகும் .இது சட்டங்கள் உருவாக்குவதில் மிக முக்கிய இடத்தை வகிக்கின்றது .சட்டங்கள் உருவாக்கப்படும் போது அது உரிய முறையில் உருவாக்கப்படவில்லையாயின் அதனுள் இருக்கும் ஓட்டைகளுடாக அரசியல்வாதிகள் உள்நுழைந்து சட்ட மீறல் , ஊழல் செய்வதற்கு ஏதுவாகின்றது .பலவிதமான சட்ட ஒழுங்கீனங்கள் ஊழலுக்கு வழி வகுப்பதாக முன்னரே குறிப்பிட்டு இருந்தோம் .அமைச்சர்களுக்கான அதிகாரங்கள் வரையறுக்கப்படாத காரணத்தால் அமைச்சர்கள் தாமாகவே பொது நிர்வாகத்தில் ஈடுபடுவதை நாம் முன்னரே குறிப்பிட்டு இருந்தோம் . அரசியலமைப்பு சபையினால் பரிந்துரைக்கப்பட்டு ஜனாதிபதியால் நிறுவப்படும் ஜனாதிபதி ஆணைக்குழுக்களுக்கு விசாரணைகளுக்கான கால எல்லை கிடையாது .இவ்வாறு நிறுவப்பட்ட CIABOC மற்றும் தேர்தல் ஆணைக்குழுவுக்கு கூட தற்போது கால எல்லை இன்மை காரணமாக பலவித தலையீடுகளை எதிர்நோக்கியுள்ளனர் .

## பொதுப் பாதுகாப்பு

பொதுப்பாதுகாப்பே மிக ஊழல் மலிந்த இடமாக கருதப்படுகிறது .இப்பகுதியில் காணப்படும் ஊழல் மிகவும் இரகசியத்தன்மை நிறைந்ததாகவும் , கணக்காய்வாளர் நாயகத்தின் எவ்வித கண்காணிப்பிற்கும் உட்பட்டதாகவும் இது அமைவதில்லை .சமாதானம் உண்மையில் மலரும் எனில் பாரிய முதலீட்டு சேவைகள் இதில் இடம்பெறக் கூடும் .

நிதி அமைச்சினால் வெளியிடப்படும் பொதுப்பாதுகாப்பு வழிமுறைகள் கையேடு 1995 ம் ஆண்டுக்குப்பின் புதிதாக்கப்படவில்லை .இந்த வழிமுறைகள் கையேடு அரசின் பாதுகாப்பிற்கானது பொது மக்களுக்கு கிடைக்ககூடியதாக அமைய வேண்டும் .பரந்தளவில் இது சம்பந்தமாக பத்திரிக்கைகளில் விளம்பரம் செய்வதன் மூலம் இது சாத்தியமாகும் .இதன் மூலம் சாதாரண பணம் கட்டும் நடைமுறைகள் பரவலாக்கப்படும் .இந்வழிமுறை கையேடுகள் டெண்டர் நடைமுறைகளின் போது மிகவும் அத்தியவசியமாகின்றது . உதாரணமாக டெண்டர் விசேட வழிமுறை ,விளம்பரம் டெண்டர் பெறுவதற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறந்த தன்மை , தொழிநுட்ப மதிப்பீட்டு குழுவினால் மதிப்பீடு மற்றும் நீதித்துறை ஏற்பாடுகள் போன்றவை திறந்த தன்மையாக அமையுமாயின் அது பொது மக்களுக்கு டெண்டரின் திறந்த தன்மையும் , அதனுடான ஏற்பாடுகள் சம்பந்தமான தெளிவான விளக்கம் பெறக்கூடியதாக இருக்கும் .

ஒருவர் டெண்டர் மூலம் பெற்றுவிட்டால் , அதன் மீதான தொடரான நடவடிக்கைகள் தொடர்பான எதுவித அறிவிப்பும் இன்மை காரணமாக அதைப்பற்றி தெரிந்துக்கொள்ள முடியாதுள்ளது. பொது மக்களுக்கு இத் டெண்டர் சம்பந்தமான மதிப்பீட்டு விபரங்களோ , டெண்டர் நடைமுறைகளோ துலாம்பரப்படுத்தப்படவில்லை. இந்த நடைமுறைகள் மிகவும் இரகசியமாக்கப்பட்டுள்ளதன் காரணமாக , பொது மக்களின் அரைவாசி தலையீடுகள் குறைக்கப்படுவதாக கருதப்படுகிறது . முறையற்ற முடிவுகளை ஏற்றுக்கொள்ளாமை , மதிப்பீட்டுக்கான கேள்வி மிக சிறிதளவில் காணப்படுகிறது . தற்போதைய நடைமுறையில் டெண்டர் வழங்கலுக்கான நடைமுறைகள் பத்திரிக்கைகளில் பிரசுரிக்கப்படுவதன் மூலம் இது குறைக்கப்படுகின்றது . இவை பொது நடைமுறை கையேட்டில் வலியுறுத்தப்பட வேண்டும் . மேலதிகமாக தனியார் மயமாக்கலும் (பொதுச்சொத்துக்கள் விற்பனை ) மற்றும் முதலீட்டு சபையினால் அனுமதிக்கப்படும் வெளிநாட்டு மூலதனங்களும் பாரிய ஊழல் நிறைந்ததாக காணப்படுகிறது .

## குறைகேள் அதிகாரி (ஒம்புட்ஸ் மண்)

1981 ம் ஆண்டின் 17 ம் இலக்கச் சட்டம் 1994 ம் ஆண்டின் 26 ம் இலக்கச் சட்டம் ஆகியவற்றின் மூலமாக நிறுவப்பட்டதே இக் குறைகேள் அதிகார பதவியாகும் .( நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் எனவும் அழைக்கப்படுகிறது ) இவர் திணைக்களங்களுக்கு எதிரான குறைபாடுகளையும் அரச கட்டுப்பாட்டு சபைகளினதும் , அரச சபைகள் , அரச அதிகார சபைகள் , மற்றும் உள்ளூர் அதிகார நிறுவனங்களில் இடம் பெறும் மனித உரிமை மீறல் ,பொதுவான மாறான அரச நிர்வாகம் , பொது தகவல்களை வழங்க மறுத்தலும் அதிகார நிர்வாக துஸ்பிரயோகம் ,மற்றும் சீரற்ற நிர்வாகம் தொடர்பான முறைப்பாடுகளை மேற்கொள்ளலாம் .

நியமனம் , பதவியுயர்வுகள் ,இடமாற்றங்கள் , தொடர்பான விபரங்கள் குறைக்கேள் அதிகாரியின் அதிகாரத்திற்கு உட்பட்டவை அல்ல . மாறாக ஊழல் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் சமர்ப்பிக்கப்படலாம் .1994 ம் ஆண்டின் சட்ட சரத்துப் படி ஒரு நபர் இக் குறைக்கேள் அதிகாரிக்கு குற்றச்சாட்டுக்கள் சமர்ப்பிக்கலாம் .(சொந்த பிரச்சனை தொடர்பாக ) ,குழுவாக சமர்ப்பிக்கப்படும் கூட்டான குற்றச் சாட்டுக்கள் தொடர்பான முறைப்பாடுகள் நேரடியாக குறைக் கேள் அதிகாரிக்கு சமர்ப்பிக்கப்படலாம் . முன்னர் இவை பாராளுமன்றத்திற்கு அனுப்பப்பட்டு அவை பொது முறைப்பாட்டுக்கான பாராளுமன்ற குழு மூலமாக குறைகேள் அதிகாரிக்கு வழங்கப்படும் .

குறைகேள் அதிகாரி ஜனாதிபதியால் நியமிக்கப்படுவார் . அவரது நன்நடத்தை காலம் வரை அவரது பதவிக்காலமாகும் [37]. இவரது காரியாலயம் பிரதான நகரத்தில் அமைந்துள்ளது எனினும் வழக்குகள் சம்பந்தமாக தேவைக்கேற்ப அவரது சேவை பிற மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்படும் . குறைகேள் அதிகாரி இதனது நிர்வாக தலைவராவார். இவரக்கு 23 ஆளணியினர் உள்ளனர். அவர்கள் நிர்வாகம் மற்றும் சிற்றூழியர்கள் ஆவர் . குறைகேள் அதிகாரியே இதனது பிரதான புலனாய்வாளரும் ,ஆணையாளரும் ஆவர் . இக் காரியாலயம் வருடாந்தம் 5000 த்துக்கு அதிகமான வழக்குகளை கையாளும் திறன் உள்ளதாக உள்ளது . பாராளுமன்றம் குறைகேள் அதிகாரியின் காரியாலயம் தொடர்பான அறிக்கையை வருடாந்தம் சமர்ப்பிக்கும் . வழமையாக ஆணையாளர் இரு தரப்பிற்கும் சாதகமான முடிவுகளை பெறுவதில் இணக்கம் காண்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது இலங்கையில் காணப்படும் ஒரேயொரு மூன்று மொழிகளிலும் பரிச்சயமுடைய பதவியாக கருதப்படுகிறது .இது பிரதானமாக தமிழும் , அதற்கு மேலதிகமாக ஆங்கிலம் , சிங்களம் தொடர்பான பரிச்சயமும் அவசியமாகவுள்ளது .

பொலிஸாரும் கல்வித்திணைக்களமும் தமக்கென தனியான ஒரு குறைகேள் அதிகாரியை கொண்டு இயங்குகின்றனர் .கல்வித் திணைக்களம் விசேடமாக 2003 ம் ஆண்டு பாடசாலை அனுமதி தொடர்பில் பொது மக்களின் முறைப்பாடு தொடர்பில் தனியான ஆய்வு செய்கின்றது .

இவ்விரு திணைக்களங்களும் தங்களது தகவல்களை . தேசிய குறைகேள் அதிகாரியின் காரியாலயத்துடன் பகிர்ந்து கொள்வதில்லை .இவை பொதுச் சேவை ஆணைக்குழு மற்றும் பொலிஸ் சேவை ஆணைக்குழு மூலமாக விசாரிக்கப்படுகின்றன . எவ்வாறெனினும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் குறிப்பிட்ட அரச உத்தியோகத்தரின் சுயவிபரக் கோவைக்கு ஒரு கடிதம் இடப்படுவதுடன் குறிப்பிட் திணைக்கள தலைவரின் கண்காணிப்பிற்கு இவை உரிய கடிதங்கள் மூலம் அறிவிக்கப்படும் .இவ்வகையில் பொதுச் சேவை ஆணைக்குழுவும் ,பொலிஸ் சேவை ஆணைக்குழுவும் குறிப்பிட்ட நபர் தொடர்பான பதவியுயர்வு , இடமாற்றம் , ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்த ஏதுவாகயிருக்கும் .

## புலனாய்வும் / புலனாய்வு முகவர்களும்

1994 ம் ஆண்டு இலஞ்ச ( இணைப்பு ) சட்டம் இல 20 யிற்கு ஸ்தாபிக்கப்பட்டதே இலஞ்சம் மற்றும். ஊழல் தடுப்பு ஆணைக்குழு .இதனது நோக்கமானது இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிராக போராடுவதும் , இதற்கான தடுப்பு நடவடிக்கை செயற்றிட்டங்களை மேற்கொள்வதும் ,இஞ்சம் மற்றும். ஊழல் தொடர்பாக புலனாய்வு செய்து அவற்றை சுதந்திர முறையில் எதுவித பயமும் ,பாரபட்சமும் இன்றி வரையறுக்கப்பட்ட சட்டத்தின் ஊடாக நடவடிக்கை மேற்கொள்வதாகும் .1994ம் ஆண்டின் இலஞ்சம் மற்றும் ஊழல் முறைப்பாடுகள் புலனாய்வு சட்டத்திற்கு 03 ம் பகுதியின் படி ஆணைக்குழு இச்சட்டத்தின் ஏனைய பிரிவுகளுக்கு அமைய குற்றச்சாட்டு தொடர்பாக புலனாய்வு செய்தலும் பிரிவு 04 க்கு அமைய யாதாயினும் புலனாய்வுகளின் படி குற்றச்சாட்டு தெளிவாக்கப்பட்டால். யாதாயினும் குற்றச்சாட்டு அல்லது யாதாயினும் நபர் தொடர்பாலும் ஊழல் சட்டத்தின் அடிப்படையிலும் அல்லது சொத்துக்கள் , பொறுப்புக்கள் சட்டம் இல 01 . 1975 க்கு அமைவாகவும் குறிப்பிட்ட நீதிமன்றில் இதற்கு எதிரான வழக்குகள் தொடர்வதற்கு கடமைப்பட்டுள்ளது .பிரிவு 04 ல் குறிப்பிடுவது போன்று ஊழல் மற்றும் இலஞ்சம் தொடர்பான குற்றச்சாட்டு யாதாயினும் ஒரு நபர் தொடர்பில் முறைப்பாடு செய்யப்படுமாயின் (குறிப்பிட்ட நபர் செய்தி பெறப்பட்ட நாளில் தனது பதவியில் இருப்பினும் அல்லது இல்லையெனினும் அவ்வாறான நபர் குறிப்பிட்ட காலப்பகுதியில் செய்த இலஞ்சம் அல்லது ஊழல் தொடர்பாக ) குறிப்பிட்ட காலப்பகுதியில் குறிப்பிட்ட

அல்லது செலவினங்கள் தொடர்பில் எழுத்து மூலமான முறைப்பாடு கிடைக்கும் சந்தர்ப்பத்தில் அது தொடர்பாக விசாரணை செய்யும் .

இவ்வகையான சொத்து சேகரிப்பு அல்லது வேறு யாதாயினும் குறிப்பிட்ட விடயங்களுக்கு அமைவாக பொதுத்துறை உத்தியோகத்தர் ஒருவர் தனது வருமானத்திற்கு மேலதிகமாக சொத்து சேகரித்தல் தொடர்பாக பதிலிறுக்க வேண்டிவரும் .

இலஞ்சம் மற்றும் ஊழல் புலனாய்வு தொடர்பான ஆணைக்குழு 200 ஆளணியினரையும் மூன்று ஆணையாளர்களையும் 16 சட்ட அதிகாரிகளையும் 80 புலனாய்வு அதிகாரிகளையும் நிர்வாக ஊழியர்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு இயங்குகின்றது .2003 ஜனவரியில் இதனது ஆணையாளர் திரு.கிங்ஸ்லி விக்கிரம சூர்ய அவர்களின் கூற்றுப்படி 2052 முறைப்பாடுகளில் 1253 முறைப்பாடுகள் உண்மையானவை. 554 மற்றும் 254 வழக்குகள் குற்றம் நிரூபிக்கப்பட்டவை அல்லது குற்றம் நிரூபிக்கப்படாதவை தற்போது ஏறக்குறைய 150 வழக்குகள் சாதாரன நீதிமன்ற சட்டம் மூலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் ஏறக்குறைய 1000 முறைப்பாடுகள் ஆணையாளரின் புலனாய்வுக்கு அல்லது பரிசோதனை சம்பந்தமான அறிவுறுத்தலுகளுக்காக காத்திருக்கின்றன .( முறையாக ஆணைக்குழு நியமிக்கப்பட்டதும் )

இந்நிலை தோன்றியதற்கான காரணம் ஆணையாளர்களில் ஒருவர் சட்டத்திற்கு அமைவாக ஓய்வு பெற்றதும் இயற்கை மரணம் எய்தியதுமாகும் .அரசியலமைப்பு சபை இதற்கான ஒருவரை சிபார்சு செய்து இருப்பினும் ஜனாதிபதி இந்நியமனம் தொடர்பில் காலவரையறை குறிப்பிடாதுள்ளதின் காரணமாக இதுவரையிலும் நியமனம் செய்யப்படவில்லை .மூன்று ஆணையாளர்களும் நியமிக்கப்பட்டதன் பின்பே இவ்வாணைக்குழு இயங்க முடியும் என்பதால் இந்நிறுவனத்தின் அனைத்து செயற்பாடுகளும் முடங்கியுள்ளன.

அதே வேளை ஆணையாளர் டாக்டர் .விக்கிரம சூர்ய அவர்கள் விசேட பாராளுமன்ற புலனாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் .எஸ்.பீ.திசாநாயக்க தொடர்பான புலனாய்வு வீடயங்களை இவர் இரகசியமாக ஜனாதிபதிக்கு வெளிப்படுத்தியதன் மூலம் ஊழல் சட்டத்தின் பிரிவுகளுக்கு அமைய இரகசியத்தை பேணவில்லை என்பதற்கான குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது .

எவ்வாறெனினும் CIABOC மிகவும் குறைவான குற்றச்சாட்டுக்களையே விசாரணை செய்துள்ளது .மிகவும் உயர்ந்த பணம் சம்பந்தமான குற்றச்சாட்டு இலங்கை ரூபா 02 மில்லியன் துஷ்பிரயோகம் செய்தல் தொடர்பாக முன்னாள் முதலீட்டு சபை தலைவருக்கு எதிரானதாகவும் , இதற்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கள் செய்யப்பட்டு வழக்கு தொடர்கின்றது[38] .(டெய்லி மிரர் 2003 )

மேலதிக விபரப்படி CIABOC பணிப்பாளர் நாயகம் தனது புலனாய்வு அதிகாரிகள் பாரிய பொது முதலீட்டு திட்டங்களின் ஊழல் தொடர்பில் ஆராய்வதில் திறனற்றவர்கள் என்பதும் , ஊழலை ஒழிப்பதற்கான அரசியல் அழுத்தங்களாக பிரதம மந்திரி காரியாலயம் ஊடாக இதற்கான பாரிய ஒத்துழைப்பினையும் எதிர் நோக்குகின்றது .மேலதிகமாக CIABOC சட்டம் மற்றும் புலனாய்வு துறையில் திறமையான ஆளனியாளரையும் எதிர்நோக்குகின்றது .இத்துறை தனியாக இயங்க வேண்டியதாகவும் சட்ட மா அதிபர் திணைக்களத்துடன் தொடர்புபட்டதாகவும் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது . மற்றும் இதனது அதிகாரங்கள் மேலும் வலுப்படுத்த வேண்டி இருப்பதுடன் நீதித்துறை அதிகாரிகள் தொடர்பிலான ஊழல் மற்றும் இலஞ்சம் தொடர்பில் ஆராயும் அதிகாரம் பகிரப்படல் வேண்டும் என எதிர்பாக்கப்படுகிறது .

ஆணைக்குழு உறுப்பினர்கள் ஓய்வு பெற்றவர்களில் அல்லது சிரேஷ்ட தன்மை அடிப்படையில் நியமிக்கப்பட வேண்டும் என்பதோடு அரசியலமைப்பில் இதற்கென குறிப்பிட் கால வரையறை ஜனாதிபதிக்கு வழங்கப்படல் வேண்டும் .மற்றும் இவ்வாணைக்குழுவானது தனது முழுமையான ஆணைக்குழு உறுப்பினர்கள் இல்லாத போது இயங்கக்கூடியவாறு. அரசியலமைப்பில் திருத்தம் மேற் கொள் ள வேண்டும் .தற்போதுள்ள அரசியலமைப்பு சீர்த்திருத்தம் 17 , 104 (03) ன் கீழ் தற்போதைய ஆணைக்குழு தனது முழுமையான உறுப்பினர்கள் இன்றி இயங்க முடியாது என்பதோடு தீர்ப்புகள் வழங்கப்பட்டாலும் இதனால் வழங்கப்பட்ட தீர்ப்புக்கள் செல்லுப்படியற்றவையென கணிக்கப்படும் .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊடகம்

ஊடகத்துறையை பொறுத்தளவில் சிறிதளவு மாகாண ரீதியான செய்திப் தொகுப்பும் சொந்த ஊடகங்களிலும் காணப்படுகின்றன .சில ஊடகங்கள் தனிப்பட்டவை எனினும் , தேசிய ரீதியில் பணியாற்றுகின்றன .இவற்றுள் சில மாகாண ரீதியானவையாக இருப்பதோடு , மாகாணத்திற்கென புதியதொருவெளியீட்டினையும் மேற்கொள்கின்றன .

பத்திரிக்கை துறை 05 பெரும் நிறுவனங்கள் வசம் இருப்பினும் இவற்றுள் 08 பத்திரிக்கைகள் சிங்கள மொழி மூலமாகவும் , 04 தமிழ் மொழி ,09 ஆங்கில மொழி ரீதியிலான பத்திரிக்கைகளை வெளியிடுகின்றன .அத்தோடு 05 வானொலி நிலையங்களும் 07 தொலைக்காட்சி நிறுவனங்களும் காணப்படுகின்றன .

05 பெரும் பத்திரிக்கை நிறுவனங்களில் ஒன்று தேசிய சொத்தாக கருதப்படும் ( லேக்ஹவுஸ்) இது அரசாங்க செய்திகள் வர்த்தமானி செய்திகளை பெரும்பாலும் வெளியிடுகின்றது .மற்றொன்று உபாலி நியூஸ் பேப்பர் கம்பனியாகும் .இது ஜனாதிபதியின் மாமனாருடையது. அதே வேலை தற்போதைய பிரதம மந்திரியின் மாமனாருடையது விஜய குருப் கம்பனியின் பத்திரிகை நிறுவனமாகும் மற்றொன்று பிரதம மந்திரியின் சகோதரருக்கு சொந்தமான டெலிசான் ரேடியோவும் தொலைக்காட்சி வலைப்பின்னலுமாகும் .

அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இரண்டு தொலைக்காட்சி நிறுவனங்கள் உள்ளன .(இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் , மற்றது சுயாதீன தொலைக்காட்சி நிறுவனம் ) ஒலிபரப்பு துறையில் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தானம் அரசு சொத்தாகும் .இவை இலங்கையின் சகல பாகங்களிதும். செய்திகளை கவர்ந்து செயற்படுகின்றன .குறிப்பிட்ட விளம்பரங்கள் அரசிடமும் ,தனியாரிடமும் பெறப்படுபவை மூலம் இவ்விரண்டு தாபனங்களும் லாபமடைகின்றன .வரலாற்று ரீதியாக ஊடகம் தனியார் வசம் (1980) வருவதற்கு முன் இவ்விரண்டு தாபனங்களும் விளம்பரம் மூலமாக இலாபம் அடைந்தன எனலாம் .

தெற்கில் இடம் பெற்ற J V P யின் புரட்சியின் போதும் மற்றும் வடக்கில் இடம் பெற்ற யுத்தம் காரணமாகவும் (1980 தொடக்கம் ) பத்திரிகை துறை அவசரகால சட்டத்தின் கீழும் பயங்கரவாத தடுப்புச் சட்டம் மூலமும் தணிக்கைக்கு உட்பட்டு பெரும் சிரமங்களை எதிர் நோக்கியது. யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்யப்பட்ட பின்னர் 2002 பெப்ரவரி முதல் அவசரகால சட்டம் இரத்து செய்யப்பட்டு தணிக்கை முறை தளர்த்தப்பட்டதினால் சிவில் சமூகம் சுதந்திரமான தகவல் பரிமாற்றம் சட்டத்தின் தேவைக்குட்படுத்தப்பட்டது .இது தற்போது பிரதம மந்திரியின் காரியாலயத்தின் ஊடாக செயற்படுத்தப்படுகிறது .

இலங்கையில் முறைப்படுத்தப்பட்ட நிறுவனங்களான CIABOC , COPA , COPE மற்றும் கணக்காய்வாளர் திணைக்களம் .நீதிச் சட்டம் ஒழுங்கின் பிற்படுத்தப்பட்ட தன்மை ) செய்திகளை ஒளிபரப்புவதில் அரசாங்க ஊடகம் மாத்திரமே ஊழல் சம்பந்தமான செய்திகளை உடனுக்குடன் வெளிக்கொணர்ந்தன .த ஐலண்ட் ( உபாலி குருப் ) த சண்டே லீடர் போன்ற பத்திரிகைகளுள் த சண்டே லீடர் பத்திரிகையின் அதிபர் திரு.லசந்த விக்கிரம துங்க இவ்வாறான புலனாய்வு செய்திகளை வெளியிடுவதில் திறமையானவர் இதனால் தான் 2002 ம் ஆண்டு திரு.லசந்த விக்கிரம துங்க அவர்கள் டிரான்ஸ் பேரன்ஸி இன்டர் நெஷனல் நிறுவனத்தின் தேசிய விருது 2000 பெறத்துகுதி பெற்றவர் ஆனார் . இச்செய்திப் பத்திரிகை ஊழலுக்கு எதிரான பல புலனாய்வுகளை வெளியீட்டமை குறிப்பிடதக்கது .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு பத்திரிகையாளர்கள் கொலைப்பயமுறுத்தல்களையும் , தாக்குதல்களையும் எதிர் நோக்கினர். எனினும் ,ஊழலுக்குரிய செய்திகளை வெளியிட தவறவில்லை .இந்தவகையில் கமிஷனா எனும் செய்தித்தகவலை வெளியிட்டமைக்காக பத்திரிகை ஆசிரியர் திரு.குமார அவர்கள் கொலை செய்யப்பட்டதும் ,இராணுவத்தின் ஊழல் சம்பந்தமான செய்திகளை வெளியிட்டமைக்காக பிரியந்த நிறுவனம் சார்ந்த பத்திரிகை ஆசிரியர் ஸ்ரீலால் பிரியந்த அவர்கள் கொலை செய்யப்பட்டதும் அறிந்ததே .

௨003 ம் ஆண்டு இறுதி காலப்பகுதியில் சண்டே லீடர் ஆசிரியர் மீன்பிடித் தொழில் அமைச்சர் அவர்களுக்கு எதிரான ஊழல் குற்றச்சாட்டு அம்பலப்படுத்தியமைக்காக அமைச்சரால் பின்வருமாறு கொலை பயமுறுத்தல் செய்யப்பபட்டார்." மிக விரைவில் நான் அவரை ( பத்திரிக்கை ஆசிரியரை) ஒரு அறையில் அடைத்து அவரை சுட்டு விடுவேன் அல்லது அவர் குருரமாக்கப்படுவார் .( அறிக்கைகள் சால்ஸ் புரொன்டயர் ௨003 ) இதே நேரத்தில் பத்திரிக்கையாளர் பந்துல ஜயந்த அவர்களும் இதே மாதிரியான கொலை பயமுறுத்தலை எதிர் நோக்கினார்.அரச வங்கித்துறையில் ஏற்படும் ஊழல் சம்பந்தமான செய்திப் பற்றி இவர் எழுதியமைக்காக இத்தகைய அச்சுறுத்தலை எதிர் நோக்கினார் (சர்வதேச வெளிக்கொணர்வும் , பரிமாற்றத்திற்கான சுதந்திரம் ௨003)

வித்தியாசமான வகையில் இலங்கையின் மேற்பார்வையாளர் விக்டர் ஐவன் ( சுதந்திர ஊடகப்பிரிவின் செய்தி ஆசிரியரும் ,சிங்கள பத்திரிக்கையான ராவய வின் ,ஆசிரியரும்) ஊழல் செய்திகளை வெளியிடுவது ,இலங்கையின் சட்ட மா அதிபர் அவரது சுதந்திரமான கருத்து வெளியாகும் உரிமையை மறுப்பதாகவும் தன்னை அச்சுறுத்துவதாகவும் செய்தி வெளியிட்டார் .(1998 )

பாரியளவிலான ஊழல் பற்றிய செய்திகளைப் சிங்களப் பத்திரிக்கைகளான ராவயவும் , த சண்டே லீடர் பத்திரிக்கையும் வெளிக்கொணர்ந்தன எனலாம் .எவ்வாறெனினும் மிகச் சிறியளவிலான பங்களிப்பினையே ஏனைய பத்திரிக்கைகள் இதற்காக வழங்கின என்பது உண்மையாகும்

## சிவில் சமூகம்

எல்லோரும் ஊழல் பற்றி பேசிக்கொண்டிருக்கையில் ஊழல் மேல் மட்டத்திலிருந்து கீழ்மட்டம் வரை காணப்படும் போதும் சிவில் சமூகம் அது நாளாந்த வாழ்க்கையின் ஒரு பொதுவான நிகழ்வு என்றே கருதியது .மிகவும் அண்மையிலேயே அரசு தனது சீர்த்திருத்தத்தில் இதற்கு எதிரான ஒரு கடும் போக்கினை அறிவித்தது .சமூகத்தின் பாவனையாளர்களினும் , அமுத்தங்களை மேற்கொள்ளக் கூடிய ஆசை கொள்பவர்களும் இலங்கையில் காணப்படுவதும் அபூர்வமானதொன்று .சர்வதேச சமூகம் தரகர் மூலமும் அல்லது இராஜதந்திர சமூகம் மூலமும் அரசாங்கத்திற்கு ஊழலுக்கு எதிரான அமுத்தத்தை கொடுக்கும் போது அது இல்லாதொழிக்கப்படுவதே இரு தரப்பாரையும் சமூகப்படுத்துவதாக அமையும் .

சுதந்திர தகவல் சட்டம் மூலமாக ஒரு நம்பிக்கை தோன்றுகின்றது . இது சிவில் சமூகத்துடனும் பிரதம மந்திரியின் காரியாலயத்துடனும் தகவல் சுதந்திரம் சம்பந்தமாக தற்போது கலந்துறையாடுகின்றது .ஊழலை கண்டுப்பிடிப்பதற்கான அப்பணியில் சுதந்திர தகவல் இதனை தனியார் துறையிலும். அமுல்படுத்துவதன் மூலம் ஊழலுக்கு எதிரான கூட்டு முயற்சியாகவும் சமமான சட்ட பரிசீலனையும். மேற்கொளள்ளலாம் என எதிர்பார்க்கின்றது .

சிவில் சமூகம் டிரான்ஸ் பேரன்ஸி இன்டர் நெஷனல் நிறுவனத்தின் மூலமாக ௨003 ஒகஸ்ட் முதல் விழிப்புனர்வு பாதுகாப்பு சரத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் ஊழலுக்கு எதிரான பணியை ஆணைக்குழு மூலம் ஊக்கமுடன் நடாத்துகின்றது .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிராந்திய மற்றும் உள்ளூராட்சி

1987 ம் ஆண்டு நவம்பர் மாதம் இலங்கை அரசு சிவில் யுத்த சூழலுக்கு தள்ளப்பட்டது. இதன் மூலம் அரசில் இருந்து மாகாண அரசு நிலை உருவாக்கப்பட்டது .13 வது அரசியலமைப்பு ரீதியாக 09 மாகாண அரசுகள் தோற்றுவிக்கப்பட்டன. அரசியலமைப்பு ரீதியாக அதிகாரங்கள் வேறாக்கி ஒதுக்கப்பட்டன .மாகாண அரசினால் செயற்படுத்தக்கூடிய 40 விடயங்கள் முதலாவது நிரலிலும், தேசிய அரசினால் செயற்படுத்தக்கூடிய 16 அதிகாரங்கள் இரண்டாவது நிரலிலும் , மாகாண அரசிலும், மத்திய அரசாலும் செயற்படுத்தக்கூடிய 36 விடயங்கள் மூன்றாவது நிரலிலும் உள்ளடக்கப்பட்டன.

13 வது அரசியலமைப்பு சீர்த்திருத்தம் பல்வேறு அதிகாரங்களை மாகாண அரசுக்கு பரவலாக்கியது .(மாகாண முதலமைச்சர் , மாகாண அமைச்சரவையும் , தேர்ந்தெடுக்கப்பட்ட வாறானது மற்றும் ஒரு ஆளுனர் , ஜனாதிபதியால் நியமிக்கப்படுவர் ) இவ்வாறு அதிகார பரவலாக்கம் செயற்பட்டு இருப்பினும் அர்த்தமுள்ளதான அதிகாரங்கள் முழுமையாக வழங்கப்படவில்லை .என அரசியல் ஆய்வாளர்கள் பலரும் கருத்து தெரிவிக்கின்றார்கள் .இன்னும் தேசம் தேசிய அரசினால் ஆளப்படுவதே இதற்கு காரணமாகும் .

உதாரணமாக , பாரிய வரி அறவிடும் முறை இன்றும் தேசிய அரசின் கையிலிருப்பதால் , மாகாண அரசு தனது அவசிய தேவைகளுக்கு மத்திய அரசின் தயவையே எதிர்பார்க்க வேண்டியுள்ளது..சர்வதேச ரீதியான அங்கீகாரங்களுக்கு மாகாண அரசுகள் மத்திய அரசிலேயே தங்கியுள்ளது..மாகாணங்கள் குறைந்த வரி அறவீடும் தன்மையும் , செலவளிக்கும் தன்மையும் கொண்டுள்ளதால் இங்கு பாரிய ஊழல்கள் இடம் பெறுவது குறைவு .பெரும்பாலும் மாகாண ரீதியில் வேலை செய்பவர்கள் மத்திய கட்டுப்பட்டில் உள்ள பொது நிர்வாக கட்டமைப்பிற்கு உட்பட்வர்கள். ஆதலால் , அது மாகாண அரசிற்கும் மத்திய அரசிற்குமான உறவினை காட்டுகின்றது .

உள்ளூராட்சி அதிகார சபைகள் சுதந்திரத்துக்குப்பின் உருவாக்கப்பட்டவை இவற்றின் வரி சேகரிக்கும் பணி மிகவும் குறுகியதாகும் .இதனது வரி அறவீட்டு பணிகள் மிகவும் குறுகிய வட்டத்திற்குள் காணப்படுகின்றன .இலங்கையில் பின்வருமாறு மூன்று நிலையிலான உள்ளூராட்சி மன்றங்கள் காணப்படுகின்றன . இம் மூன்று நிலையிலான மன்றங்களான மாநகர சபைகள் 18, நகரசபைகள் 37 , பிரதேச சபைகள் 256 ஆகும் .இவற்றின் ஆயுட் காலம் 04 வருடங்களாகும் .

ஊடகத்துறைகள் தேசிய அளவிலான ஊழல் சம்பந்தமான குற்றச்சாட்டுக்கள். எனினும் கிராமத்து பகுதிகளில் காணப்படும் இத்தகைய ஊழல்கள் வித்தியாசமானவை ஆகும் .தேசிய அளவிலான ஊழல் குற்றச்சாட்டுக்கள் கிராமத்துறையில் காணப்படுமாயின் அவை ஒப்பீட்டு அளவில் மிகவும் குறைந்தது என குறிப்பிடலாம் . யாதாயினுமொரு அரசியல் வாதி மாகான ஆட்சியோ அல்லது உள்ளூர் ஆட்சி மன்றத்திலோ காணப்படுவாராயின் அவரது எத்தனிப்பும் பாராளுமன்றம் நோக்கியதாகவே காணப்படுகின்றது .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊழலுக்கு எதிரான செயற்பாடுகள்

தேசிய அரசாங்கத்திலோ , அல்லது உதவி வழங்கும் நாடுகளின் முகவர்களிலோ ஊழல் தொடர்பில் குறிப்பிடத்தக்க எதுவித மாற்றத்தையும் காணமுடியாத இத்தருணத்தில் சிவில் சமூகமும், பத்திரிக்கையாளர்களும் , அறிவு ஜீவிகளும் , அரசு சார்பற்ற நிறுவனங்களும் தங்கள் மத்தியில் ஊழலுக்கு எதிரான செயற்பாடுகளில் தீவிரமாக ஈடுப்பட்டுள்ளன .அரசின் செயற்பாடுகளை வெளிக்கொணரத்தக்க வகையில் சிவில் சமூகத்தின் குரலைச் ஓங்கச் செய்துள்ளதுடன், சிங்கப்பூர் மற்றும் ஹொங்கொங் நாடுகளில் இடம் பெற்றது போன்று பிரதம மந்திரியின் காரியாலயத்தின் ஊடாக ஊழலுக்கு எதிரான போராட்டம் முன்னெடுக்கப்பட ஏதுவாகியுள்ளது .

யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்யப்பட்டது முதல் , செய்தித் தணிக்கை நீக்கப்பட்டது காரணமாக பத்திரிகைகளான சண்டே லீடர் , த ராவய , த ஐலேன்ட் போன்ற பத்திரிக்கைகள் இவ்வாறான ஊழல் தொடர்பான செய்திகளை ஆராய்ந்து பகிரங்கமாக செய்திகளை வெளியிடத் தொடங்கியுள்ளன .அவை பகிரங்கமாக பல விடயங்கள் தொடர்பில் நிறைந்த விளம்பரங்களை அம்பலப்படுத்தியுள்ளன .பிரதானமாக அரசியல் வாதிகளின் ஊழல் ,இராணுவம் மற்றும் உயர் மட்ட ஊழல்கள் வெளிப்படக்கூடியதான களமாகின .துர்திஷ்டவசமாக இக்குற்றச்சாட்டுக்கள் சிலவற்றின் சம்பந்தமாக இலஞ்ச மற்றும் ஊழல் விசாரணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டன . எனினும் , சட்ட நடவடிக்கைகளுக்கான முறையான புகார் இல்லாததன் காரணமாக சட்ட நடவடிக்கை மேற்கொள்ள முடியாதுள்ளது .

இலங்கை 1999ம் ஆண்டளவில் இரண்டு விதமான மகாநாடுகளை நடாத்தியது .(இதற்கு அனுசரணையாளர்களாக ஆசியா பவுண்டேசன் மற்றும் போட் பவுண்டேசன் அனுசரணைகள் கிடைக்கப்பெற்றன ) இவற்றின் முறையே "இலங்கை மற்றும் தெற் காசியாவில் ஊழல்கள் " என்பதுவும் "அரசுகளும் தெற்காசியாவின் ஊழல்களும் " எனும் தலைப்பிலான இரண்டு செயலமர்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டன .இதனது பிரதிபலனாக தெற்காசியாவில் ஊழல்கள் எனும் தலைப்பிலான படைப்பு ஒன்று வெளியிடப்பட்டது .( த சில்வா 2002 )

கடந்த ஆண்டு டிரான்ஸ் பேரன்ஸி இன்டர்நெஷனல் நிறுவனம் ஊழல் தொடர்பான பொது மக்களின் கருத்துக்கள் தொடர்பிலான ஆய்வு ஒன்றை நடாத்தியது . இதன் பிரதிபலனாக மிகவும் ஊழல் வாய்ந்த நிறுவனங்களாக பொலிஸ் , நீதித்துறை , கல்வி என்பன இனங்கானப்பட்டன .

இது சம்பந்தமாக மிகவும் பலமான விளம்பரங்கள் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டன. பொலிஸ் இதற்கு எதிராக செயற்பட்டு அவர்கள் சுங்கம் மற்றும் அரசியல் வாதிகள் மிகவும் பலம் வாய்ந்த ஊழல் வாதிகள் என குறிப்பிட்டார்கள் .இவ்வாறான எதிர் மறை செயற்பாடு மிகவும் சக்தி வாய்ந்ததாக அமைந்தது .ஊழலில் ஈடுபட்ட இருத்தரப்பாரும் ஒருவரை மற்றொருவர் குற்றம் காண்பதன் காரணமாக பத்திரிகைகளில் விளம்பரங்கள் கிடைக்கப்பெற்று ஊழலுக்கு எதிரான போராட்டம் வலுவடைந்தது .இதன் காரணமாக பொது மக்களின் பார்வை ஊழலை குறைப்பதில் முன்னுரிமை காட்டியது .இதே நேரத்தில் பொலிஸ் திணைக்களம் தனது நிறுவனத்தில் ஊழலுக்கு எதிரான செயற்பாடுகளை தூண்டியது .

2003 ம் ஆண்டு ஜுன் மாதத்தில் டோக்கியோ நிதி வழங்கும் நாடுகளின் கூட்டத்தின் போது இலங்கையின் வியாபார நாளேடான லங்கா மன்த்லி டைஜஸ்ட் அதன் அட்டைப்படத்தில் இலங்கையின் ஊழல் மற்றும் இலஞ்சம் தொடர்பான விடயத்தை வெளியிட்டதுடன் அதனது வாசகர்கள் மத்தியில் ஒரு ஆய்வினை மேற்கொண்டது .இதன் மூலம் சுங்கம் மற்றும் அரசியல் வாதிகளே மிகவும் ஊழல் வாய்ந்தவர்கள் என ஆய்வு வெளியிட்டது .இந்த ஆய்வு மூலம் இலங்கையில் இலஞ்சம் மற்றும் ஊழல் எல்லா மட்டங்களிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாபித்துள்ளது என ஆய்வு கூறியது .

இந்த ஆய்விற்கென மேற்கொள்ளப்பட்ட நேர்முககாணல் பலர் தங்கள் நிறுவனத்தில் லஞ்சம் என்பது ஒரு பெரும் பொருட்டல்ல என்றே கருதினார்கள் .
உதாரணமாக,

❖ பிரதம நீதியரசர் நீதிதுறையில் ஊழல் மிகவும் கீழ் மட்டத்திலேயே நிகழ்வதாக குறிப்பிட்டார். அதாவது பொலிஸாரும் சட்டத்தரணிகளுமே இதில் ஈடுபடுவதாகவும் இதுவரை நீதிபதிகளுக்கு எதிராக எத்தகைய முறைப்பாடும் இலஞ்ச மற்றும் ஊழல் விசாரனைக்குழுவுக்கு அறிவிக்கப்படவில்லை என தெரிவித்தார் .

❖ சுங்கத்திணைக்கள கட்டுப்பாட்டாளர் தனது நிறுவனத்தில் 30 % வீதமானோர் மட்டுமே இத்தகையவர்கள் என குறிப்பிட்டார் .மிகவும் குறைவானவர்களே இதில் ஈடுபட முடியும் , ஏனெனில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தனித்தனியே வெளியிடப்படுவதனால் , மற்றது அவர்களுக்கு புலனாய்வுக்கான சன்மானம் வழங்கப்படுவதாலும் இது மிகவும் குறைவாகவே இருக்கும் என குறிப்பிட்டடார் .தனியார் மற்றும் தனியார் தொடர்புகளை கணனி மயப்படுத்தல் செய்ய முடியுமெனின் ஊழல் நிகழ்வதை இன்னும் மட்டுப்படுத்தக்கூடியதாக இருக்கும் என கருதினார் .

❖ LTTE ஐ பொறுத்தளவில் அவர்களது கட்டுப்பாடும் கட்டுக்கோப்பு நிர்வாகமும் ஊழலை பெரிதும் தவிர்த்து உள்ளன எனலாம் .இலங்கையில் டெண்டர் மூலமாக அறிக்கைகளை பார்க்குமிடத்து வட கிழக்கு மாகாண புனருத்தாரன பணிகளில் டெண்டர் மற்றும் மீள் நிர்மான பணிகளில் உலக வங்கியின் தலையீட்டுடன் உருவாக்கப்பட்ட சிரான் போன்ற அமைப்புக்களின் பணியில் இத்தகு தன்மையை அவதானிக்கலாம் .
இலங்கை முதலீட்டு சபையின் தலைவரின் நடுநிலை தீர்ப்பின் படி நாம் எதை செய்ய வேண்டும் ன்பதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் .அரசாங்கத்திற்கு தனது வேலை மற்றும் நேரம் தொடர்பில் முன்னுரிமை வேண்டும் .அரசின் மீள் நிர்மான இலங்கை எனும் திட்டத்தின் ஊடாக மிகக்குறுகிய காலத்தில் இலங்கையின் பொருளாதாரத்தை சீர்செய்ய வேண்டியுள்ளது .இதன் பிரகாரம் ஊழல் எதிரான அரசியல் வாதிகளின் குறுகிய மேலான்மை தவிர்க்கப்படுகின்றது .உண்மையிலேயே மிகப்பெரும் பணத்தொகை திட்டங்களில் உள்ளிடுவதால் இந்நிலை தோன்றும் .

4.5 பில்லியன் டோக்கியோ மகா நாட்டில் தீர்மானிக்கப்பட்டது , ( ஜுன் 2003 )

ஆசிய அபிவிருத்தி வங்கியுடனும் , சர்வதேச ஊழலுக்கான ஜப்பான் வங்கியுடனும் நடாத்திய நேர்காணல் மூலம் இலங்கைக்கான முதலீடுகளில் ஊழல்கள் புதிய ஊழல் எதிர்ப்பு போராட்டம் காரணமாக தவிர்க்கப்படுகிறது .எனவும் , உலக வங்கியின் நாட்டிற்கான பொருளாதார கவனயீர்ப்புக்கும் சொத்துகளுக்குமான ஆய்வில் இவை கவனிக்கப்படும் என குறிப்பீடுகின்றது .

இந்த ஆய்வின் முக்கிய நோக்கமானது எதை பிரயோகிக்கின்றது .எனின் நிறுவன கட்டமைப்பையும் நிறுவன ஒழுங்குப்படுத்தல் திறனையும் மற்றும் இதனை நடைமுறைப்படுத்துவதற்கான வினைத்திறனையும் ஆய்வதன் மூலம் நாட்டின் பொது வளங்களில் பொருளாதார முகாமைத்துவ எத்தகைய வினைத்திறன் வாய்ந்தது என்பதை குறிப்பீடுவதாகும் .

ஏனைய அரச நடவடிக்கைகளான நிர்வாக புனரமைப்பும் ,கணனிமயப்படுத்தல் மற்றும் சுதந்திர தகவல் ஊடக சட்டம் போன்றவை ஊழலை குறைப்பதற்கான நடவடிக்கைகளாகும் .இத்தகைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடவடிக்கைகள் மற்றும் ஊழலை தடுப்பதற்கான வழிகளாக அமையாது அவற்றின் பிரதிபலன்கள் வினைத்திறன் மற்றும் வினைத்திறன்கள் ஊழல்களை ஒழிப்பதற்கான ஒரு மைல் கல்லாக அமையும் என்பது திண்ணம் .

அரசியல் வாதிகளிடம் இருந்து நியமனம் , மற்றும் பதவி உயர்வு , இடமாற்றம் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் போன்ற அதிகாரங்கள் பொதுச் சேவை ஆணைக்குழுவிற்கு மாற்றப்பட்டமை இன சார்பிற்கும் பரம்பரை சார்பிற்கும் வழங்கப்பட்ட ஒரு அடியாகும் .கடந்த 30 வருடங்களாக நிலவிய இத்தகு நிலைமை களையப்பட்டுள்ளது .திரு .எல்மோர் பெரேராவின் கூற்றுப்படி பாராட்ச தன்மையும் பொதுச் சேவை ஆணைக்குழு மற்றும் பொலிஸ் சேவை ஆணைக்குழுவின் தோற்றமும் அரசியல் தலைபாடுகளின் இன்றி விலத்தப்பட்டு இருக்கும் .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கிய விடயங்களுக்கான கலந்துறையாடல்.

## தேசிய நல்னோக்கு ஒழுங்கு NIS

தேசிய நலனோக்கு ஒழுங்கின் தாங்கிகளின் முறையானதும் தற்போதைய நிலவரங்களின் பயிற்சிகளுக்கும் இடையிலான வித்தியாசங்களை நிராகரிக்க முடியாது .பல நூற்றண்டுகளாக அரசாங்கத்தின் முன்னுரிமை அடிப்படையில் ஊழலுக்கு எதிரான போராட்டங்களை வரையறைப்படுத்த முடியாது .1994 ம் ஆண்டு அரசு இலஞ்ச மற்றும் ஊழல் ஆணைக்குழுவினை ஸ்தாபித்தன் மூலம் இதற்கு விதிவிலக்காகிறது .எனினும் ,இப்போது சிறியளவு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன .ஊழலுக்கு எதிரான போராட்டங்களில் தேசிய நலனோக்கு ஒழுங்கின் தாங்கிகள் மிகவும் பலவீனமையாவையாகும் .

குறிப்பிடத்தக்க விடயம் யாதெனில் ஊழல் குற்றச்சாட்டுக்கள் வெளியிடப்படுவது தாபனக்கோவையின் இரகசிய காப்பு சட்ட மூலம் தடை செய்யப்பட்டுள்ளது .இலங்கையின் ஊடக சபை சட்டமூலம் , மற்றும் இலங்கையின் நிதியியற் சட்டம் மற்றும் வங்கிகளுக்குரிய பல்வேறு சட்டமூலங்கள் போன்றவை இலங்கை அரச வங்கிகளுக்குரியவையாகும் . உதாரனமாக ,இலங்கையின் தாபனவிதிக் கோவை ( பகுதி XLII ஒழுக்க விதி நடைமுறை சகல அரச ஊழியர்களுக்கானது ) குறிப்பீடுவது யாதெனில் , அரசாங்கத்தை சங்கடத்திற்குள்ளாக்க கூடிய எத்தகைய தகவலையும் அரச ஊழியர் ஒருவர் வெளியீடுவது குற்றமாகும் .மேலும் , இப்பகுதியில் 6.1.4 மற்றும் 7ம் உப பகுதிகள் அரச ஊழியர் ஊடகத்தில் தனது விலையை வெளிப்படுத்தவும் தகவலை வழங்கவம் குற்றமெனக் குறிப்பீடுகின்றது . ( டிரான்ஷ் பேரன்ஸி இன்டர் நெஷனல் ௨003 )

ஊழல் குற்றச்சாட்டுக்கள் நிறைவேற்றுத்துறை , நிர்வாகத்துறை ,அரசியற் கட்சிகள், சட்டத்துறை , சிவில் சேவைகள் , பொலிஸ் பொதுப் பாதுகாப்புத்துறை , பிராந்திய மற்றும் பிரதேச அரசுகளிலும் காணப்டுகின்றது .ஊழல்கள் விசாரிப்பதற்கென முகவர் நிலையங்களான இலஞ்ச மற்றும் ஊழல் விசாரனை ஆனைக்குழு கணக்காய்வாளர் திணைக்களம் .மற்றும் ஒம்புட்ஸ்மன் காரியாலயங்கள் குறைந்த ஆளனி காரணமாக பலவீனமான நிலையில் உள்ளன .இனைந்து வேலை செய்வதற்கான திறன் இலஞ்ச மற்றும் ஊழல் விசாரனைக்குழு மற்றும் பொலிஸ் புலனாய்வு பிரிவு தவிற ஏனையவற்றுக்கு இல்லாமையும் காரணமாகும் .தேர்தல் நடைமுறைகள் பல்வகை நயவஞ்சக தன்மை வாய்ந்தவை ஆதலால் அவையும் வன்முறைகளுக்கு வித்திடுகின்றன .

முன்னர் குறிப்பிட்டது போல அமைச்சர்களால் மேற்கொள்ளப்பட்ட திணைக்கள தலைவர்களை நியமித்ல , அமைச்சின் செயலாளர்களை நியமித்தல் , போன்ற அதிகாரங்கள் குறைக்கப்பட்டமை பலத்த வெற்றியாக கருதப்படுகிறது .பொதுச்சேவையானது .இன ரீதியான அல்லது பழமை ரீதியான சம்பிரதாயங்களில் இருந்து மீண்டது எனலாம் .அரசியல் ரீதியான அடக்கு முறை அதிகாரங்கள் குறைக்கப்பட்டு சுதந்திரமாக இயங்கும் முறைக்கு பொதுச் சேவைகள் மறுசீரமைக்கப்பட்டன .பல மறுசீரமைப்புக்களின் காரணமாக தொடுக்கப்பட்ட மனித உரிமைகள் மனுக்கள் உள்ளன .எனினும் அவை நடைமுறையில் தீர்ப்புக்களை வழங்குவதற்கு நீண்ட நாட்கள் எடுக்கும் .

ஊழல் தொடர்பான விடயங்களை தேசிய நலனோக்கு ஒழுங்கு முறையின் கீழ் ஆராய்வோமாயின் திணைக்கள தலைவர்களிடம் மேற்கொண்ட நேர்காணல் மூலம் , திணைக்களத்தின் சேவைகளை வழங்குகின்ற வழிமுறைகளின் ஊடாகவே ஊழல் இடம் பெறுவதாக கூறப்படுகிறது .இத்தகு நிலைகள் மேல் நிலை அதிகாரிகளுக்கு தெரியாத வகையில் இடம் பெறுவதால் இவர்களால் இதற்கான எதுவித நடவடிக்கையும் எடுக்க முடியாது போவதுடன் இது தவிர்க்க முடியாததுமாகி விடுகின்றது .கீழே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடப்பட்டுள்ளவை.இரண்டு உதாரணங்களாகும் .

❖ குடிவரவு திணைக்களம் :- இது முக்கியமான கடமையாக கடவுச்சீட்டுக்களை வழங்குகின்றது நாட்டின் 10 இலச்சத்திற்கும் அதிகமானோர் வெளிநாடுகளில் தொழில் புரிகின்றார்கள். கடந்த வருடமும் , இத்திணைக்களம் ஊழல் பற்றிய பல விளம்பரங்களை வெளிப்படுத்தினாலும் , எத்தகையிலாவது கடவுச்சீட்டு வழங்குவதில் எத்தகைய ஊழல் இடம் பெற்றுள்ளது என்பதை அறியலாம் . இத்தகைய நடைமுறையை மாற்றத்திற்கு புதிய குடிவரவு குடியகள்வு கட்டுப்பாட்டாளர் புதிய நடைமுறையை கையாண்டார் . மற்ற எல்லா விடயங்களிலும் பார்க்க திணைக்களத்தில் உள்ள இத்தகு ஊழல் அதிகாரங்களை இனங்கண்டார் .சுழற்சி முறை மற்றும் அதிகாரிகள் இடமாற்றம் செயற்றிட்டம் , வேலைப்பகிர்வு நடைமுறை பயிற்றப்பட்ட அதிகாரங்களை பயன்படுத்தல் , மற்றும் அதிகாரங்களுக்குரிய அதிகாரங்களை வழங்கல். மற்றும் தனித்துவ தன்மையை அகற்றல் போன்றவை மூலமும், திணைக்களத்திற்கு வெளியே மற்றும் உள்வருதல் போன்ற நேரங்களில் மிகக் கடுமையான பரிசோதனை இவற்றின் மூலம் இத்தகு நிலை ஏற்பட்டது .

## பொலிஸ் திணைக்களம்

டிரான்ஸ் பேரன்ஸி இன்டர் நெஷனல் நிறுவனம் நடாத்திய ஆய்வுகளின் மூலம் பொலிஸ் திணைக்களமும் பாரிய ஊழல் நிறைந்ததாக காணப்பட்டது .மக்களால் பொலிஸ் திணைக்களமே மிகவும் மோசமான ஊழல் நிறைந்த ஸ்தாபனமென கருதப்பட்டது .இன்று அதனை ஆராய்வது மிகக்குறுகிய காலம் எனினும் இதனது அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்டு அவை நடைமுறை செல்வாக்கு சீரான நிலைக்கு கொண்டு செல்லப்படல் அவசியமாகும் .சிறந்த தொழிநுற்ப முறைகள் தற்போது அலோசிக்கப்பட்டு வருகின்றன .ஒரு பொலிஸ்காரர் தனது வீட்டில் இருந்தவாறே சம்பந்தப்பட்ட நபர் ! கொள்ளை ! கொலை சம்பவமாக் விசாரனையில் ஈடுப்படும் சுதந்திரத்தை பெறக்கூடியதாக இருக்கும் .

2003 ( L M D ) லங்கா மன்த்லி டைஜஸ்ட் வாசகர்களின் இதுவரையான ஆயவுப்படி பொலிஸ் மற்றும் சுங்கத்திணைக்களமே மிக மோசமான ஊழல் நிறைந்த இடமென கருதப்படுகிறது .முன்னர் குறிப்பிட்டவாறு சுங்கத்திணைக்கள தலைவரிடம் நடத்திய நேர்கானலின் மூலம் ஊழல் குறைப்பதற்கான வழி வகையாக கால ஆவனங்களையும் கணனி முறை படுத்தப்படுவதாக குறிப்பிட்டு இருந்தனர் .

திறைசேரியும் அதனது வரிசேகரிப்பு நிலையங்களான சுங்கம் மற்றும் உள்ளூர் வரி சேகரிப்பு போன்றவை புதிய வரிவிதிப்பு அதிகார சபை எனும் குடையின் கீழ் வருவதால் அவை தற்போது தங்களுக்குள் இது தொடர்பான தகவல் பரிமாறும் முறையினையும் , இணைப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வழிசமைத்துள்ளது .

அரசியல் வாதிகள் இலங்கையின் சமாதான நடைமுறைகள் ஊடாக தாங்கள் சுகபோக வாழ்க்கையே வாழ்வதற்கு விரும்புகிறார்கள் .எவ்வாறெனினும் ஒருவரும் இலஞ்ச மற்றும் ஊழல் தொடர்பான விசாரனைகளுக்கு எதிரானதாக இல்லை .பத்திரிக்கைகளில் இத்தகையதான சம்பவம் தொடர்பான செய்திகள் தினந்தோறும் வெளிவருகின்றது .எனினும் , அவர்கள் சுகபோக வாழ்க்கையே மேற்கொள்கிறார்கள் .இலஞ்ச மற்றும் ஊழல் ஆணைக்குழு முறைப்பாடுகள் எதுவுமின்றி விசாரனை மேற்கொள்ள முடியாது எனினும் பத்திரிக்கைகள் முறைப்பாடுகளை மேற்கொள்வதில்லை .பத்திரிக்கை சுதந்திரம் காரணமாக பாத்திரிக்கைகள் தங்களுக்கு கிடைக்கும் தகவல்கள் சம்பந்தமான விடயங்களை ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேலாக வெளியிட இயலாதது ஆகும் .இலஞ்ச மற்றும் ஊழல் ஆணைக்குழுவிற்கு உள்ள உள்ளக பிரச்சனைகளையும் , விழிப்புணர்வு பாதுகாப்பு இன்மையும் மிகக்குறைந்த அளவிலான குற்றங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பந்தமாகவே அறிக்கைகளை கொண்டுள்ளன.

மிகக் குறைந்த சார்பு தன்மை குறைகேள் அதிகாரி நியமிக்கப்பட்டதன் காரணமாக ஏற்படுகின்றது. பொலிஸ் திணைக்களம் தனது சொந்த குறைகேள் அதிகாரியையும் கல்வித்திணைக்களம் இதே போன்ற குறைக்கேள் அதிகாரியை கொண்டதாக இருப்பதால் ஊழல் சற்று குறைந்து காணப்படுகின்றது.

பின்னர் வேண்டப்பட்டது போல் பிரசித்தமான பாடசாலைகளில் மாணவர்களை சேர்ப்பதற்கு ஏற்படும். பாரிய இலஞ்ச ஊழல்கள் நகர்ப்புறத்திலும், கிராமப்புறத்திலும் முறைப்பாடுகள் இடம் பெற்றுள்ளன..

இப்போது இந்த குறைக்கேள் அதிகாரி நியமனம் தொடர்பாக கருத்து கூறுவதற்கு மிகவும் குறைந்த காலம் என்பதோடு, இந்நியமனம் தேசிய ரீதியாகவும், மாகாண ரீதியாகவும் தனது செயற்பாட்டை எதிர் நோக்கியுள்ளது. இது மிகவும் பார தூரமான பகுதியாகும். ஏனெனில், மாகாணங்கள் அதிகாரத்தை அமுல்படுத்துபவையாகவும். தேசிய மட்டங்கள் கொள்கைகள் வகுப்பவையாக காணப்படுவதயே ஆகும். கல்வித்திணைக்கள குறைக்கேள் அதிகாரி உருவாக்கப்பட்டுள்ளமை தேசிய மட்டத்திலேயேயாகும்.

தேசிய நலனோக்கு ஒழுங்கு முறையின் தூண்கள் என்றுக் கொள்வது பொருத்தமானவை அவை எந்த வித பாரபட்சமின்றி 67 அமைச்சர்களும் அவர்தம் அமைச்சர்களினூடாகவும் இயக்கப்படுவதன் மூலம் பொதுச் சேவை சிதறடிக்கப்படுகின்றது. இத்தன்மை அரச நிர்வாகத்தின் காணப்பட்டமையினறை உணர்ந்த அரசு தற்போது நிர்வாக சீர்த்திருத்தத்திற்கு உடன் பட்டுள்ளது.

**இறுதியாக தேசிய அளவில் கணிப்பிடக்கூடிய இரண்டு அம்சங்கள் பின்வருமாறு.**

கடன் வழங்கல் எனும் போர்வையில் நாடுகள் இழிவான வில் எனும் நடைமுறையை அமுல்படுத்தக்கூடாது. இவை கட்டுப்பாடான நடைமுறைகளாக கடன் வழங்கும் நாடுகள் அமுல் படுத்த நினைக்கின்றன.

கடன் வழங்கும் நியதிகளும் கடன்களுக்கான பல்வேறு பெயர்கள் இடப்படுவதும், அரசாங்கங்கள் இதனை தங்களுக்குறியதாகவும் இதனை திருப்பிச் செலுத்தக் கூடியதாகவம் இந்த இலக்கை அடையக்கூடியதாகவும் ஸ்தாபித்துக்கொள்ள வேண்டும். ஆகவே தான் இலங்கை போன்ற நாடுகள் தங்களின் கிறமமான வழிமுறைகளை தொடர்ச்சியாக பின்பற்றுவதுடன், இதற்கான உற்பத்திகளினால் தரமான இலக்கை அடைதலை உறுதிசெய்ய வேண்டும்.

மிகவும் பெறுமதி வாய்ந்த அவதானிப்பானது தற்போது வழங்கப்படும் கடன்கள் மீள் செலுத்த முடியாத கடன்கள் எனும் வரையரைக்குள் வழங்கப்படுவதன் காரணமாக, நாடுகளின் வளர்ச்சிக்காக டெண்டர் நடைமுறை இல்லாத நிலையில் வழங்குவதற்கு முயற்சி எடுக்கின்றன. எவ்வாறெனினும் கடன் வழங்களுக்கான பாதுகாப்பானது. திரும்ப செலுத்த வேண்டியது இல்லை என்பதும், டெண்டர் நடைமுறைகளுக்கு உட்படாதது எனவும் கருதினால் இது ஏற்றறுக்கொள்ளப்பட முடியாததாகும் இவற்றை ஒப்பிட்டு நோக்கினால் கடன் வழங்கு ஒழுங்கு முறை மற்றும் திருப்பிச் செலுத்தி தேவையில்லை என்பது டெண்டர் நடைமுறைக்கு உட்படுத்த வேண்டியதாகும்.

மிகப் பாரிய டெண்டர் தன்மை முதலீடு சேவைகள் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கே உரியது என நம்பப்படுவதன் காரணமாக கட்டிட ஒப்பந்தக்காரர்கள் முன் தேவைப்படும் தராதரத்தை உடையவர்களாக்க படுவதில்லை ஊழல் கொந்தாரத்து காரர்களின் ஒரு பகுதியாகவும் அவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொத்தாகவும் காணப்படுவதினால் வெளிநாட்டிலும் இலங்கையிலும் ஊழல் போற்றுதற்குரியதாகின்றது.

இதன் காரணமாகத் தான் இலங்கை பொலிஸாரும் இலஞ்சம் மற்றும் ஊழல் தடுப்பு ஆணைக்குழுவையும் தாம் விசாரித்து ஆராய்து விடயம் தொடர்பில் சர்வதேச தொடர்புகளையும் பேணிவருபவர்களால் ஊழல் முற்றாக தடுக்கப்படும்.

## அரசாங்கத்தினதும் உதவி வழங்கும் நாடுகளினதும் வினைத்திறன்கள்

இலங்கை பாரிய ஊழலுக்கான காரணிகளாக இவற்றை உள்ளிடுகிறது.

- மரபு ரீதியான நிர்வாக பலவீனங்கள்.
- பெரும் முதலீடுகளாக சொத்துக்களை தனியார் மயப்படத்தல்.
- அடித்தளவமைப்பு அபிவிருத்தி திட்டங்கள்.
- வெளிநாட்டு மூலதன ஊக்குவிப்பு

2003ம் ஆண்டு டோக்கியோவில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் பிரதம அமைச்சர் ஆற்றிய உறை பொறுப்பும், தெளிவான விளக்கம் கொண்டதாக இருப்பினும், அரசில் காணப்படும் அடித்தளவமைப்பு அதை அடையக் கூடிய சாத்தியப்படானதா இல்லை இலங்கை அரசும் உதவி வழங்கும் நாடுகளும் அந்த இலக்கை அடையக் கூடியதாக இல்லை. இன்னும் கூட மிகவும் மோசமான நிருபிக்கப்படாத ஊழல்கள் மலிந்து எல்லா வகையான ஊழல்களை வெளிப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் இல்லை என கூறலாம்.

இலங்கை ஊழல்களை தடுப்பதற்கான மிகக் குறைந்த வளங்களையே கொண்டுள்ளது இலஞ்ச மற்றும் ஊழல் ஆணைக்குழு பொலிஸ் மோசடி தடுப்பு பிரிவு, மற்றும் சொத்துக்கள் பொறுப்புக்கள் சம்பந்தமான வெளியீப்படுத்தல் சட்டம். இருப்பினும், ஊழல் மிகவும் மலிந்த நிலையே காணப்படுகின்றது
.

எனினும் ஒரு நம்பிக்கை கீற்று தெரிகின்றது நிர்வாக மறுசீரமைப்பும் சீரமைப்புக்கான முழுமையான மூலதனமும் தேவையான வளங்களும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய வழிவகைகளும் காணப்படின் ஊழலுக்கு எதிரான இலக்கை அடையலாம். விரும்பாவிடினும் இந்த மறு சீரமைப்பு வழிமுறைகள் பொது மூலதன முதலீட்டு துறைகளில் தனது ஆக்கிரமைப்பை ஏற்படுத்தி விசேடமாக டெண்டர் நடைமுறைகளில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தும் எனலாம். உலக வங்கியின் வதிவிட பிரதிநிதி திரு. பீற்றர் ஹெரோல்ட் அவர்களை, டோக்கியோ உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்பு பேட்டி கண்டப் போது இலங்கையின் நிர்வாக மறுசீரமைப்புக்கான நிதி காணப்படினும் இதற்கான முழு மனதான அங்கீகரிப்பு அவசியம் என குறிப்பிட்டார். எனினும் மறுசீரமைப்பு சம்பந்தமாக நடைமுறையில் ஊழல் ஒழிப்பிற்கான முன் மொழிவுகளும் அமைச்சிக்களின் மறுசீரமைப்பு சம்பந்தமான திட்டங்கள்எதுவும் காணப்படவில்லை. இவையே வேலை பகிர்விற்கான மிகவும் பலனுள்ள நிறுவனங்களாகும்.

இதே வேலை அரசு தனது மீள செலுத்த வேண்டிய கடன்களால் தத்தலித்துக் கொண்டிருக்கையில், தனது பொதுச் சொத்துக்களை பாரிய முதலீடுகளுக்காக விற்பதன் மூலம் ஊழலுக்கான புதிய சூழ்நிலையை உருவாக்குகிறது. இதன் மூலம் வழமையான ஊழலிற்கு மேலாக பொதுத் துறையை இயங்க வைப்பதற்காக மேலும், பல ஊழல்கள் இடம் பெற ஏதுவாகின்றது. தனியார் மயப்படுத்தல் இன்னும் முற்றுப் பெறாத நிலையில் அரசு தனது சொத்துக்களை மீளப்பெறுவதில் பெரிய விலைகளை கொடுக்க வேண்டியுள்ளது. சமூகத்திற்கு வேலை செய்வதில் ஒரு சீரான அவசியம் தேவைப்படுகின்றது. எனினும், அது ஊழலுக்கு எதிராக இருப்பதுடன் தனியார் சொத்துக்களாக காணப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறைச்சேரி இதற்கான ஒரு வேலைத்திட்டத்தை ஒருங்கிணைத்துள்ளதுடன் எவ்வாறெனினும்.அடிப்படையிலான நிலை இன்னும் இலங்கையில் தீர்த்தப்பாடில்லை .உதாரணமாக தொலைத் தொடர்பு சீராக்கள் ஆணைக்குழு இது வரையிலும் தொலை பேசி கம்பனிகளின் இணக்கப்பாட்டுடன் ஒரு ஒருங்கிணைப்புடனான விபரக்கொத்தை வெளியிட முடியவில்லை .

பஸ் போக்குவரத்து அதிகார சபையும் கூட பொதுவாக தனியார் பஸ் உரிமையாளர்கள் மூலமாக பஸ் டிக்கட் வழங்குவதை கூட உறுதிப்படுத்த முடியாதுள்ளது .

திறைச்சேரியில் அமுல்படுத்த உத்தேசித்துள்ள நிர்வாக மறுசீரமைப்பு தொடர்பான வினைத்திறன் சம்பந்தமாக குறிப்பிடுவதற்கு இது குறுகிய காலமாகும் .எவ்வாறெனினும் தகவல்களை உள்நாட்டு இறை வரி திணைக்களத்துடனும் சுங்கத்துடனும் , கலால் திணைக்களத்துடனும் பரிமாரிக்கொள்வதை குறிப்பிடலாம் .

எல்லா வகையிலும் ஊழல்களை குறைப்பதற்கான அதிகாரங்கள் மிகவும் குறைவாகவே காணப்பட்டமையும் , அறிந்துக் கொள்வதற்கான வாய்ப்பு வழங்கப்படாமையும்

- வங்கியில் வழங்கப்படும் நிரந்தர வைப்புக்களை சான்றிதழில் வைப்பாளரின் பெயர் அல்லது மீளப் பெறுபவரின் பெயர் குறிப்பிடப்படாமை .
- அரசியற் கட்சிகள் அல்லது அதன் வேட்பாளர்கள் தமது சொத்து தொடர்பிலான பிரகடனங்களை வெளியிடுவதற்கு சட்ட ரீதியான முறையான கேள்வியின்மை .
- அரசியல் பிரச்சாரங்களுக்காக முதலீடு செய்பவர்களுக்காக அரசியல் வாதிகளால் வழங்கப்படும் உத்தரவாதம் .
- சுதந்திர தகவல் வழங்களுக்கான சட்ட வரைபு இன்மை .

அண்மைக்கால பெரும் நிதி வழங்கும் நாடுகளின் வழங்களின் போது சிவில் சமூகம் மிகவும் விழிப்புணர்வுடன் ஊழல் தொடர்பான விடயங்கள் இயங்க தொடங்கியுள்ளது .மக்களின் குரலை செவிமடுக்க வேண்டிய நிலையில் அரசு உள்ளதால் சர்வதேச சமூகத்துடனான நிலையில் அரசின் நிகழ்ச்சி நிரலில் இதனை ஏற்படுத்த வேண்டும் .இதுவரையிலும் இந்நிலை தோன்றவில்லை .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னுரிமைகளும் சிபார்சுகளும்

ஊழலை தடுப்பதற்கான வழிவகைகள் பல கோணங்களிலும் நாம் ஆராய வேண்டியுள்ளது .உதாரணமாக தனித்துவ வழக்குகள் , முறையான கொள்கைகள் இனரீதியான , பொருளாதார ரீதியாக சமூக ஒழுக்குகள் போன்றவற்றில் ஊழலில் இருந்து மீட்க வேண்டியுள்ளது .அரசு இந்நிலையை தனது உறுதியான நிலை காரணமாக அடைய முடியாதுள்ளது .இலங்கையில் அரசுக்கு மேலதிகமாக எந்தவொரு அதிகார சபையும் இதனை ஒருங்கிணைப்பதற்கான நடைமுறை இல்லை என குறிப்பிடப்படுகிறது.

இது ஒரு கேள்வியை ஏற்படுத்துகின்றது ஊழலை குறைப்பதற்காக எவ் வகையில் உள்ளிடுவது என்பது தொடர்பில் பின்வரும் சிபார்சுகள் உத்தேசிக்கப்பட்டுள்ளன .

**பொதுத்தகவலுக்கு மேலதிகமாக சுதந்திர தகவல் ஊடகம் மற்றும் விழிப்புனர் பாதுகாப்புக்கான சட்டங்கள் ஏற்படுத்தல் .**

**பொதுத்துறைக்கான தகவல் பரிமாற்றம் வழங்கப்படுதல் மூலமும் சிவில் சமூகம் பொதுச் செயற்பாட்டினை மேற்பார்வை செய்வதன் மூலமும் இலஞ்ச மற்றும் ஊழல் ஆணைக்குழுவை திறம்பட இயங்கச் செய்தல் மூலமும் எங்கு குற்றம் நிகழ்கிறது மற்றும் சந்தேகத்திற்கு இடமானது பற்றி ஆராய்தல் .அத்தோடு , சிவில் சமூகங்கள் பொதுத்துறை மீதான செல்வாக்கினை செலுத்த இடமளிக்கலாம் .**

**பொதுத் துறை மற்றும் தனியார்த் துறை சுதந்திர தகவல் ஊடகத்தின் அவசியத் தன்மை கருதி செயற்படவும், அது குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் செயற்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவது சட்டத்தின் மூலமேயாகும் .என இந்நிலை இல்லாவிடின் இது வழமையான குறைவான பலனையே தரும் எனில் மிகையாகாது .**

## பொது நிர்வாகத்துறை மீளமைப்பு

முன்னாள் அரசாங்கத்தினால் அமுல்படுத்த முனைந்து சிறிது விருத்தி அடைந்த பொது நிர்வாகத்துறையினை மீளமைப்பதே மிகவும் பாரிய முயற்சியாகும் .அதே வேளை இதனை மீளமைப்பு செய்வது என்பது வெறுமனே திணைக்கள தலைவர்களை மட்டுமே உள்ளடக்கியதாக அமையாமல், சேவைகளை வழங்குவதை மட்டுமே மையமாக கொண்டிராமல் அது பொது நிர்வாகத்துறையின் சகலவிதமான துறைகளான நிர்வாக சீரமைப்பு , வேலைத்திறன் போன்ற எல்லா விதமான மாற்றங்களையும் கொண்டதாக அமைய வேண்டும் என்பதே இலக்காகும் .இதன் வாயிலாக பொதுவில் காணப்படும் ஊழலை அழிக்க முடியும் .

**கணக்காய்வாளர் திணைக்களத்தை COPA / COPE மூலமாக சக்திப்படுத்துதல்**
**கணக்காயாவாளர் திணைக்களத்தை கணக்காய்வு செய்தல் .**

கணக்காய்வாளர் நாயகம் ஏலவே தனது திணைக்களத்தை மேம்படுத்துவதற்கான பயிற்றப்பட்ட ஆளணியினையும் போதிய நிதி வளத்தையும் கொண்டுள்ளார் .கணக்காய்வாளர் நாயகம் தனது பயிற்றப்பட்ட விசேட ஆளனி தேவையை உணர்ந்து உள்ளதன் காரணமாக அதாவது காரியாலயம் ஒழுங்கு முறை அடிப்படையிலும் திட்ட முறை அடிப்படையிலும் கணக்காய்வை முகாமைத்துவத்தை அபிவிருத்தி செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் பொறுப்புக்களையும் சொத்துக்களையும் பாதுகாக்க முன் வந்துள்ளது .

இதற்கு மேலதிகமாக வெளிவாரி கணக்காய்வாளர் நாயகம் கணக்காய்வு திணைக்களத்தின் கணக்கு வழக்குகளை ஆய்வு செய்யலாம் . இது ஒழுக்கு முறை அடிப்படையிலான ஆய்வாகும் இதன் மூலம் வேலைப் பயிற்சியினை அபிவிருத்தி செய்யலாம் .இவ்வாறான கணக்காய்வின் கண்டுபிடிப்புக்கள் கணக்காயவாளர் திணைக்களத்தின் அதிகாரத்தினூடாக திணைக்களத்தின் வினைத்திறனை அதிகமாக்கலாம் .இலங்கையின் மதிப்பு வாய்ந்த தனியார் நிறுவனமொன்று இத்தகைய தனியார்மய கணக்காய்வு வேலைகளில் ஈடுபடலாம் .

இலஞ்ச மற்றும் ஊழல் தொடர்பான ஆணைக்குழு வினைத்திறனை அதிகரிக்கும் வகையில் மிகப் பெறுமதி வாய்ந்த ஊழல் வழக்குகளை கையாள்தல் வேண்டும் .

இது வரையிலும் ஊழல் தொடர்பான வழக்குகளில் மிகவும் கடினமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை .எனினும் இலங்கை மிகவும் மோசமான பாரிய ஊழல் குற்றச்சாட்டுக்களை நோக்கி நகர்கின்றது . அத்தோடு இவ் ஆணைக்குழு இதற்கான விளம்பரங்களை நாடுவதுடன் அத்தோடு இவ் ஆணைக்குழு அரசியல் வாதிகளின் நடத்தை மற்றும் வியாபார சமூகத்தின் நடவடிக்கை மற்றும் பொதுத்துறை அதிகாரிகளின் நடத்தை தொடர்பில் ஊழல் தொடர்பாக ஆராய்கின்றது . இலஞ்ச மற்றும் ஊழல் விசாரனை ஆணைக்குழ ஊழல் தொடர்பான வழக்குகளில் வெற்றி பெறுவதன் மூலம் புதிய ஊக்க சக்தியை பெறுவதுடன் இவ் ஆணைக்குழுவின் அதிகாரிகளை ஊக்கப்படுத்துவதுடன் பொதுசன நம்பிக்கையையும் பெறுவதன் மூலம் கூடுதலான முறைப்பாடுகளை பொது மக்களிடமிருந்து பெற்றுக்கொள்ள முயற்சிக்கின்றது .

**அரசியல் கட்சிகள் அல்லது அபேட்சகர்களின் தேர்தல் பண முதலீடு சம்பந்தமாக கவனிப்பதற்கான சட்ட வலு அவசியம் .**

ஏனைய நாடுகளைப் போல இலங்கையிலும் மேற்குறிப்பிட்ட வீடயம் தொடர்பான சட்ட வலு

சொத்துக்கள் வளங்கள் தொடர்பிலான வெளிப்படுத்துகை அவசியமென கருதப்படுகிறது. முதலீடுகள் தொடர்பாகவும், அரசியல் நடாத்துவதற்கான செலவீனங்களையும் வெளிப்படுத்தல் வேண்டும் . இந்த அறிக்கைகள் ஆண்டு தோறும் தேர்தல் ஆணையாளரிடம் பிரகடனப்படுத்தப்படுவதோடு இவை தாமதிக்கப்பட்டால் (உ வருடம் ) இதனுடைய அங்கத்துவம் மீளப்பதிவு செய்யும் நடைமுறை பின்பற்றப்பட வேண்டும் .( கட்சி । அபேட்சகர் )

**வரவு செலவீனங்களை வெளிப்படுத்துகை .**

எல்லா தெரிவு செய்யப்பட்ட அரசியல் வாதிகளும் (தேசிய , மாகாண , மற்றும் உள்ளூராட்சி) வருடந்தோறும் தங்களின் வரவு செலவு விபரங்களை வெளியிட வேண்டும் .விசாரணையின் போது ஒரு அரசியல் வாதியின் நிதிநிலைமையினை சமன் செய்ய முடியாவிட்டால் அவர் விசாரனைகளுக்கு உட்படுத்தப்பட வேண்டும் .அவரது மேலதிகமான வருவாய் அல்லது செலவினம் தொடர்பில்

ஆசனத்தை அல்லது பதவியை இழப்பதோடு , சாதாரன ஊழல் தடை சட்டத்தின் கீழ் தண்டனைக்குரியவராதல் வேண்டும் .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஊழலுக்கான சூழல் பற்றிய கணிப்பும் , தேர்தல் முறையின் நடைமுறையும் .

தேர்தல் மறுசீரமைப்பு தொடர்பாக தற்போது நடைபெறும் விவாதங்களில் தேர்தல் நியமன முறையில இடம் பெறும் ஊழல் தொடர்பில் விவாதிக்கப்படுவதும் அவசியமாகும் . இன்று பாராளுமன்ற தேர்தல்களுக்கான செலவு மிகவும் அதிகமானதும் விமர்சனத்திற்குரியதுமாகும் .அரசியல் கட்சிகளின் அபேட்சகர்கள் தங்களின் சொத்துக்களை அடகு வைத்து அல்லது விற்று தான் தேர்தல் பணிகளில் தங்களின் ஆதரவாளர்களை திரட்டுகின்றார்கள் .

**டெண்டர் நடைமுறையை மீள புனரமைத்தல் கமிஷன் மற்றும் ஆய்வாளர்களுக்கான பணத்தொகை தீர்மானித்தல் , முடிவுகள் சம்பந்தமான திறந்த நிலை பொதுப்பாதுகாப்பிற்காக.**

தற்போது டெண்டர் நடைமுறை மிகவும் இருட்டாக இருக்கின்றது . இதன் மூலம் கருதப்படுவது யாதெனில் டெண்டர் வழங்குவதில் உள்ள தொழிநுட்ப முறைகளோ அல்லது டெண்டர் வழங்கும் நடைமுறைகளோ பொது மக்களுக்கு தெரிவதில்லை . இந்த நடைமுறைகள் வெளியில் தெரியாத அளவிற்கு முடக்கப்பட்டுள்ளன .சிறிதளவு விகித ரீதியாக தீர்மானிக்கப்படாத முடிவுகளாகவும் தெரிவிற்கான நடைமுறைகள் ஆவண ரீதி அற்றவையாகவும் காணப்படுவதால் மதிப்பீடுகள் சம்பந்தமானவை வெளியில் தெரிவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை. முடிவுகள் எடுக்கப்பட்ட பின்பே தேவையான அளவு கேள்விகள் வழக்குத் தொடர கூடியனவாக வகை உள்ளன .சுதந்திர தகவல் ஊடகம் இந்த தேவைகளுக்கே அவசியமாகவுள்ளது .

மேலதிகமாக ஊழலை குறைப்பதற்கான நடைவடிக்கைகளுக்கு தேவையான பாதுகாப்பு நடைமுறைகளை மேற்கொள்வதற்கு ஆய்வு அவசியமாகவுள்ளது .கணக்காளர் நாயகத்தின் அறிக்கையை ஆய்வு செய்வதில் இருந்தும் நீதிமன்ற வழக்குகளில் இருந்தும் இந்த வலுக்களை அகற்றுவதற்கு பொதுப்பாதுகாப்பு வழிமுறைகளினூடாக ஒரு அவசியமான திடகாத்திரமான ஆரம்பம் அவசியமாகின்றது .

**எல்லா வகையான பொருளாதார மாற்றங்களுக்குரிய எல்லா வகையான மேற்பார்வையில் மத்திய வங்கியின் சட்ட அந்தஸ்த்து .**

பெயர் மறைவாயுள்ள ஒருவரால் சமர்ப்பிக்கப்பட்ட வைப்புச்சான்றிதழ்கள் மூலம் சட்ட வலுக்கள் மேற் கொணரப்பட்டன .வழமையற்ற கைமாற்றலுக்கு பல நாடுகள் மிக உயர்ந்த பெறுமதிமிக்க அறிக்கையை மின்மயப்படுத்துகின்றன . .இத் தேவைக் கருதி மத்திய வங்கி தனக்குள்ளாக இவ்வாறான வழமையற்ற கைமாற்றங்கள் கண்டுப்பிடிப்பதற்கான வழி வகைகளை மேற்கொள்ள வேண்டும் மேலும் , ஏதாவது இவ்வகையான கை மாற்றங்கள் கண்டுப்பிடிக்கப்படின் அது இடம் பெற்ற வழி வகைகள் தீவிரமாக ஆராய்வதற்கென நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் .

நாட்டின் மூலதனக் கணக்கு திறந்ததாக இருப்பதற்கு இத்தகைய மேற்பார்வைகள் அவசியமாகின்றன .இதன் மூலம் கருதப்படுவது யாதெனில் மூலதன தேவைக்காக , வெளிநாட்டு நிதி மாற்றம் மத்திய வங்கியின் அனுமதிப்பானது இதன் பின் தேவைப்பட மாட்டாது .தற்போது இத்தகைய அனுமதியற்ற கரண்ஸி மாற்ற தன்மை வியாபாரத்திற்கு மட்டுமே உள்ளது .

### ஊடக பிரச்சாரம் .

தேசிய நலனோக்கு விடயம் அர்த்தமுள்ளதாக கணிப்பிடப்படுவதற்கும் , தேடுதல் நடவடிக்கை அதிகாரத்திற்கும் தொலைத்தவற்றறை மீளப் பெறுவதற்கும் விளம்பரம் மிகவும் அத்தியவசியமாகின்றது . இதன் அடிப்படையில் சிங்கப்பூர் மற்றும் ஹொங்கொங் போன்ற நாடுகளில் பல்தரப்பட்ட ஊழல் எதிர்ப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைகளை ஆலோசித்து உள்ளதுடன் அவற்றிற்கு அவர்களின் முக்கியமாக ஊடகத்தையே பெரிதும் விரும்புகின்றார்கள் இதன் மூலமே ஊழல் முற்றாக ஒழிக்கமுடியுமென கருதுகிறார்கள்.

## முன் மொழிவுகளும் சிபார்சுகளும்

மேற் குறிப்பிட்ட சகல விதமான முன்மொழிவுகளிலும் குறிப்பிடுவது யாதெனில் சுதந்திரமான ஊழல் எதிர்ப்பு அதிகார சபை ஒன்றின் அவசியத் தேவை ஆகும்.

- ஒன்றுக் கொன்று ஆதரவாகவுள்ள ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.
- குறித்த அரசாங்கங்கள் ஊழல் எதிர்ப்பிற்கான நடவடிக்கைகளை தங்கள் வேலைத்திட்டங்களின் ஊடாக பிரயோகப்படுத்தல் வேண்டும்.
- மேற்பார்வை முறைகள் ஊழல் எதிர்ப்பினை உறுதிப்படுத்தும்.
- முறையான விசாரணைகளையும் நடவடிக்கைகளையும் ஊழலுக்கான காரணக்கருத்தாக்களை திருத்தவும் விசேடமாக அரசியல் வாதிகள் போன்ற பாரிய சந்தேகப் பேர்வழிகள், சுங்கத்திணைக்கள அதிகாரிகள், பொலிஸ் மற்றும் பல.
- விழிப்புணர்வு பாதுகாப்பினை ஏற்படுத்தலும், வழிநடத்தலும்.
- ஒவ்வொரு மட்டத்திலும் காணப்படும் குற்றங்களுக்கும் அவை வெளிக்கொணரப் படுவதற்கும் உடனடி நடவடிக்கைக்கான உத்தரவாதம்.
- குற்றவாளிகளிடமிருந்து தொலைத்தவற்றை மீளப் பெறும் அதிகாரம்.
- ஊழல் எதிர்ப்பிற்கான அறிவூட்டல் பிரச்சாரம் நடவடிக்கைகள் ஏற்படுத்துதல்.

இந்த அதிகார சபை சாதாரண ஒருவரும், ஓய்வு பெறாத ஒருவருமாக இருவரை உள்ளடக்கியதாக அமைய வேண்டும். இந்த பதவியானது உள்ளார்ந்ததாகவும், ஊக்கமுடையதாகவும், சிந்திக்கத்தெரிந்ததாகவும் பரஸ்பரம் கலந்துறையாட கூடியதாகவும், சேவைகளின் மூலம் அடிமட்டத்தில் இருந்து கவணிக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும். உடனடியாக அரசியல் வாதிகளிடம் இருந்தும், பொது நிர்வாகவாகத் துறையினரிடம் இருந்தும், வரப்பிரசாதமிக்க வியாபார சமூகத்திடம் இருந்தும் தற்போதைய முறையினால் இலாபம் அனுபவிப்பதை தவிர்க்க வேண்டும். இதுவே உண்மை நிலை.

சமாதான ஊக்கிகள் பொது மக்களின் நுகர்வினை வெளிப்படுத்துவது ஊழல் எதிர்ப்பிற்கான வழிமுறைகள் மிகவும் குறைவாக இருப்பதினாலேயேயாகும். இதன் காரணமாகவே சிவில் சமூகத்தின் ஊழல் எதிர்ப்புக் குழக்கள் தம்மை பலப்படுத்த வேண்டும் என்பதோடு சமாதானத்திற்கு தடையானவை தவிர்க்கப்பட வேண்டும் இல்லையெனில் சமாதானம் ஒரு திசைக்கு மட்டுப்படுத்தப்பட்டுவிடும் என்பது உண்மையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை .

தேசிய நலனோக்கு வழிமுறையின் குறிகாட்டுனர்கள்.

## கேள்விக் கொத்து.

## நிறைவேற்றுத்தன்மை .

❖ பிரஜைகள் தங்களின் சிவில் உரிமைகள் மீறப்டுவதற்கு அரசை குறிகாட்ட முடியுமா?

### சாதாரண நிலை.

ஆம் அரசியல் அமைப்பின் உறுப்புரை !!! ன் படியும் அடிப்படை உரிமை மீறளுக்காக உயர் நீதி மன்றத்திடமும் , சாதாரண சட்டத்தின் அடிப்படையில் மேன்முறையீட்டு நீதிமன்றிடமும் , ஹேபீஸ்யஸ் கோர்பஸ் மனு மூலம் சரியான தீர்ப்பிற்கும் ,சேஹீயோராரி ,மண்டமஸ்,குவா வாரண்ட் தடை மூலம் இதனை செய்யலாம்.

### நடைமுறை .

பிரஜைகள் நிறைவேற்று அதிகாரத்தாலும் , நிர்வாக நடைமுறையாலும் தங்களுக்கு ஏற்படும் பாதகங்களுக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் சம்பந்தமான வழக்குகளை தொடுக்கின்றார்கள். அடிப்படை உரிமை சம்பந்தமாக இந்த சரத்து அரச ஊழியர்களின் பதவியுயர்வு இடமாற்றம் தொடர்பிலான பல்வேறு பாதகமான நடவடிக்கைகளுக்கு எதிராக வழக்கு தொடர வழி அமைக்கின்றது. உயர் நீதிமன்றம் இத்தகைய வழக்குகள் தொடர்பில் உறுப்புரிமை சரத்தின் படி தனது தீர்ப்பினை வழங்குகின்றது .

❖ அமைச்சரவை மற்றும் அரச அமைச்சர்கள் தங்களின் சொத்துக்களை பிரகடனப்படுத்துவதற்கும் , மறைக்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பிலும் யாதாயினும் "சொத்து மேற்பார்வை" நடை முறையில் உள்ளதா?

### சாதாரண நிலை.

ஆம் ஒவ்வொரு வருடமும் அவரவர் தமது சொத்துக்கள் தொடர்பாக இல 01 – 1975ம் ஆண்டு சொத்துக்கள் , பொறுப்புக்கள் பிரகடனத்தை பாராளுமன்ற சபாநாயகருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

### நடைமுறை

இந்தப் பிரகடனங்கள் குறிப்பிட்ட நாட்களில் அன்றி கால தாமதமாகியே பிரகடனப்படுத்தப்படுகின்றன அல்லது பிரகடனப்படுத்தப்படுவதில்லை .

ஊழல் சம்பந்தமான ஒரு முறைப்பாடு கிடைக்கும் வரை இத்தகைய பிரகடனங்கள் தொடர்பான செயற்பாடு நடைபெறுவதில்லை .

❖ தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளுக்கும் உயர் மட்ட அதிகாரிகளுக்கும் சொத்து பிரகடனம், தொடர்பில் யாதாயினும் வித்தியாசம் காணப்படுகின்றதா ?

சாதாரண நிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை.

❖ அமைச்சர்களுக்கான இத்தகைய சொத்து பிரகடன விடயத்தில் யாதாயினும் முரண்பாடு காணப்படுகின்றதா?

சாதாரண நிலை

ஆம்:- அரசியலமைப்பின் 91 (01) (03)பிரிவுகளுக்கு பாராளுமன்ற குறித்துரைக்கும் சட்டத்திற்கமைய யாராயினும் ஒருவர் அரசுடன் ஏதாயினும் தரகு விடயத்தால் சம்பந்தப்பட்டு இருப்பின். அவர் பாராளுமன்றத்தில் அமர்வதற்கோ அல்லது வாக்களிப்பதற்கோ தகுதியற்றவர் ஆகிறார்.

நடைமுறை.

தேசிய பட்டியல் உறுப்பினர்கள் இத்தகைய உறுப்புரைக்கு கட்டுப்படாதவர்கள் என தீர்ப்பு கூறப்பட்டு உள்ளது. உதாரணமாக ,Dr .ராஜித சேனாரத்ன பல் சம்பந்தமான உற்பத்திகளுக்கு கொந்தராத்து பெற்று இருந்தமை அவர் தேசிய பட்டியல் நியமனம் என்பதால் இக்குற்றச்சாட்டில். இருந்து நீக்கப்பட்டார்.

❖ உயர் மட்ட அதிகாரிகள் தொடர்பில் இப்பிரகடனம் யாதாயினும் முரண்பாடுகளை கொண்டுள்தா?

சாதாரண நிலை.

ஆம்.அரச பணியாளர் கட்டளைச்சட்டம் பகுதி xxxix உறுப்பு 4 . 3 ன் படி அவரது சொத்து தொடர்பில் யாதாயினும் முரண்பாடு தோண்றும் சந்தர்ப்பத்தில் அவரது சொத்து ,பங்குகள் ,வட்டிகள், தொடர்பிலான பிரகடனத்தை மேற்கொள்ள வேண்டி வரும்.

நடைமுறை .

சாதாரணமாக இந்நிலை மீறப்படுகின்றது . ( பல்வேறு அரச நிறுவனங்களில்)

❖ அமைச்சர்களுக்கும் ,உயர் அதிகாரிகளுக்கும் யாதாயினும் சன்மானம் அல்லது நன்கொடை பெறுவதற்கு அனுமதி உள்ளதா ?

சாதாரண நிலை .

அனுமதி இல்லை , ஆகவே பதிவேடு பேணப்படுவதில்லை.

❖ அமைச்சரவை அல்லது பதவி தொடர்பானவர்களின் பதவிக்காலம் தொடர்பில் யாதாயினும். கட்டுப்பாடு உள்ளதா ?

சாதாரண நிலை.

இல்லை . எவ்வாறெனினும் நிறைவேற்று அதிகார தலைமை தொடர்பில் ஒருவர் இரண்டு அல்லது பதவிக்காலத்திற்கு மேல் அப்பதவியில் இருக்க முடியாது .

❖ நிறைநேற்று அதிகார தலைமை யாருக்கும் பதிலிறுக்க சட்டத்தினால் கடமைப்பட்டுள்ளதா?

சாதாரண நிலை.

அரசியலமைப்பின் உறுப்புரை 42 ன் படி ஜனாதிபதி பாராளுமன்றத்திற்கு பதில் சொல்ல கடமைப்பட்டுள்ளார்.

எவ்வாறெனினும் ஜனாதிபதி சில விஷேட அதிகாரங்களின் மூலம் தனது அதிகாரங்களை பிரயோகிக்க ஏற்பாடுள்ளது .அரசிலமைப்பு உறுப்புரை 35 (01 ) ன் படி ஜனாதிபதி பதவியை அலங்கரிக்கும் ஒருவர் எந்த நீதிமன்றத்திலும் குற்றஞ்சாட்டப்படுவதில் இருந்து தவிர்க்கப்படுவதும். அவரது கடமை தொடர்பிலும் ,செய்யாது விடப்பட்ட பணி தொடர்பிலும் நீதிமன்ற விசாரனைக்கு உட்படுத்த முடியாது என்பதாகும் .பிரதம அமைச்சர் மற்றும் அமைச்சரவை உறுப்பினர்கள் பாராளுமன்றத்திற்கு தங்களது பொறுப்புக்கள் தொடர்பில் வகை கூற வேண்டியவர்களாவர்.சாதாரன சட்டங்களின் படி எழுத்து மூல நீதி மன்ற நியாயாதிக்கத்திற்கு பாராளுமன்ற அமைச்சர்களும் உயர் மட்ட அதிகாரிகளும் வகை கூற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டியவர்களாவர்.

நடைமுறை

இதுவரை பாராளுமன்றம் ஜனாதிபதியிடம் நியாயாதிக்க விளக்கம் கோரவில்லை.

❖ டெண்டர் நடைமுறை தொடர்பிலும் மற்றும் கொந்தராத்து தொடர்பிலும் அமைச்சர்கள் அல்லது சமமான உயர் மட்ட அதிகாரிகளுக்கு தங்களது அதிகாரங்களை பயன்படுத்த முடியுமா ? இந்த அதிகாரம் சிறப்பான சந்தர்ப்பங்களில் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதா ?

சாதாரண நிலை

ஆம் .அரச அதிகாரிகளால் அமைச்சின் செயலாளருக்கு சிறப்பாக விதந்துறைக்கப்பட்ட கொந்தராத்து தொடர்பில் அமைச்சின் செயலாளர் இதனை நடுநிலை செய்து அமைச்சருக்கு விதந்துறைப்பார்.அமைச்சர் இதனை அரச கொந்தரத்து முடிவுகளின் படி அங்கீகாரம். வழங்குவார்.

## குறித்துரைக்கப்பட்டுள்ள அனுமதி கொந்தராத்து

| | |
|---|---|
| திணைக்கள தலைவர் | ரூபா 100 000.00 வரையும் |
| திணைக்கள் டெண்டர் சாலை | ரூபா 10 000.00 வரையும் |
| அமைச்சரவை டெண்டர்சாலை | ரூபா 20 000.00 வரையும் |
| அமைச்சரவையில் நியமிக்கப்பட்ட – டெண்டர் சபை | ரூபா 20 000.00 க்கு மேல் |

( அரச கொந்தரத்து நடைமுறை ,நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினால் விநியோகிக்கப்பட்டது. (இலங்கை) மீளமைக்கப்பட்ட பதிப்பு ஆகஸ்ட் 1977 )

நடைமுறை.

உயர் நீதி மன்றில் பல்வேறு வகையான கொந்தாரத்துகள் தொடர்பில் அடிப்படை உரிமை வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.முறையற்ற கொந்தராத்துகள் அரசியலை மையமாக வைத்து அளிக்கப்பட்டுள்ளது.

உதாரணமாக ,

1 .சுவீஸ்ரே எதிர் பெர்ணாண்டோ .( S L F R 51 / 94 , S C M 25 / 07 / 94 )

2.பீளோர்கெயார்கிளினிங் சேர்வீஸ் பிறைவேட் லிமிடெட்.
எதிர் ருகுணு பல்கலைக்கழகம் . (S L F R 285 / 2001, S C M 09 / 05 / 2002)

கணக்காய்வாளர் திணைக்கள ஆய்வறிக்கையின் படி பல முறைக்கேடான சம்பவங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

உதாரணமாக , 4000 பலஸ்டிக் தலைக்கவசத்திற்கான டெண்டர் 08 உப தொகுதிகளாக டெண்டர் கோரப்பட்டமை .அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட டெண்டர் சபையால் அனுமதியை பார்க்கிலும். 08 உப தொகுதிகளாக கோரப்பட்டமையின் மூலம் திணைக்கள தலைவரின் உச்சரவரம்புக்குரியதாக டெண்டர் நடைமுறை பேணப்பட்டமை .

இந்த டெண்டரின் மொத்த பெறுமதி 37 069 320.00

மூலம் (பாராளமன்ற அறிக்கை இல 08 கணக்காய்வாளர் அறிக்கை 2001 . மூன்றாவது கொடுப்பனவு, இலங்கை இராணுவம் குறிக்கப்பட்ட பகுதி ,231 । பந்தி , 03 )

❖ நிறைவேற்று அதிகாரமிக்க தனி நபர் தொடர்பில் இதனை பரிசீலனை செய்வதற்கு யாதாயினும். நிர்வாக நடைமுறை உள்ளதா ?

சாதாரண நிலை

பொது கணக்குகள் குழுவும் ( PAC ) பொது நிறுவன குழுவம் ( LOPE ) இத்தகைய பரிசீலனையை செய்ய வேண்டும் என விஜேகேசர குறிப்பிட்டுள்ளார்.பொது கணக்குகள் குழுவின் பணியானது ,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராளுமன்றத்தால் ஒதுக்கப்பட்ட நிதியின் செலவீனங்கள் தொடர்பாக கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையுடன் ஒப்பு நோக்குதலை காலத்திற்கு காலம் செய்ய வேண்டும். சாதாரண நிர்வாக. சட்டத்தின் அடிப்படையில் அமைச்சர்களும், அதிகாரிகளும் நீதிமன்றுக்கு பதிலிறுக்க வேண்டியவர்கள். ஆவர்.

# பாராளுமன்றம்

.பாராளுமன்றம் வரவு செலவு திட்டத்தை அங்கீகரிக்க வேண்டுமா.?

சாதாரண நிலை

ஆம். அரசியலமைப்பின் XVII பிரிவின் படி.

❖ சில விசேட துறைகளின் பொதுச் செலவீனங்கள் தொடர்பில் பாராளுமன்ற அங்கீகாரம். அவசியமா? இதில் எந்த திணைக்களங்கள் உள்ளடக்கப்படுகின்றன.அவற்றின் செலவீனம் யாது ? அரசின் வருடாந்த வரவு செலவு திட்டத்தில் எத்தனை வீதத்தினை இது பிரதிபலிக்கின்றது ?.

சாதாரண நிலை

இல்லை

நடைமுறை.

இரகசியமான இராணுவ செலவீனம் கணக்காய்வாளர் நாயகத்தின் பரிசீலனைக்கு உட்படுத்துவதில்லை .பாதுகாப்பு செலவீனம் 1998 ம் ஆண்டு மொத்த செலவீனத்தால் 25 % ஆக இருந்து 20 % ஆக 2002 ல் குறைக்கப்பட்டது. மூலம் ( இலங்கை வங்கி கணக்கறிக்கை 2002 )

❖ பாராளுமன்ற உறுப்பினர் அவர்களது அதிகாரம் தொடர்பில் முரன்பாடு உள்ளதா ?

சாதாரண நிலை

ஆம். அரசு தொடர்பிலான கொந்தராத்துகள் கோர முடியாது.

நடைமுறை.

எவ்வாறெனினும் இவர்கள் தங்கள் குடும்ப உறுப்பினர்கள் பெயரில் இவற்றை கோருகின்றார்கள். உதாரணமாக, 1. ஒரு அமைச்சின் குடும்ப உறுப்பினரால் நிர்வகிக்கப்படும் கம்பனி மூலமாக பாதை சீர்திருத்தல் சம்பந்தமாக கொந்தாரத்து கோரப்பட்டமை தொடர்பிலான பத்திரிக்கை குற்றச்சாட்டு.

2.நன்கொடைகள்,சன்மானங்கள் தொடர்பில் ஏதேனும் பதிவேடுகள் பேனப்படுகின்றது.

❖ நன்கொடை சன்மானங்கள் தொடர்பில் ஏதேனும் பதிவேடுகள் பேணப்படுகின்றதா ?

சாதாரணநிலை.

இல்லை.

❖ அவ்வாறு எனின் இப்பதிவேடுகள் முறையாக பேணப்படுகின்றதா ?

சாதாரணநிலை

முறையானது அல்ல ( பதிவேடுகள் பேணப்படுவதில்லை )

❖ பதவி தொடர்பில் கட்டுப்பாடுகள் உள்ளதா ?

சாதாரண நிலை

இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல்கள் ஆணைக்குழு.

❖ சுயாதீன தேர்தல் ஆணைக்குழு உள்ளதா ? ( இல்லையெனில் தேர்தல்களை நடாத்துவதற்கான தனியார் நிறுவனங்கள் எதுவித பங்குபற்றுதலும் இல்லாமல் உள்ளனவா ?

சாதாரண நிலை .

ஆம்.03 / 10 / 2001 17 ம் அரசியலமைப்பு திருத்தத்தினால் உருவாக்கப்பட்டுள்ளது .

நடைமுறை

ஆணைக்குழு நியமிக்கப்பட வில்லை . தேர்தல்கள் ஆனையாளர் ஆணைக்குழுவாக இயங்குகிறார்.

❖ யார் ஆணைக்குழுவின் தலைவரை நியமிப்பது ?

சாதாரண நிலை

நிறைவேற்ற அதிகாரமிக்க தலைவர். ( ஜனாதிபதி ) அரசியலமைப்பின் 103 (01 ) குறிப்பிடுவதாவது ,ஐந்து உறுப்பினர்கள் கொண்ட தேர்தல்கள் ஆணைக்குழுவை அரசியலமைப்பு சபையின் சிபார்சுடன் ஜனாதிபதியால் நியமிக்கப்படுவர்.

நடைமுறை .

அரசியலமைப்பு சபை ஐந்து உறுப்பினர்களை இந் ஆணைக்குழுவிற்கு சிபார்சு செய்து இருப்பினும் ஜனாதிபதி இன்றும் இந்த நியமனத்தை மேற்கொள்ளவில்லை.அரசியலைப்பு சபைக்கும் ஜனாதிபதிக்கும் மிக நீண்ட காலமாக காணப்படும் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவரை நியமிக்கும் முடிவில் காணப்படும் இழுபறி நிலையே இதற்கு காரணமாகும் .

மேலும், தற்போது இருக்கும் தேர்தல்கள் ஆனையாளர் ( அரசியலமைப்பு சபை ஏற்படுத்துவதற்கு முன் நியமிக்கப்பட்டார் ) அடிப்படை உரிமை மனுவை தாக்கல் செய்து அவரது சேவை ஓய்வினை பெற ஏற்பாடு செய்கின்றார்.எனினும் ,உயர் நீதி மன்றம் இவரது மனுவை நிராகரித்து தேர்தல்கள் ஆணைக்குழு நியமிக்கப்படும் வரை இவரை அப்பதவியில் தொடர்ந்து இருக்கும் படி பணித்துள்ளது .

# அரசியல் கட்சிகள்

❖ பொது மக்களால் ஏதாயினும் நன்கொடை வழங்கப்பட முடியுமா ?

சாதாரண நிலை

இல்லை .

❖ அரசியல் கட்சிகளின் செலவினங்கள் தொடர்பாக யாதாயினும் சட்ட வரம்பு உள்ளதா ?

சாதாரண நிலை

இல்லை .

❖ அரசியல் கட்சிகளின் கணக்கு விபரங்கள் பகிரங்கப்படுத்தப்படுமா ?

சாதாரண நிலை

இல்லை .

❖ இந்த நிறுவனங்கள் தனிப்பட்ட முறையில் தங்களாகவே இதனை ஆராய்துள்ளார்களா ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதாரண நிலை

முறையற்றது .

யார் நிறுவன தலைமையை நியமிப்பது ?

சாதாரண நிலை

முறையற்றது .

# உயர் கணக்காய்வு நிறுவனம்

❖ தேசிய கணக்காய்வாளர் நாயகம் சுதந்திரமானவரா ?

சாதாரண நிலை

ஆம் . அரசியலமைப்பின் 153 ,154 ம் உறுப்புரைகளுக்கு ஏற்ப ஜனாதிபதியால் நியமிக்கப்படும் கணக்காய்வாளர் நாயகம் நல்ல ஒழுக்கத்துடன் தனது பதவியை தொடர்வார்.

இவர் தனது ஆளணியுடனும் பணத்துடனும் தொடர்புடையவர் இல்லை .

பொருளாதார ரீதியாக கணக்காய்வாளர் நாயகத்தின் திணைக்கள வரவு செலவுத்திட்டம் பாராளுமன்றத்தால் கட்டுப்படுத்தப்படுவதில்லை .இதற்கு நிதியானது நிதி அமைச்சு । திறைசேரி ஊடாக பெறப்படுவதுடன் கூட்டு நிதியம் மூலமாக தேவையான இணக்கம் காணப்படுகின்றது .

கணக்காய்வு அதிகாரிகள் ஜனாதிபதியின் செயலாளரின் கட்டுப்பாட்டிற்குள்ளும் ,கணக்காய்வு அதிகாரிகளின் தரத்திற்கு ஒவ்வாத ஆளணியினர் பொது நிர்வாக அமைச்சின் கட்டுப்பாட்டிற்கும் உரியவர்கள்.

நடைமுறை

பொருளியல் ரீதியாக பின்தங்கிய நிலை காரணமாக திணைக்களங்களுடன் ஒத்துப் போக வேண்டியுள்ளது .வெளிவாரியான கணக்காய்வுகளை மேற்கொள்ளும் போது இத்திணைக்களத்திற்கு போதியளவு வாகன வசதிகள் இன்மை காரணமாக சம்பந்தப்பட்ட திணைக்கள உதவியை நாடவேண்டியுள்ளதால் நடைமுறையில் சுதந்திர தன்மை பேணப்படுவதில்லை .

❖ கணக்காய்வாளர் நாயகத்தின் நியமனம் தொழில் வாண்மை அடிப்படையானதா । சிறப்பு அடிப்படையானதா ?

சாதாரண நிலை

இல்லை .

நடைமுறை.

வழமையில் இது அரச சேவையுடன் தொடர்புடைய சிரேஸ்ட தன்மையையும் ,கணக்காய்வு சான்றிதழையும் அடிப்படையாக கொண்டது .

❖ நியமனம் செய்யப்பட்டவர் முறையான நடுநிலை தீர்ப்பின்றி விலக்கப்படுவதில் இருந்து பாதுகாப்புள்ளதா ?

சாதாரண நிலை

ஆம் . அரசியலமைபின் 153 (01 ) பிரிவின் படி கணக்காய்வாளர் நாயகம் அரவது பதவிக்காலத்தில் சிறப்பான ஒழுக்கத்துடன் தனது பணியை நிறைவேற்றுவார் எனின் அவரை பதவியில் இருந்து அரசியலமைப்பு விதி விதானங்களுக்கு அமையாது பதவி நீக்க முடியாது ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ எல்லா வகையான பொதுச் செலவீனங்களும் வருடாந்தம் கணக்காய்வுக்கு உட்படுத்தப்படுகின்றதா?

சாதாரண நிலை

ஆம் அரசியலமைப்பின் 154 (06 )ம் பிரிவின் படி ஒவ்வொரு வருட கணக்காய்வு கால எல்லை முடிந்து 10 மாதங்களுக்குள் கணக்காய்வு அறிக்கை தேவைப்படுமென கருதுமிடத்து கணக்காய்வாளர் நாயகம் அரசியலமைப்பு ரீதியாக தனது பணியினை நிறைவேற்ற கடமைப்பட்டுள்ளார்.

நடைமுறை .

2002 ம் ஆண்டு வரையிலும் கணக்காய்வு நாயகம் அறிக்கை 3 – 6 வருடங்களாக கணக்காய்வுக்கு உட்பட்டு இருக்கவில்லை .

❖ இப்பொழுது இந்த அறிக்கை பூரணப்படுத்தப்பட்டுள்ளதா ?

சாதாரண நிலை

எவ்வாறெனினும் கணக்காய்வு திணைக்கள அறிக்கைப் படி இது பூரணப்படுத்தப்பட்டு இருக்க வில்லை . இத்திணைக்களம் தனது ஆளணியினருக்கு மேலதிக ஊக்குவிப்பு வழங்கி இதனை நிவர்த்திக்க ஏற்பாடு செய்துள்ளது .

❖ சமர்ப்பிக்கப்பட்ட கணக்கு அறிக்கைகள் பொது கணக்குகள் நிறுவனம் । பாராளுமன்றம் ஆகியவற்றில் விவாதிக்கப்பட்டுள்ளதா ?

சாதாரண நிலை .

ஆம் . இரண்டு நிலையிலும் மிக ஆழமாக விவாதிக்கப்பட்டு உள்ளது .

நடைமுறை .

பொது கணக்குகள் நிறுவனம் , பொது நிறுவன குழுவும் இவ்விடயத்தில் மிகவும் பின் தங்கியே உள்ளது (செயலான்மைமிக்க ஆளணி பற்றாக்குறை , குறைந்தளவிலான பங்குபற்றுகை )

மேலதிக விடயமாக 1977 ம் ஆண்டு தொடக்கம் 2001 வரையிலும் எதிர்கட்சி உறுப்பினர் ஒருவர் இக்குழுவின் தலைவராக செயற்படுதல் மரபு ரீதியாக பேணப்பட்டது .2002 ம் ஆண்டு எதிர் கட்சி தலைமைப் பொறுப்பை ஏற்பதை அரசாங்கம் எதிர்த்தது .

❖ எல்லா வகையான பொதுச் செலவீனங்களும் உத்தியோகப்பூர்வ வரவு செலவு மதிப்பீட்டில் குறிப்பிடப்படுகின்றதா ?

சாதாரண நிலை .

ஆம் .

## நீதித் துறை

❖ நிறைவேற்று துறையின் நடவடிக்கை தொடர்பில் நீதி மன்றம் தீர்ப்பளிக்க முடியுமா ?

சாதாண நிலை .

ஜனாதிபதியை பொறுத்தளவில் நீதி மனறம் தலையீட முடியாது .

பிரதம அமைச்சர்கள், அமைச்சர்கள் தொடர்பில் நீதி மனறம் தலையீட முடியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைமுறை .

வழமையாக அமைச்சரவை பாராளுமன்றத்திற்கு வகை கூற வேண்டியுள்ளது . அரசியல் நிறைவேற்று அதிகாரமிக்கவர்களும் , பொதுத்துறை ஊழியர்களும் நீதிமன்றுக்கு வகை கூறல், வேண்டியுள்ளவர்கள். உதாரணமாக , எப்பாவெல பொஸ்பேட் நிதியம் சம்பந்தமான வழக்கில் 1990 அரசு பிறிபோட் மெக்மோரன் மற்றும் அதன் இனை நிறுவனங்களும் I M C எக்ஸிகோவுடன், செய்துக்கொண்ட உடன்படிக்கை பொஸ்பேட் நிதிய சிதைத்தல் தொடர்பில் உரிமைகள் 30 வருடங்களுக்கு வழங்குதல் கூட்டாக 10 % பங்குரிமை மாற்றம் தொடர்பில் நீதி மன்றம் அமைச்சரவைக்கு எதிராக பொது மக்கள் ஏழு பேரால் தொடரப்பட்டு வழக்கில் மக்களுக்கு சாதகமாக அமைந்தது தீர்ப்பு. (திசாநாயக்க ௨000 , புலங்குலாம எதிர் செயலாளர் ,கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு மற்றும் ஏனையோர் ( ௨000 ) 3 S L R 243 ( S C / F R )

❖ நீதியரசர்கள் ! நீதிபதிகள் சுதந்திரமானவர்களா ?

சாதாரண நிலை .

ஆம் உயர் நீதி மன்ற நீதியரசர்கள் , மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் அரசியலமைப்பு சபையின் சிபார்சின் பேரில் ஜனாதிபதியால் நியமிக்கப்படுவார்கள். அரசியலமைப்பின் 107 (01 ) பிரிவின் படியும் அரசியலமைப்பின் 17 வது திருத்தத்தின் படியும் நீதிச்சேவை ஆணைக்குழு உயர் நீதி மன்ற பிரதம நீதியரசர் மற்றும் ஏனைய இரண்டு உயர் நீதி மன்ற நீதியரசர்களின் இணக்கத்துடன் நீதி மன்ற மாவட்ட நீதியரசர்களை நியமிக்கும் .

நடைமுறை

இரண்டு மசோதாக்கள் பிரதம நிதியரசருக்கு எதிராக வெவ்வேறு சந்தர்ப்பங்களில் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு இருப்பினும் அவை பாராளுமனறம் ஒத்திவைக்கப்பட்டதன் காரணமாக விவாதத்திற்கு எடுக்கப்படவில்லை .( ௨001 – ௨004 காலப்பகுதி )

❖ நியமனங்கள் சிறப்பு சித்தியின் அடிப்படையிலா வழங்கப்படுகிறது ? முறையான தீர்ப்பு இன்றி அகற்றப்படுவதில் இருந்தும் நியமனம் செய்யப்பட்டவரை பாதுகாக்கும் வழி உள்ளதா ?

